ஈழச் சிறுவன் உலகச் சம்பியன்



பக்கம் 27

விலை ரூபா 20

பக்கங்கள் 28

# உதயன்

34c - 27c
தெளிவான காலநிலை

சுடர் 31 | கதிர் 211 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 10, வெள்ளிக்கிழமை 24.06.2016


# வெளிநாட்டு நீதிபதிகளினால் மட்டுமே நீதியைத் தரமுடியும்

## இலங்கையின் நீதித்துறை அரசியல் மயப்பட்டது என நாடாளுமன்றில் தெரிவித்தார் சம்பந்தன்



கொழும்பு, ஜூன் 24
இலங்கையின் நீதித்துறை அரசியல் மயப் படுத்தப்பட்டிருந்தது. இதன் பெறுபேறாக நாடு பாதிப்புக்களைச் சந்தித்திருந்தது. இன் றும் கூட நீதி நிலை நாட்டப்படுவதை உறுதி செய்ய வெளிநாட்டு நீதிபதிகளே தேவை. வெளிநாட்டு நீதிபதிகளினால் மட்டுமே நீதி யைப் பெற்றுத் தர முடியும். மக்களும் இப் படித்தான் கருதுகின்றனர்.
இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவரு மான இரா.சம்பந்தன்.
தகவல் அறியும் சட்ட வரைவு மீதான விவா தம் நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்றது. அதில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.
இரா. சம்பந்தன் மேலும் தெரிவித்ததாவது:
தகவல் அறியும் உரிமைக்கான சட்டமா னது அடிப்படை உரிமைகளையும் ஜன நாயகத்தையும் பலப்படுத்துகின்றது. அரசு, நிறைவேற்று அதிகா ரம், சட்டவாக்கம், நீதித்துறை, பக்.24

# சிறுவர் மீதான துர்நடத்தையை கட்டுப்படுத்துவதற்கு சிறப்புக் குழு

## மாகாண சபையில் நேற்றுத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 24
வடக்கில் சிறுவர்கள் மீதான துர் நடத்தைச் சம்பவங்கள் அதி கரித்து வருகின்றன. இதனை உடனடியாகக் கட்டுப்படுத்துவ தற்குரிய நடைமுறைச் சாத்திய மான செயன்முறையை முன் மொழிய வேண்டும். இதற்கு வடக்கு மாகாண கல்வி - சுகா தார அமைச்சர்கள், அதிகாரி கள், மாகாண சபை உறுப்பினர்கள், பக்.24

# வலி. வடக்கின் சில வீதிகள் பொதுமக்கள் பாவனைக்கு

## நாளை கையளிக்கிறார் பாதுகாப்புச் செயலர்

யாழ்ப்பாணம், ஜூன் 24
மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆல யத்தை அண்மித்த இராணு வத் தின் கட்டுப்பாட்டில் இருந்த சில வீதிகள் மக்களின் பாவ னைக்கு விடுவிக்கப்படவுள்ளன. பாது காப்பு அமைச்சின் செயலாளர் பக்.24

# முன்பள்ளிகள் அனைத்தையும் விடுவிக்கவேண்டும் இராணுவம்

## தீர்மானம் நிறைவேற்றியது வடக்கு மாகாண சபை

யாழ்ப்பாணம், ஜூன் 24
கிளிநொச்சி உட்பட வன்னி மாவட் டங்களில் இராணுவத்தின் சிவில் பாதுகாப்புப் படைகளினால் முன்பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவை அனைத் தையும் இராணுவத் தின் நிர்வாகத்தி பக்.25

# மாணவர் போராட்டத்தின் எதிரொலி அதிபர், 2 ஆசிரியர்கள் மறியலில்

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ். நகரிலுள்ள பாடசாலை ஒன்றில் மாணவியுடன் துர்நடத் தையில் ஈடுபட முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்ட ஆசிரியரையும், சம்ப வத்தை மறைத்த குற்றச்சாட்டில் பக்.23

# மல்லாவியில் நேற்றிரவு பரபரப்பும் பதற்றமும்

## 15 வயதுச் சிறுமி குறித்த சம்பவத்தால் பொலிஸாருடன் மக்கள் முரண்பாடு

கிளிநொச்சி, ஜூன் 24
மல்லாவி - ஒட்டன்குளம் பகுதியில் நேற்று மாலை பதின்ம வயதுச் சிறுமியுடன் தவறாக நடக்க முயன்ற சந்தேகநபரைக் கைது செய்யுமாறு வலியுறுத்தி மல்லாவிப் பொலிஸ் பக்.23

# ரயில் மோதி நேற்றிரவு இளம்பெண் பரிதாபச் சாவு

தென்மராட்சி, ஜூன் 24
கொழும்பிலிருந்து யாழ்ப் பாணம் வந்துகொண்டி ருந்த 'இன்ரசிற்றி' ரயில் மோதி 22 வயது இளம் பெண் உயிரிழந்தார். தென் மராட்சியில் உள்ள ராமாவி லுக்கும் கொடிகாமத்துக்கும் இடையில் சம்பவம் நடந் தது.
ரயிலின் முன்பாக செல்வ ரத்தினம் புனிதா திடீரெனப் பாய்ந்தார் என்று ஆரம்ப விசா ரணைகளில் தெரிய வந்தது என்கின்றனர் பொலிஸார்.
ரயில் மோதியதில் புனிதா வின் ஒரு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது டன், முகத் திலும் பலத்த காயங்கள் ஏற்பட்டன என்று சடலத்தை நேரில் கண்ட உறவினர்கள் தெரிவித்தனர்.
இரவில் பக்.24

# வங்கி கொடுத்த பணத்தில் போலி நாணயத் தாள்களா?

## விசாரணையை ஆரம்பித்தது குற்றப்புலனாய்வுப் பிரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 24
மானிப்பாயிலுள்ள வங்கி ஒன்றின் கிளையில் வாடிக்கை யாளருக்கு வழங்கப்பட்ட பணத்தில் 2 லட்சம் ரூபா வுக்கான 5 ஆயிரம் ரூபாத் தாள்கள் போலியான பக்.24

# 5 மாதங்களில் 3 கொலைகள் 14 பாலியல் வன்கொடுமைகள்

## யாழ். குடாநாட்டில் 5 ஆண்டுகளில் மட்டும் 74 கொலைகள் இடம்பெற்றன என்கிறார் அமைச்சர் சாகல

கொழும்பு, ஜூன் 24
2011ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த மாதம் வரையான (மே 19 ஆம் திகதி வரை) காலப்பகுதி யில் யாழ். குடாநாட்டில் மட்டும் 74 பேர் கொல்லப்பட்டனர். அத் துடன், 184 சிறுமி கள் பாலியல் பக்.23

# ஐந்தே மாதங்களில் 558 கிலோ கஞ்சா சிக்கியது வடக்கில்

கொழும்பு, ஜூன் 24
வடக்கு மாகாணத்தில் கடந்த ஜனவரி தொடக்கம் மே மாதம் வரையான காலத்தில் மேற் கொள்ளப்பட்ட 22 சுற்றிவளைப் புக்களில் கஞ்சா மற்றும் கேரளக் கஞ்சா என்பன சேர்ந்ததாக 558 கிலோ போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன.
இவ்வாறு நேற்று நாடாளுமன் றில் தெரிவித்தார் சட்டம் மற்றும் பக்.25


போன் ஒன்று பேர்சாக மாறியது

Digitized by Noolaham Foundation



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கிராமிய வங்கிகளின் சமாச சிமெந்து விநியோகத்தில் மோசடி

## வடக்கு மாகாண சபை நியமித்த விசாரணைக் குழு கண்டறிவு

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்தின் சிமெந்து விநியோகத்தில் திட்டமிட்ட மோசடிகள் நடந்துள்ளன. வடக்கு மாகாண சபையால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் குழு இதைக் கண்டறிந்தது. அந்த விசாரணை அறிக்கை சபையில் நேற்று முன்வைக்கப்பட்டது.

விசாரணை அறிக்கையை விசாரணைக் குழுவின் தலைவர் அரியரட்ணம் சபையில் முன்வைத்தார். அதில் பரிந்துரைகள் குறிப்பிடப்பட்டிருந்தன.

சமாசத்தால் மேற்கொள்ளப்பட்ட சிமெந்து விநியோகம், கடன் அடிப்படையிலும் பிற் திகதியிடப்பட்ட காசோலைகள் மூலமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்க விதிகளின்படி கடன் விற்பனை செய்வதோ - பிற்திகதியிடப்பட்ட காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதோ தவறான நடவடிக்கைகளாகும்.

அங்கீகரிக்கப்பட்ட முகவர்களுக்கு கடன் விற்பனை செய்வதற்கு இயக்குநர் சபையின் அனுமதி பெறப்பட்டது. ஆனால் மாகாண கூட்டுறவு உதவி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படவில்லை. காசோலைகள், அங்கீகரிக்கப்பட்ட சமாசத்தின் பெயரில் எழுதப்படவில்லை. றொக்கம் எனக் குறிப்பிடப்பட்டு எழுதுவதும் கூட்டுறவு விதிகளுக்கு முரணானது.

சமாசத்தின் உப விதிகளில் கடனுக்கு பொருள்கள் விற்பனை செய்வது பற்றியோ முகவர்களுக்கு விநியோகம் செய்வது பற்றியோ குறிப்பிடப்படவில்லை. கடன் விற்பனை மூலம் வழங்கப்பட்ட சிமெந்தின் பெறுமதிக்கு முகவரால் வழங்கப்பட்ட காசோலைகள், பணம் இல்லை என்று வங்கியால் திருப்பி அனுப்பப்பட்டவுடன் அது பற்றி சமாசத் தலைவருக்கும் பொலிஸ் விசேட மோசடிப்பிரிவுக்கும் அறிவித்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யப்படவில்லை. குறித்த தொகையை அறவிடுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மீண்டும் பிற்திகதியிடப்பட்ட காசோலைகளைப் பெற்றுக் கொண்டு சிமெந்து விநியோகம்மேற்கொள்ளப்பட்டுஅவையும் தொடர்ச்சியாக வங்கியில் பணம் இல்லை என்று திருப்பி அனுப்பப்பட்டன. அவற்றுக்கும் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்காததால் 29 லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டது.

சிமெந்து வாங்கியவர்கள் காசோலையை வழங்கிவிட்டுத் தொடர்பு கொள்ள முடியாதவாறு தலைமறைவாகியுள்ளனர். விநியோகம் பற்றி பொது மக்களது முறைப்பாடுகள் முறைப்பாட்டுக் குழுவுக்கு கிடைத்ததால் முகாமையாளர் காலம் தாழ்த்தி நீதிமன்ற நடவடிக்கையை நாடினார்.

காசோலைகள் தொடர்பான முறைப்பாடுகள், பொலிஸ் விசேட மோசடிப் பிரிவுக்குள்ளாக குற்றவியல் சட்டத்தின்கீழ் வழக்கைப் பதிவு செய்யாமல் காசாலை வழங்கியவர்களில் ஒருவருக்கு எதிராக மாத்திரம் சிவில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த விசாரணை நீண்ட காலத்துக்குத் தாமதமடைய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சிமெந்தை சரியான முறையில் விநியோகித்து சமாசத்துக்கான வருமானத்தை ஈட்டியிருந்தால் இன்னும் வியாபாரத்தைப் பெருக்கி சமாசத்துக்கான வருமானத்தை அதிகரித்திருக்கலாம். அதை வங்கியில் வைப்பில் இட்டிருந்தால் கூட முதலுடன் கூடிய கணிசமான இலாபமும் சங்கத்துக்குக் கிடைத்திருக்கும். கூட்டுறவுச் சமாச முகாமையாளரது இத்தகைய செயலானது சமாசத்துக்கு தொடர் நட்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

சிமெந்து கடன் விற்பனையில் சமாசத்தின் முகாமையாளரும் இயக்குநர் சபையுமே நட்டத்தைப் பொறுப்பேற்க வேண்டும்.

சிமெந்து விநியோகம் தொடர்பாக முகாமையாளரே சகல முடிவுகளையும் தன்னிச்சையாக மேற்கொண்டுள்ளார். கடன் விற்பனைக்கான அனுமதியை இயக்குநர் சபை பெற்றபோதும் இந்த விநியோகம் அங்கீகரிக்கப்பட்ட முகவர் அல்லாதோருக்கும் தன்னிச்சையாகச் செய்யப்பட்டுள்ளது. விநியோகம் பற்றி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு அங்கீகாரமும் தகவலும் தரப்படவில்லை. இது ஒரு அதிகார துஷ்பிரயோகம். சகல செயற்பாடுகளுக்கும் பொறுப்பான சமாச முகாமையாளர் உடனடியாகப் பணி நீக்கம் செய்யப்பட வேண்டும்.

சமாசத்தின் அங்கீகரிக்கப்பட்ட உப விதிகளில் உள்ளடக்காது கடன் விற்பனைக்கு அனுமதி அளித்த இயக்குநர் சபை கலைக்கப்பட வேண்டும்.

பொது மக்களிடம் இருந்து பெறப்பட்ட பணத்தின் மூலம் சமாசத்தின் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. தன்னிச்சையாக முடிவுகளை மேற்கொண்ட முகாமையாளரின் செயற்பாட்டால் சங்கத்துக்கு 29 லட்சம் ரூபா முதலும் இன்று வரையான வட்டியும் இழப்பு ஏற்பட்டுள்ளது. நீதிமன்றநடவடிக்கைகளுக்கும் சமாசத்தின் பணமே விரயமாகிக் கொண்டிருக்கின்றது. சங்கத்துக்கு ஏற்பட்ட சகல நட்டங்களும் முதலும் வட்டியுமாக முகாமையாளரிடம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்று பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன், மாகாண சபையின் அடுத்த மாத அமர்வில் மேல் நடவடிக்கை அறிக்கை சமர்பிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-5)

# பொதுக் குழு அறிக்கை விவாதிக்கப்பட்டால் அனைத்து அமைச்சர்களும் விலக நேரிடும்

## அதனால் அது தவிர்க்கப்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 24
வடக்கு மாகாண கணக்காய்வுப் பொதுக்குழு அறிக்கை விவாதத்துக்கு உட்படுத்தப்படவேண்டும். விவாதத்துக்கு அது எடுக்கப்பட்டால் மாகாணத்தின் அனைத்து அமைச்சர்களும் பதவி விலக நேரிடும். உங்களுக்கு வேண்டியதை மாத்திரம் சபை அமர்வில் எடுக்கின்றீர்கள். அதையும் சபையில் எடுத்துக்கொள்ளுங்கள்.

இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

எதிர்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மறுதலித்தார். சபை விவாதத்துக்குக் கோரினால் அதனை விவாதிப்பதற்குத் தான் தயார் என்றும் பதிலளித்தார்.

வடக்கு மாகாண சபையின் 55 ஆவது அமர்வு நேற்று இடம் பெற்றது. அதில் கூட்டுறவுத் துறையில் இடம்பெற்ற மோசடி தொடர்பிலான விசாரணை அறிக்கை சபையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் மீதான சபை விவாதம் முடிவடைந்த பின்னர் எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா சபையில் மேற்படி விடயத்தை எழுப்பினார்.

கடந்த அமர்வில் 4 அறிக்கைகள் நிகழ்சிநிரலில் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால் ஒன்றை மாத்திரம் இந்த அமர்வில் எடுத்துள்ளீர்கள். ஏன் மற்றைய அறிக்கைகளை எடுக்கவில்லை?.

கூட்டுறவுத்துறை மீதான மோசடியை விவாதித்து விட்டு அந்த அமைச்சரைப் பதவி விலகக் கோருகின்றீர்கள். மாகாண கணக்காய்வுப் பொதுக்குழு அறிக்கையை விவாதித்தால், இங்குள்ள அனைத்து அமைச்சர்களும் பதவி விலக வேண்டி வரும் - என்றார் எதிர்க்கட்சித் தலைவர்

அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் "என் மீது குற்றம் சுமத்தாதீர்கள்"- என்றார்.

மாகாண கணக்காய்வுப் பொதுக் குழு அறிக்கை கடந்த அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டது. அதனை அவை அங்கீகரித்து விட்டது- என்றும் அவைத்தலைவர் கூறினார்.

எதிர்கட்சித் தலைவர், இல்லை கடந்த அமர்வில் அது அங்கீகரிக்கப்படவில்லை எனக் கூற அவைத் தலைவர் அது அங்கீகரிக்கப்பட்டு விட்டது என்று குறிப்பிட்டார்.

எதிர்கட்சித் தலைவர் சி.தவராசா, அதையும் இன்று போன்று விரிவாக ஆராய்ந்திருக்கலாம் என்றார்.

சபையில் எவரும் அவ்வாறு கோரவில்லை என்றார் அவைத் தலைவர். அதற்கான கோரிக்கையை முன்வைத்தால் அதனடிப்படையில் செயற்படலாம் என்றும் அவைத் தலைவர் கூறினார்.

(ற-ஐ-5)

# மோசடிக்குப் பொறுப்பேற்று அமைச்சர் விலகவேண்டும்

## ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 24
கூட்டுறவுத் துறையில் இடம் பெற்ற மோசடிக்கு, அதற்குப் பொறுப்பான அமைச்சர் பொறுப்பேற்க வேண்டும். இந்தியாவில் ரயில் விபத்து ஏற்பட்டால் அதற்குப் பொறுப்பான அமைச்சர் பதவி விலகுவார். அதே போன்று இந்தச் சம்பவத்துக்கும் பொறுப்புக் கூற வேண்டும்.

இவ்வாறு ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டக் கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசத்தால் மேற்கொள்ளப்பட்ட சிமெந்து விநியோக மோசடி தொடர்பில் சபையில் விவாதம் இடம்பெற்றது.

இந்தியாவில் ரயில் விபத்து ஏற்பட்டால் அதற்குப் பொறுப்பான அமைச்சர் பதவி விலகுவார் என்று ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் ஆரம்பித்தார்.

இடைமறித்த கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நீங்கள் சொல்வதைப் பார்த்தால் பாடசாலைகளில் ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படும் பாலியல் துஷ்பிரயோகச்சம்பவங்களுக்கு கல்வி அமைச்சரைப் பதவி விலகச் சொல்வீர்கள் போலிருக்கின்றதே- என்றார்.

சபையில் சிரிப்பொலி எழுந்தது.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அஸ்வின், அமைச்சர் ரயில் ஓடியிருக்க மாட்டார். ஆனால் விபத்து ஏற்பட்டு பெரிய சேதம் ஏற்பட்டால் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர் என்ற அடிப்படையில் அமைச்சர் தனது பதவியை விட்டு விலகுவார். இங்கு அமைச்சர் கூட்டுறவுத் துறை மோசடிக்குப் பொறுப்புக் கூற வேண்டும் - என்றார்.

(ற-5)

# சொந்தச் சின்னத்தில் ஈபிடிபி போட்டியிடச் சுதந்திரம் தந்தவர் நாம்

## வடக்கு எதிர்க்கட்சித் தலைவருக்குச் சுட்டிக்காட்டினார் ஆளும் கட்சி உறுப்பினர்

யாழ்ப்பாணம், ஜூன் 24
நீங்கள் உங்கள் கட்சியின் சின்னத்தில் போட்டியிடுவதற்கு சுதந்திரம் வாங்கித் தந்தவர்கள் நாங்கள். நன்றி கெட்டதனமாகப் பேசாதீர்கள்.

இவ்வாறு ஆளும் கட்சி உறுப்பினர் கேசவன் சயந்தன், எதிர்கட்சித் தலைவர் சி.தவராசாவிடம் கூறினார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று இடம் பெற்றது. அதில் வேலை வாய்ப்புத் தொடர்பில் விவாதம் நடந்தது. முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பலருக்கு வேலை வாய்ப்புக்களை உருவாக்கி வழங்கினார் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் தெரிவித்தார். ஆளும் கட்சி உறுப்பினர்கள் பலர், வழங்கப்பட்ட வேலை வாய்ப்புக்கள் மோசடியாக வழங்கப்பட்டன என்று தெரிவித்தனர். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்தச் சந்தர்பத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன் எழுந்தார்.

"நன்றி கெட்டதனமாகப் பேசாதீர்கள். நீங்கள் உங்கள் கட்சியின் சின்னத்தில் (ஈ.பி.டி.பி. வீணைச் சின்னம்) போட்டியிடுவதற்கு சுதந்திரம் வாங்கித் தந்தவர்கள் நாங்கள் தான்" என்றார். சபையில் பெரும் சிரிப்பொலி எழுந்தது.

ஆளும் கட்சி உறுப்பினரின் இந்தக் கருத்துக்கு எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவும் சிரித்தார். (ற-ஐ-5)

## தேசிய போசணை மாதம் ஜூன் - 2016

இரும்புச் சத்தானது, கடும் பச்சை நிற இலைவகைகளில் அதிகம் உள்ளது.

இது மூளையின் நுண்ணறிவுத் திறனை அதிகரிக்கும். இதன் குறைவால் குருதிச்சோகை நோய் ஏற்படும். கர்ப்பிணிகளில் இதன் குறைவால் சுகப் பிரசவம் ஏற்படுவதைப் பாதிக்கும். உணவு உண்ட பின் புளித்தன்மையான பழங்களை உண்பதால் இதன் அகத்துறிஞ்சலை அதிகரித்துக் கொள்ளலாம். உணவின் பின் தேநீர் அருந்துவதனால் இதன் அகத்துறிஞ்சல் குறைவடையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் குற்றங்கள் பெருக தமிழ் திரைப்படங்களே காரணம்

## இப்படிச் சொல்கிறார் அமைச்சர் சாகல

கொழும்பு, ஜூன் 24

யாழ். குடாநாட்டில் வாள் வெட்டுக்குழுக்கள் – குண்டர் குழுக்கள் உருவாகுவதற்குத் தென்னிந்திய திரைப் படங்களே காரணமாகவுள்ளன என்று சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்கள் தொடர்பில் இரு குழுக்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இதுபோன்ற குற்றச் செயல் களைத் தடுப்பதற்காக புலனாய்வுத் தகவல்களி னூடாக பரந்தளவிலான விசாரணைகளும் நடவடிக் கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் குற்றச் செயல்கள் குறித்து நாடாளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் சாகல மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

தென்னிந்திய திரைப்படங்களைப் பார்க்கும் யாழ்ப் பாண இளைஞர்கள், அதில் வரும் குண்டர்கள் போல குழுக்களாகச் சேர்ந்து யாழ். குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களில் சுற்றித் திரிந்து குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

குடாநாட்டில் குற்றச் செயல்கள் தொடர்பில் கைது செய் யப்பட்ட தனி நபர் மற்றும் குழுக்கள் தொடர்பில் நடத் திய விசாரணைகளின் போதே, இந்த விடயம் புலனா கியது. இவ்வாறு கைது செய்யப்பட்ட வர்கள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஆவா என்ற பெயரில் அடையாளப்படுத்தப் பட்ட ஆறுபேர் கொண்ட குழு சுன்னாகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டது. சந் தேக நபர்களான நடராஜா குமரேஷ்வரன், செல்வரட்ணம் தருணன், ஆனந்தராஜா கஜீபன், கோணேஸ்வரன் கிரிசாந், கும ரேஷ்வரன் வினோதன் எனப்படும் குமரே, ரத்னம் விநோஜன் எனப்படும் ஆவா மற் றும் சோதிராஜா அநோஜன் ஆகியோர் வீட்டுகளுக்குள் அத்துமீறி நுழைதல், தாக்கி காயப்படுத்துதல், வாளால் வெட்டி பெரிய படுகாயம் ஏற்படுத்தல் ஆகிய சம் பவங்கள் தொடர்பில் கைது செய்யப்பட்ட னர். அவர்கள் மல்லாகம் நீதிமன்றில் முன் னிலைப்ப டுத்தப்பட்டு, குற்றம் நிருபிக்கப்பட் டுச்சிறைத்தண்டனை அனுப விக்கின்றனர்.

மானிப்பாய் பகுதியில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பில் மேற்படி குழுவுடன் தொடர்பு டைய 12 பேர் கைது செய்யப்பட்டுபிணை யில் விடுவிக் கப்பட்டனர். இருப்பினும், சந்தேகநபர்கள் மூவரைக் கைது செய்யவிசாரணைகள்இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஆவா குழுவிலிருந்து பிரிந்து சென்றதாகச் சந்தேகிக் கப்படும் மற்றொருகுழு கடந்த மாதம் 8 ஆம் திகதி யாழ்ப்பாணப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டது. 7 குற்றச் செயல்கள் தொடர்பில் இந்தக் குழுவைச் சேர்ந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குழு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசார ணைகளில் அந்தக் குழுவுடன் அரசியல்வாதி ஒருவ ரின் மகன் தொடர்புபட்டுள்ளார். இந்தக் குழுவுக்கு சுவிற்சர்லாந்திலிருந்து நிதி உதவி கிடைக்கின்றது என்பது தொடர்பில் தகவல் தெரியவரவில்லை. கைது செய்யப்பட்ட அந்தக் குழுவின் சந்தேக நபர்களது வங்கிக் கணக்கு தொடர்பான அறிக்கை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன.

பிரிந்து சென்றதாகக் கருதப்படும் குழுவில் பாடசாலை மாணவர்கள் இருக்கின்றார்களா என்பது தெரியவர வில்லை.

இந்தக் குழு மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருவதுடன், இதுபோன்ற குழுக்களின் செயற்பாடுகளைத் தடுப்பதற்காகப் புலனாய்வு பிரிவினரால் தகவல் சேகரிக்கப்பட்டு குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன – என்றார். (வ–4)

## கிறிஸ்தவ நாகரிக பாடக் கருத்தமர்வு

க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் கிறிஸ்தவம் மற் றும் கிறிஸ்தவ நாகரிகம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக் கான இரண்டு நாள் பரீட்சை வழிகாட்டிக் கருத்தரங்கு நாளையும் மறு நாள் ஞாயிற்றுக் கிழமையும் காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை மறைக் கல்வி நடுநிலைய மண்டபத்தில் நடை பெறும். மேற்படி பாடங்களுக்குத் தோற்றவிருக்கும் மாணவர்கள் இந் தக் கருத்தமர்வில் பங்குபற்றி பயன டையுமாறு யாழ். புனித மரியன்னை பேராலய இளை ஞர் உருவாக்கல் இயக்கம் கேட்டுள் ளது. (உ)

பாராட்டி வாழ்த்துகின்றேன்
திரு.டென்சில் சேவியர் சுவைனஸ் SLPS III
BA.Dip in Psychology(merit),Dip.in fi.Science (merit), Sp.trd.water biore.)

கடந்த 17.06.2016 அன்று கொழும்பு டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியில் கௌரவ கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அவர்களிடம் அதிபர் தரம் III பதவிக்கான நியமனத்தைப் பெற்றுக் கொண்ட
திரு.டென்சில் சேவியர் சுவைனஸ் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல உயர்வுகளைப் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றேன்.
வாழ்த்துபவர்: குட்டிமாமா
(J/2878) (11.16)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலங்கை அதிபர் சேவைக்கு (SLPS) பதவி உயர்வு பெற்ற எம் ஆசான்
திரு.பரமநாதன் கமலதாசன்
BA(Cey),MEd (Hons),PGDE, PGDM, MA in Eco., SPI Trd Com
அவர்களைப் பாராட்டுவதோடு இன்னும் பல பதவி உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.
ஞானோதயம் நூலாசிரியர்கள்
திரு. செ. வினோத்குமார், திரு.செ.திலக்

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 514
சீட்டிழுப்பு திகதி 2016.06.23
வெற்றி இலக்கங்கள்
15 28 56 73 M
அடுத்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 60,581,500/=

மணமகள் தேவை
கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 29 வயதுடைய புத்தளத்தில் வசிக்கும் தனியார் துறையில் தொழில் புரியும் மணமகனுக்கு 25 வயதுக்கு உட்பட்ட சிவந்த நிறமுடைய அழகான தோற்றமுடைய மணமகள் தேவை. மணமகள் ஆசிரியை அல்லது தனியார் துறை சார்ந்வர்கள் விரும்பத்தக்கது.
072 5798708, 078 896 3775

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1273
சீட்டிழுப்பு திகதி 2016.06.23
வெற்றி இலக்கங்கள்
16 17 54 56 I
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 17,933,460/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சென்றல் பினான்ஸ்
வாகன சந்தை
இந்த மதிப்புமிக்க வாய்ப்பை தவறவிடாதீர்கள்
"நிபந்தனைக்குட்பட்டது"
2016 ஆனி
உட்செல்லல் இலவசம்
25ம் 26ம் திகதிகளில்
இடம் : சென்றல் பினான்ஸ் யாழ்ப்பாணக்கிளை
364, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
077 210 8780, 0777393881, 0766713897

வாழ்த்துகின்றோம்
Best Wishes

T. கென்றிறீகன்

L.I. றோகன்
அதிபர் பதவியைப் பெற்றுக்கொண்ட எம்மவர்களை வாழ்த்துகின்றோம்.
அந்தோனியார் குடும்பம்
புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.
(J2371)(10)

யாழ். மாவட்ட பளுதூக்கும் சங்கம்
இலங்கை பளுதூக்கும் சம்மேளனத்தின் ஆதரவுடன் நடத்தும்
தேசிய மட்ட பளுதூக்கும் போட்டி–2016
National Level Weight Lifting Championship
காலம்: 25.06.2016
நேரம் : காலை 7.00 மணிமுதல்
இடம் : யா/இந்து மகளிர் கல்லூரி

பிரதம விருந்தினர்
கௌரவ த.குருகுலராசா
(வடமாகாண கல்வி, விளையாட்டுத்துறை அமைச்சர்)
சிறப்பு விருந்தினர்கள்
கௌரவ இ.ஆனல்ட்
(வடமாகாண சபை உறுப்பினர்)
திரு. க. சத்தியபாலன்
(பிரதிக்கல்விப் பணிப்பாளர் உடற்கல்வி, வடமாகாண கல்வித்திணைக்களம்)

கௌரவ விருந்தினர்
திரு.எட்வின் குணரட்ணம்
(செயலாளர். லண்டன் தமிழ் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம்)
தலைமை
திரு. மா. இளம்பிறையன்
(தலைவர் யாழ். மாவட்ட பளுதூக்கும் சங்கம்)
ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
ஊடக அனுசரணை உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்களுக்கு இரசாயனம் விசிறினால் நடவடிக்கை

யாழ்ப்பானம், ஜூன் 24

திருநெல்வேலி மற்றும் கொக்குவில் சந்தைகளில் விற்பனைக்கு வரும் பழங்களில் இரசாயனப் பதார்த்தம் பயன்படுத்தப்பட்டிருக்கக்கூடாது. இதனை மீறி யாராவது விற்பனை செய்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நல்லூர்பிரதேச சபை அறிவித்துள்ளது.

இரசாயனப் பதார்த்தம் பயன்படுத்தப்படும் பழங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மக்கள்நோய்த்தாக்கத்துக்கு முகம் கொடுக்கின்றனர். சந்தையில் விற்பனை செய்யப்படும் பழவகைகளுக்கு எவ்வித இரசாயனப் பதார்த்தமும் பயன்படுத்தி விற்பனை செய்ய வேண்டாம்.

அவ்வாறு விற்பனை செய்யப்படுவது கண்டறியப்பட்டால், அவர்கள் மீது உடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் – எனச் சபை தெரிவித்தது.

(ந–ஐ)

ஆசிரிய தொழிலுக்கான தொழிற்பயிற்சி
தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையின்
NVQ தரம் - 4 (தேசிய தொழிற்பயிற்சி சான்றிதழ்)
"Dip in Teaching"

* வேலையற்றிருக்கும்
  I. க.பொ.த.சாதாரண தரத்தில் 5 பாடங்களுடன்
  II. க.பொ.த.சாதாரணதர சித்தி
  III. க.பொ.த.உயர்தர சித்தி

ஆகியோர் ஆசிரிய தொழிலுக்கான முன் சேவைப்பயிற்சி

* சனி,ஞாயிறு தினங்களில் 6 மாதங்கள் வாண்மைத்துவக் கல்வி
* பாடசாலைகளில் ஆசிரியர் கற்பித்தல் பயிற்சி 6 மாதங்கள்
* ஆரம்பக்கல்வி
* ஆங்கிலம்
* முன்பள்ளி

பயிற்சி நிறைவு செய்ததும், தனியார், சர்வதேச, அரசாங்கப் பாடசாலை தேவைகளுக்கு (பழைய மாணவர்கள் அனுசரணையாளர்கள் மூலம்) பொருத்தமான வேதனத்துடன் நியமனம் பெற்றுக் கொள்ள வழிகாட்டப்படும்.

* தொடர்ந்து NVQ 5,6,7 பட்டதாரி ஆசிரியராகும் வரையான பயில்வுக்கும் வழிகாட்டப்படும்.
* புதிய பிரிவு விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

பதிவுகளை மேற்கொள்ள
கலாநிதி பா.தனபாலன் (பணிப்பாளர்)
077 068 1958
ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்,
528, பலாலி வீதி, திருநெல்வேலி.
(செ/2368) (11.18)

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்
CEYLON THEATRES




விசாரணை ☎ 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

# INVITATION FOR BID
# MUNICIPAL COUNCIL JAFFNA

1. The Chairman, Local Authority Procurement Committee on behalf of the Jaffna Municipal Council, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building or road construction whatever the case may be for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Interested bidders may obtain further information from **Engineer, Municipal Council, Jaffna (T.No: 021-2216468)** and inspect the bidding documents at the same place on any working days from 9.00 hrs to 16.00 hrs. from **28.06.2016**
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Works Engineer's Office, Jaffna Municipal Councilfrom28.06.2016 until 12.07.2016 from 9.00 hrs to 14.00 hrs upon payment of a non-refundable fees of Rs.2,000.00 + VAT** The method of payment should be by cash.
6. Bids shall be delivered or sent by registered post to the **Commissioner, Jaffna Municipal Council on or before 14.00 hrs on 12.07.2016.**Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.

| Bid No | Description of Work | Engineer's Estimated Cost /(Rs in million) | Estimated Cost with all Taxes /(Rs in million) | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount | Valid Period |
| NP/JF/JfMC/2016-(c)/01 | Construction of Concrete Road at Old Park Road. | 1.153 | 1.375 | 3 Months | C 9 or above (Roads) | 12,000.00 | 91 days (till 10.10.2016) |
| NP/JF/JfMC/2016-(c)/02 | Improvement of ChemmaniOlunkai at Ariyalai Centre. | 2.797 | 3.050 | 3 Months | C 8 or above (Roads) | 28,000.00 | 91 days (till 10.10.2016) |
| JMC/WD/01/CF.Bu/ 2016/50 | Construction of Library Building at Navanthurai, Stage - II | 3.661 | 4.400 | 3 Months | C8 or above (Buildings) | 37,000.00 | 91 days (till 10.10.2016) |

***Chairman / Commissioner***
***Local Authority Procurement Committee,***
***Municipal Council,***
***Jaffna.***
***24.06.2016***

(C.22086) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 24

அமரர் பேராசிரியர் இரா.வை.கனகரத்தினத்தின் நினைவுரையும், சைவ வித்தியாரத்தினத்தின் நீள நினைதல் மலர் மற்றும் அவரது நினைவு மலர் என்பவற்றின் வெளியீடுகள் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு ஏழாலை தெற்கு மேற்கு முத்தமிழ் மன்றத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின் மூத்த விரிவுரையாளர் முருகேசு கௌரிகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் நூலின் நயப் புரையை ந.குழந்தைவேல் நிகழ்த்துவார். (ந–ரி)

## சுற்று சூழல் தினம் இன்று

வலி. மேற்கு பிரதேச சபையும், வேள்ட் விசன் நிறுவனமும் இணைந்து நடத்தும் உலக சுற்றுச் சூழல் தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வலி.மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலக கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் திருமதி குணவதி சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான ஈ.சரவணபவனும், சிறப்பு விருந்தினராக வேள்ட் விசன் நிறுவன யாழ்ப்பாண திட்ட இணைப்பாளர் வெ. அலெக்ஸ்றோஜ்ஜும் கலந்துகொள்ளவுள்ளனர். (ந–ஐ–ரி)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 24

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கல்லூரி அதிபர் மு.கனகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. (ந–ஐ–422)

## பொலிஸ் அதிகாரிகளின் மறியல் நீடிப்பு

றக்பி வீரர் வசீம் தாஜுதீனின் கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள, பொலிஸ் அதிகாரிகள் இருவரதும் விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனநாயக்க, நாரஹென்பிட்டி குற்றத் தடுப்புப் பிரிவு முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் சம்பிக்க ஆகியோரே தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். இவர்கள் கொழும்பு மேலதிக நீதிவானிடம் நேற்று முற்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டு வசீம் தாஜுதீன் விபத்தில் உயிரிழந்தார் என்று கூறப்பட்டபோதும், அவர் கொலை செய்யப்பட்டார் என்று கண்டுபிடிக்கப்பட்டது. (ந–ஐ–4)

நாய்க்குட்டி விற்பனைக்குணடு
நல்ல இன கிறேப்டன்
நாய்க்குட்டி (C/22057)(12.18)
077 209 6037

வீடு வாடகைக்குத் தேவை
யாழ்.நகரில் அல்லது அதை அண்மித்த பகுதிகளில் சிறிய நிறுவனம் ஒன்றுக்கு வாடகைக்கு (3 அறைகள் உள்ள) வீடு தேவை. மேல்மாடியில் உள்ள இடமாயினும் சரி உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். (C/22057)(11.17)
077 730 2882

வைரஸ் பிறிண்டேர்ஸ்
கே.கே.எஸ் வீதி, இணுவில்.
அச்சுத்துறையில் அனுபவமுள்ளவர்களுக்கு பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.
+ ரைப்பிங் (Computer Typing -Tamil)
+ கிரபிக்ஸ் டிசைனர் (CorelDraw /Photoshop)
அனுபவமுள்ளவர்கள் நேரில் சமூகம் தரவும்
தொடர்பு : 021 224 1815

# தென் சீனக் கடல் விவகாரத்தில் சீனா பக்கம் சாய்கிறது இலங்கை

## அமெரிக்கா தலையிடக்கூடாது என்கின்றது

கொழும்பு, ஜூன் 24

தென் சீனக்கடல் விவகாரத்தில் தலையீடு செய்வதை அமெரிக்கா நிறுத்தவேண்டும்.

இவ்வாறு பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

சீனாவின் சின்ஹூவா செய்தி நிறுவனத்துக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.அவர் கூறியதாவது:

பிராந்தியத்தின் அமைதி, பாதுகாப்பு, உறுதிப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கவேண்டும். இதற்கு தென் சீனக் கடல் விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீடுகள் நிறுத்தப்படவேண்டும்.

தனது நட்பு நாடுகளுடன் இணைந்து, சீனாவைத் தனிமைப்படுத்துவதையும் அமெரிக்கா நிறுத்திக் கொள்ளவேண்டும்.

நாடுகளுக்குள் பிளவுகளை ஏற்படுத்தி, ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் அமைதி, உறுதிப்பாடு, பாதுகாப்பை பலவீனப்படுத்தும் முயற்சிகளையும் அமெரிக்கா நிறுத்தவேண்டும்.

தென் சீனக் கடல் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட நாடுகள், எவ்வாறு தீர்வு காணலாம் என்று பேச்சு நடத்தி, ஒருவரின் கருத்தை மற்றவர் செவிமடுக்க வேண்டும்- என்றார்.

தற்போதைய அரசு இதுவரை தென் சீனக்கடல் விவகாரத்தில் நடுவலான நிலைப்பாட்டையே வகித்து வந்தது. பாதுகாப்புச் செயலரின் இந்தக் கருத்து முற்றிலும் சீன சார்பு நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது. (ற-ஜ-5)

# மகிந்த தனியாகத் திருட வேண்டிய அவசியம் ஏதும் இருக்கவில்லை

## ராஜபக்சவினரே திருடினர் என்கிறார் ராஜித

கொழும்பு, ஜூன் 24

மகிந்த ராஜபக்ச திருடினார் என்றே நாங்கள் எங்கும் குறிப்பிடவில்லை. ராஜபக்சவினரே கொள்ளையடித்தனர் என்றே தெரிவித்திருந்தோம்.

இவ்வாறு சுகாதார அமைச்சரும், அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

அதில் ஊடகவியலாளர் ஒருவர், "முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, தான் ஒரு டொலராவது மோசடி செய்துள்ளதாக நிரூபிக்கப்பட்டால் தனது கழுத்தை அறுத்துக்கொள்வேன் என்று கூறினார். இது தொடர்பில் தங்கள் கருத்து என்ன?"- என்று அமைச்சரிடம் கேட்டார்.

"மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக எந்தவொரு தனிப்பட்ட குற்றச்சாட்டையும் நாம் முன்வைக்கவில்லை. அவர் தனிப்பட்ட முறையில் மோசடிகளில் ஈடுபட்டார் என்று நாம் எந்த இடத்திலும் தெரிவிக்கவும் இல்லை.

ராஜபக்சவினர் கொள்ளையடித்துள்ளனர் என்றுதான் கூறியுள்ளோம். இவர்கள்தான் மோசடிகளில் ஈடுபட்டவர்கள். முன்னாள் ஜனாதிபதி நாட்டின் பணத்தை திருடியிருக்க வேண்டுமெனில், தனியாகத்தான் திருடியிருக்க வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. யார் திருடியது என்று எங்களுக்குத் தெரியும்- என்றார். (ற-ஜ-5)

# புதிய கட்சி ஆரம்பிக்கும் திட்டங்கள் ஏதுமில்லை

## மகிந்த எம்.பி. கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 24

புதிய கட்சி ஒன்றை உருவாக்கும் திட்டம் தம்மிடம் இல்லை என்று முன்னாள் ஜனாதிபதியும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள, நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன் பிலவை மகிந்த ராஜபக்ச வெலிக்கடை சிறைச்சாலையில் நேற்றுச் சென்று பார்த்தார். பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தார். "ஒன்றிணைந்த எதிர்க்கட்சி என்ற ஒரு கட்சி உருவாக்கப்பட்டுள்ளது. புதிதாக கட்சி உருவாக்கும் எண்ணமில்லை. என்ன நடக்கப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் அரசுடன் இணையப் போகின்றனர் என்று கூறப்படுவதில் உண்மையில்லை. ஒன்றிணைந்தஎதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் கைது செய்யப்படுவது முற்றிலும் அரசியல் பழிவாங்கல் என்றே கருதுகிறோம்.- என்றார். (ற-ஜ-4)

# போதையற்ற நாட்டை உருவாக்க கிளிநொச்சியில் நேற்று விழிப்புணர்வு

கிளிநொச்சி, ஜூன் 24



போதை அற்ற நாட்டை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு செயற்றிட்டம் கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது.

முற்பகல் 10 மணியளவில் கரைச்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில், கிளிநொச்சி மாவட்ட சமுதாய சீர்திருத்தத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

கரைச்சிப் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இந்தச்செயற்றிட்டமானது, சமுதாய சீர்திருத்தக் கட்டளைக்கு உட்பட்டவர்களுக்காக ஒழுங்குபடுத்தப்பட்டது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்

நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் எ.ஏ. ஆனந்தராஜா கலந்து கொண்டார். வளவாளர்களாக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், உள வளத் துணை உத்தியோகத்தர், சட்ட உதவி ஆணைக்குழு உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சமுதாய சீர்திருத்தக் கட்டளைக்கு உட்பட்டவர்கள், கிராம சேவையாளர்கள், கிளிநொச்சி மாவட்ட சமுதாய சீர்திருத்த திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ற-ஜ-4)

# மருத்துவ சேவை வற் வரியை நீக்குவதற்கு அரசு தீர்மானம்

கொழும்பு, ஜூன் 24

மருந்து வகைகள் மற்றும் மருத்துவ ஆலோசனைக் கட்டணங்கள் போன்றவற்றின் மீதான வற் வரியை நீக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. அதற்குப் பதிலாக புகையிலை நிறுவனங்களிடம் வரியை 90 வீதம் அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் மாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார். தனியார் வைத்தியசாலைக்கான வசதிகளும் வற்வரியிலிருந்து விலக்கப்பட்டுள்ளன.

"தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள வற்வரிக்கும், தனியார் வைத்தியசாலை கட்டணங்களுக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை"- என்றார். (ற-ஜ-4)

## தாதிய உதவியாளர் தேவை

**றோயல் பற்சிகிச்சை நிலையத்திற்கு பெண் தாதிய உதவியாளர் தேவை**

வயதெல்லை 20 -30 நேர்முகத்தேர்வு எதிர்வரும் 26.06.2016 ஞாயிறு முற்பகல் 10.30 மணிக்கு றோயல் பற்சிகிச்சை நிலையத்தில் நடைபெறும். நேர்முகத் தேர்விற்கு சுயவிவரக்கோவையுடன் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

(மாநகரசபை எல்லைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு: **றோயல் பற்சிகிச்சை நிலையம்**
**இல. 454ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**077 654 4731/ 021 561 7035**
(ஜே.2369)
(13.18)

## இதழியல் டிப்ளோமா பயிற்சிநெறி

**மீள்பரீட்சை அறிவித்தல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஊடாக வளங்கள் பயிற்சி மையத்தில் பகுதிநேர மற்றும் முழுநேர டிப்ளோமா பயிற்சிநெறிக்கான கீழ்க்குறிப்பிடப்படும் முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கான மீள்பரீட்சைகள் எதிர்வரும் 11.07.2016 அன்று நடைபெறவுள்ளன.

பிரிவு III பகுதிநேரம் [Batch III Part Time (2010/2012)]
பிரிவு V முழுநேரம் [Batch V Full Time (2012/2013)]
பிரிவு VI முழுநேரம் [Batch VI Full Time (2013/2014)]

மீள்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் 06.07.2016 இற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பித்து பரீட்சையில் தோற்றுவதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
(C 22085)(10.18)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு **சுப்பிரமணியம் செந்தில்குமரன்**

அவர்கள் கடந்த 09.05.2016 தொடக்கம் இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு இவரை மனதாரப் பாராட்டுவதுடன் மேலும் பதவி உயர்வுகளைப் பெற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
இ. ஸ்ரீகாந்தன் குடும்பத்தினர்
(செந்தூரன்)

(Gm/1773)
(12.18)

## மணிவிழா வாழ்த்துக்கள்




கடந்த 34 வருட ஆசிரிய சேவையில் எமது கல்லூரியில் 21 ஆண்டுகள் ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் அளப்பெரும் சேவையாற்றி இன்று (24.06.2016) வெள்ளிக்கிழமை சேவையிலிருந்து ஓய்வுபெறும் பகுதித் தலைவர்

**திருமதி சாந்தநாயகி பரமலிங்கம்**

அவர்கள் எமது கல்லூரியில் இந்து நாகரிகத் துறையின் உறைவிடமாக இருந்து மாணவர் கல்வியில் அபரீத கவனத்துடன் சேவையாற்றிய நல்லாசிரியர் அவர்களை வாழ்த்தி வணங்கி அவரது ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதோடு வேம்படி விநாயகரையும் இறைஞ்சுகின்றோம்.

சேவை விவரம்:

முதல் நியமனம் : 05.10.1982

| | |
|---|---|
| கா/காலிதுந்துவ முஸ்லீம் மகா வித்தியாலயம் | - 05.10.1982 - 30.04.1988 |
| யா/ நாவற்குழி மகா வித்தியாலயம் | - 01.05.1988 - 01.01.1995 |
| யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி | - 02.01.1995 - 23.06.2016 |

கல்லூரிச் சமூகம்
**யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**
(அ.69) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர்
**சுந்தரம் தர்மலிங்கம்**



தோற்றம்
16.04.1938

மறைவு
02.06.2016

இன்று [24.06.2016] வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி சந்தி,
நீர்வேலி.
(ஜெ/1773)
(12.18)
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**சபாரத்தினம் தவராசா**
(லொறிச் சிங்கம்)



தோற்றம்
24.02.1950

மறைவு
25.05.2016

அப்பா! ஆயிரம் உறவுகள் எமக்கு இருந்தாலும்
நாம் வாழும் காலம் வரை
உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு விலகாது
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (24.06.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மாசுவன் சந்தி,
நீர்வேலி.
(C/22074)
(11,18)
குடும்பத்தினர்.
(V.M.K.Hardware Kondavil)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணகம்
27.02.1952

விண்ணகம்
25.05.2016



**அமரர் மேரி மாகிறற் வென்சன் சிலாஸ்**

கடந்த 25.05.2016 இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தாயார் மேரிமாகிறற் வென்சன்சிலாஸ் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும் மேலும் அவரது மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் தெரிவித்தோருக்கும், நல்லடக்கத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் குறிப்பாக பல்வேறு வழிகளில் எம்மோடு துணை நின்று உதவி புரிந்த எமது நாரந்தனை பங்குத் தந்தை அருட்பணி ஞா.பீற்றருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (24.06.2016) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு எமது அன்புத் தாயாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக நாரந்தனை புனித இராயப்பர் சின்னப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து அவரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை.
(j/2338)
(11,18)
பிள்ளைகள்,
மருமகள்.

## பட்டா வாகனம் மோதி மாணவன் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜுன் 24
பட்டா வாகனம் மோதியதில் பாடசாலை மாணவன் ஒருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். வண்ணார்பண்ணை சிவன் கோவில் பகுதியில் நேற்று இந்த விபத்து நடந்தது. கொக்குவிலைச் சேர்ந்த 17 வயது மாணவனே படுகாயமடைந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-ஜ-106)

## 8ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
**காசிநாதர் பிரசாத்** (குஞ்சன்)

மலர்வு
24.11.1983

உதிர்வு
24.06.2008



எம் குலவிளக்கே!
பாரினிலே எம்மைத்
தவிக்கவிட்டு
எட்டு ஆண்டுகள்
கடந்தனவே குஞ்சன்
பல்கலையில் பட்டம்
பெற்று பேரறிஞனாக
வருவாய் என்று
நாம் கோட்டை கட்டினோம்
எல்லாம் கனவாகிப் போயிருக்க
உம் நினைவுகளுடன்
இருக்கின்றோம்

உம் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.
கரணவாய் மத்தி,
கரவெட்டி.
(C/22097)(12.18)

## நீங்காத நினைவுகளில் 4ஆம் ஆண்டு

உதயம்
16 . 11 . 1935



உதிர்வு
24 . 06 . 2012

**திருமதி மேரிறீற்றா (ரஞ்சிதம்) ஆசீர்வாதம்**

"நாங்கள் காண்பவற்றையல்ல காணாதவற்றை நோக்கியே வாழ்கிறோம். காண்பவை நிலையற்றவை; காணாதவை என்றென்றும் நிலைத்திருப்பவை" (2 கொரி 4:18)

நிலையற்ற சொந்தங்களைவிட்டு நிரந்தர வாழ்வு தேடினீரோ
சுதந்திரக்காற்றை சுவாசிக்க சொர்க்கவாசல் தேடினீரோ
நலமோடு நன்றாக நாம் வாழ வளமான வாழ்வு தந்தவளே - அம்மா
நானிலம் விட்டு நீங்கள் சென்று நான்காண்டுகள் ஆனதுவே
நித்தியமாய் நின் ஆன்மா இளைப்பாற
நிதமும் இறைவனை இறைஞ்சுகின்றோம்
மறந்திட முடியா நினைவினில்....

[illegible]
(j/2289)
(11.18)
அன்புக் கணவர்,
பிள்ளைகள்,
மற்றும் உறவுகள்.

### செயலமர்வு

ஜுன் 24
வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த உடற் கல்வி ஆசிரியர்களுக்கான சுகாதார மேம்பாட்டுச் செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வலயத்தின் முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

சகல உடற்கல்வி ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ள வேண்டும் என்று வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கேட்டுள்ளார்.

(ற-ஜ-108)

### நூற்றாண்டு விழா

கரணவாய்,
ஜுன் 24
புற்றளை மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் தொடர்ந்து மூன்று தினங்கள் இடம் பெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம்பெறும் முதல் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண முதலமைச்சர் க.வி விக்கினேஸ்வரன் கலந்துகொள்வார்.

நிகழ்வில் பாடசாலையின் நுழைவாயில் நிர்வாகத் தொகுதியும், திறந்த கலையரங்கமும் திறந்து வைக்கப்படவுள்ளன.

(ற-ஜ-108)

### துப்பாக்கியை ஆய்வு செய்த பொலிஸார் காயம்

கொழும்பு, ஜுன் 24
துப்பாக்கியை ஆய்வு செய்த போது அது வெடித்ததால் பொலிஸ் அலுவலர் காயமடைந்தார்.

கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. கந்தளாய் பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ற-ஜ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிப்பது உரிமை

## வலியுறுத்துகின்றார் தேசப்பிரிய



கொழும்பு, ஜூன் 24
நல்லதொரு அரசைக் கொண்டு செல்வதற்கும், ஜனநாயக ரீதியில் ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் வாக்களிப்பு முக்கியமானது.

இவ்வாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

வாக்காளர் தினத்தை முன்னிட்டு வாக்காளர் பட்டியல்களின் மீளாய்வு மற்றும் தேர்தலின் பெறுமதி சம்பந்தமாக அரச உத்தியோகத்தர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களுக்கு விழிப்புணர்வூட்டும் கூட்டம் காலி மாவட்டச் செயலகத்தில் நடந்தது. அதிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பொது வாக்குரிமை கிடைத்ததன் பின்னர் இந்த நாட்டில் இடம்பெற்ற மிக மோசமான தேர்தல்களாக மூன்றைக் குறிப்பிட முடியும். ஒன்று 1981 ஆம் ஆண்டில் இடம்பெற்றிருந்த அபிவிருத்தி சபைகளுக்கான தேர்தல். அடுத்தது 1982 ஆம் ஆண்டில் இடம்பெற்றிருந்த மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு. மூன்றாவது 1998ஆம் ஆண்டு இடம்பெற்றிருந்த வட மேல் மாகாணசபைத் தேர்தல்.

மே மாதத்தின் முதலாம் திகதியிலிருந்து ஒகஸ்ட் 15 ஆம் திகதி வரையிலும் வாக்காளர்களைக் கணக்கெடுக்கும் காலமாகும். எவரும் கைவிடப்படாத வாக்காளர் பட்டியலொன்றைத் தயாரிப்பதற்கே நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

வாக்களிப்பது உங்கள் உரிமை. கட்டாயமாக வாக்குரிமைக்கான ஆவணத்தை நிரப்பி ஒப்படைக்கவும். இறப்பு உதவி நிதியுதவிச் சங்கத்தில் அது பற்றிப் பேசுங்கள். வணக்க இடங்களின் பரிபாலனசபைகளில் அது கிடைத்ததா என வினவுங்கள். பாடசாலைக் கூட்டத்தில் பாடசாலை அதிபரிடம் வினவுங்கள். மாணவர்கள் மூலமாக பெற்றோர்களுக்குத் தகவல்கள் அனுப்புங்கள், வாக்காளர் பட்டியல் கிடைத்ததா என்று. ஊடகங்கள் ஊடாக இந்தத் தகவலை வழங்குங்கள். எதிர் காலத்தில் அலைபேசிகள் மூலமாகவும் அறிவிப்பதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். யார் வென்றாலென்ன, தோற்றாலென்ன வாக்களிப்பது உங்கள் உரிமை என்பதை ஞாபகத்தில் வையுங்கள்.

இந்தியாவில் வாக்குகள் பதிவு செய்யப்படுவது குறைவு. இங்கு போன்று ஆண்டுகள் தோறும் பதிவு செய்யப்படுவதும் இல்லை. வேறு நாடுகளில் வெவ்வேறு முறைகளில் வாக்குப் பதிவு இடம்பெறுகிறது. ஆனால் இந்த நாட்டில் 1948ஆம் ஆண்டிலிருந்தே இன்னமும் புள்ளடியே இடப்படுகிறது.

சுதந்திரமான, நீதியான வாக்களிப்பை நடத்த இன்று ஆணைக் குழுவுக்கு அதிகாரமுள்ளது. எப்போதும் அதிகாரத்தில் இருப்பதற்கே அனைவரும் விரும்புவார்கள். அதற்காக தேர்தல் காலங்களில் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலுக்காக முன்னிற்போம் என்று சுவரொட்டிகளை அச்சிடுவார்கள்.

அரசியல்வாதிகளின் இது போன்ற செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக, ஆலோசித்து வருகிறோம். நாட்டின் சனத்தொகையில் 52 வீதமானோர் பெண்கள் என்றாலும் கூட இன்றும் நாடாளுமன்றத்தில் ஐந்து வீதமானோரே பெண்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர் - என்றார். (ற-ஐ-22)

# மாணவனுக்கு அறைந்தார் என ஆசிரியருக்கு விளக்கமறியல்

## மாணவன் வைத்தியசாலையில்

சாவகச்சேரி, ஜூன் 24
மாணவனுக்குக் காதைப் பொத்தி அறைந்தார் என்று குற்றஞ் சாட்டப்படும் ஆசிரியரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று உத்தரவிட்டது.

சம்பவம் தொடர்பில் 3 ஆசிரியர்கள் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தாக்கினார் என்று குற்றஞ் சாட்டப்படும் ஆசிரியர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

கடந்த வாரம் பாடசாலை முடிந்து சென்ற மாணவர்கள் வீதியோரத்தில் காணப்பட்ட மாங்காய்களுக்கு கற்களால் எறிந்துள்ளனர்.

பாடசாலைக்கு வரும் வழியில் மாங்காய் பிடுங்கியது தொடர்பான பிணக்கிலேயே மாணவன் ஆசிரியரால் தாக்கப்பட்டான் என்று பொலிஸார் தெரிவித்தனர். ஆசிரியர் விட்ட அறையினால் மாணவனின் காதில் இருந்து குருதி வழிந்தது. அவன் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டான். இது தொடர்பில் பொலிஸாருக்கு மேலதிகமாக சிவில் அதிகாரிகளும் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் பாடசாலையின் ஆசிரியர்கள் இருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மாணவனை பார்வையிடச் சென்றனர். சம்பவத்தைப் பற்றி பொலிஸிலோ அல்லது வேறு எவருக்குமோ உண்மையைக் கூறக்கூடாது என்று அச்சுறுத்திவிட்டுச் சென்றனர் என்று பெற்றோரால் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சிறுவர் நன்னடத்தைப் பிரிவினரும், விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

நீதிவானின் பணிப்பின் பேரில் பொலிஸார் மூன்று ஆசிரியர்களை நேற்றுமுன்தினம் பாடசாலை முடிந்த பின்னர் விசாரணைக்கு அழைத்திருந்தனர். பொலிஸ் நிலையம் சென்ற மூன்று ஆசிரியர்களையும், விசாரணை செய்த பொலிஸார், மாணவனைத் தாக்கிக் காயம் விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்து நேற்றுமுன்தினம் இரவு நீதிவானிடம் முற்படுத்தினர்.

இரு மணிநேர விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் 11.30 மணியளவில் ஆசிரியரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-ஐ-9)

## ஒரு கிலோ கஞ்சா மாதகலில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24
மாதகலில் பற்றைக்குள்ளிருந்து ஒரு கிலோ 290 கிராம் கஞ்சா போதைப் பொருளைக் கைப்பற்றியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித் தனர்.

கிடைத்த தகவலின்படி குறித்த இடத்தில் சோதனை மேற்கொண்ட போது, பொதி செய்யப்பட்ட நிலையில் அதனை மீட்டதாகப் பொலி ஸார் தெரிவித்தனர். எனினும் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் பொலிஸார் கூறினர். (வ-4,109)

# ஒரு மண்டபத்தில் இரு திருமணம் அனுமதி வழங்கியதால் குழப்பம்!

யாழ்ப்பாணம், ஜூன் 24
மானிப்பாயிலுள்ள கலாசார மண்டபத்தில், ஒரே நாளில் ஒரே நேரத்தில் இரு திருமண நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டது. அதனால் திருமண நிகழ்வுகளை நடத்தவிருந்த இரு வீட்டாருக்கும் இடையில் குழப்பம் ஏற்பட்டது.

அங்கு பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர், பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டதால் ஒரே நேரத்தில் அனுமதி வழங்கப்பட்டது என்று குற்றம் சாட்டப்படுகின்றது.

செயலாளர் தலையிட்டு ஆலய மண்டபத்தை ஒழுங்கு செய்து நிலமையைச் சமாளித்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

வலி.தென்மேற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான கலாசார மண்டபம் மானிப்பாயில் உள்ளது. இந்த மண்டபம் திருமண வைபவம், அரசியல் கூட்டம் உட்பட பல நிகழ்வுகளுக்கு வாடகைக்கு விடப்படுவது வழக்கம்.

மானிப்பாய் பட்டினத்தில் வசிக்கும் ஒரு குடும்பத்தினர் நேற்று முன்தினம் திருமண வைபவத்தை நடத்துவதற்காக மேற்படி கலாசார மண்டபத்தை பதிவு செய்திருந்தனர். மற்றொரு தரப்பினர் திருமண நிகழ்வை நடத்த அனுமதி கோரியபோது அவர்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை மண்டபத்தை ஒழுங்கு செய்வதற்காக இரு குடும்பத்தினரும் சென்றபோதுதான் இது வெளிச்சத்துக்கு வந்தது. இரு குடும்பங்களுக்கும் இடையே குழப்பம் ஏற்பட்டது.

இந்தக் குளறுபடி பிரதேச சபைச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு விரைந்த செயலாளர் இரு பகுதியினரையும் சமாதானப்படுத்தினார். ஒரு குடும்பத்தினரது திருமணத்தை நடத்துவதற்கு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய மண்டபத்தை ஒழுங்கு செய்தார். பின்னர் இரு மண்டபங்களிலும் திருமணங்கள் இடம்பெற்றன. (ற-ஐ-4.108)

# 185 பேருக்கு செயற்கைக் கால்கள் முல்லைத்தீவில் பொருத்தப்பட்டன



முல்லைத்தீவு, ஜூன் 24
முல்லைத்தீவில் போரால் கால்களை இழந்த 185 பேருக்கு ஜேர்மன் தொழில் நுட்பத்துடன் கூடிய செயற்கைக் கால்கள் நேற்றுப் பொருத்தப்பட்டன.

முல்லைத்தீவு றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் மாங்குளத்தில் உள்ள நீர்ப்பாசனத் திணைக்கள வளாகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

சேலம் றோட்டரிக் கழகத்தின் உதவியுடன் முல்லைத்தீவு றோட்டரிக்கழகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் சேலம் மாவட்ட றோட்டரிக்கழக ஆளுநர் வாசு, இலங்கை றோட்டரிக் கழக ஆளுநர் ஜோர்ச் யேசுதாஸ் மற்றும் றோட்டரிக் கழக பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

றோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் சென்றவருடமும், விசுவமடு பகுதியில் 70 பேருக்கு செயற்கைக்கால் வழங்கப்பட்டன. வழமையாக வழங்கப்படும் கால்களைவிட நிறைகுறைவான செயற்கைக் கால்களாக இவை இருப்பதுடன் பயன்படுத்துவதற்கும் இலகுவானதாக இருக்கின்றது என்று செயற்கைக் கால் பொருத்தப்பட்ட பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

சிறுவர் வறுமை நிவாரண நிதியத்தின் உதவியுடன் கால்களை இழந்தவர்களை உடைய குடும்பங்களின் வறுமையை நிவர்த்திசெய்து, அவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக சில குடும்பங்களுக்கு மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் என்பன வழங்கப்பட்டன. (ற-ஐ-ரி7)

## விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 24
காரைநகர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தேசிய தொழில் தகைமைச் சான்றிதழ் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ். உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்தார்.

விருந்தோம்பல் கற்கை நெறிகளான சமையலாளர், வெதுப்பாளர், அறைப் பராமரிப்பாளர், உணவு மற்றும் குடிபானம் பரிமாறுபவர், காய்ச்சி இணைப்பவர், இரு சக்கர மற்றும் ஓட்டோ திருத்துநர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், அலுமினியப் பொருத்துநர், வீட்டு மின்னிணைப்பாளர், மர வேலை தொழில் நுட்பவியலாளர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடை வடிவமைப்பாளர், கட்டட நிர்மாண உதவியாளர் போன்ற கற்கை நெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன.

கற்கை நெறிகளை கற்க விரும்புவர்கள் இன்று வெள்ளிக்கிழமை, யாழ்.வீரசிங்கம் மண்டபம் முதலாம் மாடியில் அமைந்துள்ள இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ற-ஐ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார மத்திய நிலையம் தாண்டிக்குளத்திலேயே வேண்டும்

## வலியுறுத்தி திங்கட்கிழமை முதல் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டம்

வவுனியா, ஜூன் 24
பொருளாதார மத்திய நிலையம் சிலரின் விட்டுக்கொடா நிலை காரணமாக வவுனியாவை விட்டு வெளியே செல்லவுள்ளது. இந்தத் திட்டத்தை வவுனியா - தாண்டிக்குளத்தில் அமைத்துத் தாருங்கள்.
வவுனியா மாவட்ட உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்சங்கம் இதனை வலியுறுத்தி தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டத்துக்கு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அழைப்பு விடுத்துள்ளது.
அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

> “வவுனியா தாண்டிக்குளத்தில் அமைப்பதற்கு முதலில் இடம் அடையாளம் காணப்பட்டது. அந்த இடத்தில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்க, வடமாகாண சபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, முதற் கட்டப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.”

வடமாகாணத்துக்கான பொருளாதார மத்திய நிலையத்தை அமைக்க மத்திய அரசால் நிதி ஒதுக்கப்பட்டது. அதற்கான இடத்தைத் தெரிவு செய்வதில் நீண்ட நாள்களாக இழுபறியான நிலை காணப்பட்டது. நிலையத்தை வவுனியா - தாண்டிக் குளத்தில் அமைப்பதற்கு முதலில் இடம் அடையாளம் காணப்பட்டது. அந்த இடத்தில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்க, வடமாகாண சபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, முதற்கட்டப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. தற்போது சிலரின் விட்டுக் கொடுக்காத நிலை காரணமாக பொருளாதார மத்திய நிலையம் வடமாகாணத்துக்கு கிடைக்காமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு நடப்பதைத் தவிர்ப்பதற்காக வடமாகாண சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றக் கோரி இந்தப் போராட்டம் இடம் பெறவுள்ளது.
நியாயமான இந்தப் போராட்டத்துக்கு பொதுமக்கள், மக்கள் பிரதிநிதிகள், பொது அமைப்புக்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் தமது முழு ஆதரவை வழங்க வேண்டும் - என்றுள்ளது. (ற-ஐ-4)

## ஒலிப்பேழை வெளியீடும் பாராட்டு விழாவும்

யாழ்ப்பாணம், ஜூன் 24
கலாபூசணம் நல்லான் தங்கவேலுவின் அரிச்சந்திர மயானகாண்டம் ஒலிப் பேழை வெளியீடும், பாராட்டு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.
நேதாஜி சனசமூக நிலையத் தலைவர் மா.கிருபகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கலந்து கொள்வார். (ற-ஐ-7)

## கைதிகளின் உற்பத்திகளால் 6 கோடி ரூபா வருமானம்

கொழும்பு, ஜூன் 24
2015 ஆம் ஆண்டு சிறைக் கைதிகளால் உற்பத்தி செய்யப்பட்ட பல தரப்பட்ட பொருள்கள் மற்றும் விவசாய உற்பத்திகளால் 6 கோடி ரூபா வருமானம் கிடைத்துள்ளது.
அந்த நிதி அரசுக்கு வழங்கப்படவுள்ளது என்று சிறைச்சாலைகளின் கைத் தொழில்கள் பிரிவு திறன் திணைக்களம் தெரிவித்துள்ளது.
மஹர, வட்டரெக்க, போகம்பரை, பல்லேகலை, வீரவில, அனுராதபுரம், வெலிக்கடை ஆகிய சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளால் உற்பத்தி செய்யப்பட்டிருந்த செங்கற்கள், உடு புடைவை வகைகள், சவர்க்கார வகைகள், கடித உறைகள், வீட்டுத் தளபாடங்கள் போன்ற பலதரப்பட்ட உற்பத்திகள் மற்றும் விவசாய உற்பத்திகளின் விற்பனை மூலம் இந்த வருமானம் பெறப்பட்டுள்ளது. (ற-ஐ-22)


தீயில் எரிந்து நாசமாகியுள்ள வியாபார நிலையம்

## வியாபார நிலையம் தீயில் எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், ஜூன் 24
கிளிநொச்சி - அக்கராயன் அண்ணா சிலையடிப் பகுதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்று நேற்று முன்தினம் இரவு எரிந்து நாசமாகியது.
உரிமையாளர் கடையைப் பூட்டி விட்டு வெளியில் சென்ற சமயமே விபத்து நிகழ்ந்தது. விற்பனைநிலையத்தில் எண்ணெய் வகைகளும், விற்பனைக்கு இருந்தமையால் தீ வேகமாகப் பரவியிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.
வர்த்தக நிலையம் முழுமையாகத் தீயில் எரிந்து சாம்பலானது. வர்த்தக நிலைய சுவர்களும் அதிக வெப்பத்தின் காரணமாக இடிந்து வீழ்ந்துள்ளன.
தீ அணைப்பு சேவை வசதி இன்மை காரணமாக தீயைக் கட்டுப்படுத்த முடியாமல் போனது. இதனால் பல லட்சம் ரூபா சொத்துகள் நாசமாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
(ற-ஐ-101)

## சுகாதாரத்தை பின்பற்றாத உணவகங்களுக்கு தண்டம்

முல்லைத்தீவு, ஜூன் 24
சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது உணவு தயாரிப்புக்களில் ஈடுபட்ட நான்கு உணவகங்களுக்கு 76 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
துணுக்காயில் இயங்கி வரும் குறித்த 4 உணவகங்களுக்கும் எதிராக, பொதுச் சுகாதார பரிசோதகரால் முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு வந்தபோது உணவக உரிமையாளர்கள் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டனர். தண்டம் விதிக்கப்பட்டதுடன், சுகாதார பரிசோதகரின் அறிவித்தலுக்கு ஏற்ப உணவகங்கள் சீர் செய்யப்பட்ட பின்னர் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டது.
(ற-ஐ-4,ரி7)

## விசாகப் பொங்கல்

சாவகச்சேரி, ஜூன் 24
சாவகச்சேரி - பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வைகாசி விசாகப் பொங்கல் இன்று வெள்ளிக்கிழமை காலை அபிசேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகும். இரவு பொங்கல் இடம் பெறும். (ற-ஐ-9)

## வீதியில் பழங்களை விற்றால் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 24
நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பிரதான வீதிகளில், வீதி விபத்து ஏற்படும் வகையில் பழ வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரிகளின் பழங்கள் மற்றும் தளபாடங்கள் பிரதேச சபையால் அகற்றப்பட்டன. தண்டமும் அறவிடப்பட்டது. வியாபாரிகள் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர் என்று பிரதேச சபையினர் தெரிவித்தனர். (ற-ஐ)

## சிறுவர் நாடகப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாண மத்திய கல்லூரி, வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான சிறுவர் நாடகப் போட்டியை நடத்தவுள்ளது என்று பாடசாலை அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தெரிவித்தார்.
மத்திய கல்லூரியின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்லூரியின் நாடக மன்றம் இந்தப் போட்டியை ஏற்பாடு செய்துள்ளது.
நாடகப் போட்டி எதிர்வரும் ஜூலை மாதம் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.
போட்டியில் பங்குபற்றுகின்ற பாடசாலைகள் விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதிக்கு முன்பாக, சிறுவர் நாடகப் போட்டி, அதிபர் யாழ். மத்திய கல்லூரி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
எதிர் வரும் ஜூலை 12 ஆம் திகதிக்கு முன்னர் தமது வரவை உறுதிப்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.
(ற-ஐ-ரி)

## விருந்துபசாரமும் நூல் வெளியீடும்

யாழ்ப்பாணம், ஜூன் 24
விருந்துபசார நிகழ்வும் 'மாற்றத்தின் முகவர்கள்' எனும் நூல் வெளியீடு நிகழ்வும் நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வைத்தீஸ்வரா கல்லூரியில் நடைபெறவுள்ளன.
அதிபர் பரீட்சையில் சித்தியடைந்த யாழ். கல்வி வலய பயிற்சி நிலையம் 3இல் பயிற்சி நிறைவு செய்தவர்களால் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண திட்டமிடல் பிரிவு மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் கலந்து கொள்வார். (ற-ஐ-422)

## வினைத்திறன்காண் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 24
வடக்கு மாகாண பொதுச் சேவையின் தொழில்நுட்ப சேவையின் தரம் III மற்றும் தரம் II அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் பரீட்சைக்கான விண்ணப்பங்கள், மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரால் கோரப்பட்டுள்ளன.
பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம், கொழும்பில் நடத்தப்படவுள்ளது. விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரின் பரிந்துரையுடன் எதிர் வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு, பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு ஆணைக்குழுவின் செயலாளர் திருமதி ரூபிணி வரதலிங்கம் அறிவித்துள்ளார். (ற-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலைகளில் அவசியம் அபிவிருத்திக் குழுக்கள் தேவை

## வடக்கு சுகாதார அமைச்சருக்குக் கடிதம்

மன்னார், ஜூன் 24

வைத்தியசாலைகளில் அபிவிருத்திக் குழுக்களை அமைப்பதன் ஊடாக பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும். வடக்கு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் அபிவிருத்திக் குழுக்களை அமைக்க சுகாதார அமைச்சர் முன்வர வேண்டும்.

இவ்வாறு வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்துக்கு கடிதம் ஒன்று அனுப்பியுள்ளார். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அடிப்படைத் தேவைகள், குறைபாடுகள், அபிவிருத்தி சம்பந்தமாகவும், மன்னார் பொது அமைப்புக்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த மாதம் விசேட கூட்டம் மன்னார் பொது வைத்தியசாலையில் நடந்தது.

அதில் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டன. அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள், ஏற்பாடுகள், ஆலோசனைகள் தங்களாலும், அதிகாரிகளாலும் முன்வைக்கப்பட்டன. வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் இறப்புக்கள் சம்பந்தமாகவும் விசேடமான அக்கறையுடன் விரிவாக ஆராயப்பட்டது: அவற்றின் முன்னேற்றம் சம்பந்தமாகக் கூடிப் பேசவும், தீர்வு காணவும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் அவசியமானது என்பதற்கு இணங்க ஒரு வாரத்துக்குள் அந்தக் குழு நியமிக்கப்படும் என தங்களால் உறுதியளிக்கப்பட்டது.

உறுதியளித்து ஒரு மாத காலமாகியும் இன்னமும் அந்தக் குழு நியமனம் செய்யப்படவில்லை. போர்க் காலத்தில் கூட வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக்கள் இயங்கியதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

சிகிச்சைக்கு செல்லும் நோயாளிகள் குறைகளை யாரிடமும் சொல்ல முடியாத நிலையில் உள்ளனர். வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக்கள் முறையாக இயங்கும் பட்சத்தில் அதனூடாக உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தி தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இதே வேளை நோயாளர்களுக்கும், நிர்வாகத்துக்கும் இடையில் அண்மைக் காலமாக ஏற்படுத்தப்பட்ட அவ நம்பிக்கைகளையும், குழப்பங்கள், துரதிஷ்டமான சம்பவங்களையும் இந்தக் குழுவினூடாக நிவர்த்திக்க முடியும்.

நீங்கள் உறுதியளித்ததன் பிரகாரம் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக்களை, மன்னாரில் மட்டுமல்ல வடக்கின் ஏனைய மாவட்ட வைத்தியசாலைகளிலும் அமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்வீர்கள் என நம்புகின்றேன் – என்றார்.

(ற-ஜ-21,56)

# சமுர்த்தி உத்தியோகத்தர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

## கண்டித்து வவுனியாவில் கவனவீர்ப்பு



வவுனியா, ஜூன் 24

சமுர்த்திஉத்தியோகத்தர் தாக்கப்பட்டதைக் கண்டித்து நேற்றுமுன்தினம் வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தின் முன்பாக போராட்டம் இடம்பெற்றது.

வவுனியா பொகஸ்வவெள பகுதியில் இரு வாரங்களுக்கு முன்னர் சமுர்த்திஉத்தியோகத்தர் ஒருவர்ஆறுபேர்கொண்ட குழுவால் தாக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

தாக்குதலாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கம் ஆகியன இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்தன.

ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் சங்கத்தின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் தலைமையில், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் எம். எஸ். ஜானகவிடம் தமது கோரிக்கை அடங்கிய மனுவை சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கையளித்தனர்.

(ற-ஜ-21)

# மன்னாரில் 20 பேருக்கு தொழிற் பயிற்சிகள்

மன்னார், ஜூன் 24

மன்னார் மாவட்ட தொழில் துறையை மேம்படுத்தும் வகையில் கனேடிய பல்கலைக்கழகம் செயற்றிட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது. 50 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான தொழில்துறை பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளர் எம். வை.எஸ்.தேசப்பிரிய முன்னிலையில் நடைபெற்றது. உலக கனேடிய பல்கலைக்கழகத்தின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள தொழிற்பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்ட தொழிற் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழிற் பயிற்சியாளர்கள் தமது ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டுள்ளனர்.

சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைக்கு 20 பேரும், தகவல் தொழில் நுட்பத்துறைக்கு 10பேரும், இயந்திரவியல்துறைக்கு 20 பேரும் தெரிவு செய்யப்பட உள்ளனர். இவர்களில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறைக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு வடமாகாண சுற்றுலாத்துறையூடாக தொழிற் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

கைசாத்திடும் நிகழ்வை தொடர்ந்து கடந்த வருடம் சீடா நிறுவனத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வந்த கனரக வாகன இயக்குநர் பயிற்சியை பூர்த்தி செய்த 12 தொழிற் பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலாளர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய, உலக கனேடிய பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான பிரதிநிதி எஸ்தர் மைக்கல் டொச், தொழிற்பயிற்சி நிலைய முகாமையாளர்கள், தொழிற் பயிற்சியாளர்கள் என பலர் கலந்து கொண்டனர் (ற-21,56)

# விலங்கு விசர் தடுப்பூசி வழங்கல்

சாவகச்சேரி, ஜூன் 24

எழுதுமட்டுவாழ் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பு மருந்து வழங்கல் இன்று வெள்ளிக்கிழமை முதல் நடைபெறவுள்ளது.

தடுப்பூசி ஏற்றப்படும் நிலையங்கள் பற்றிய விவரங்கள் வாகன ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்படும் என்றும் குறித்த நிலையங்களுக்கு அண்மித்த பகுதியில் உள்ள மக்கள் தமது வளர்ப்பு நாய்களை அழைத்து வந்து தடுப்பூசி மருந்தை ஏற்றிக் கொள்ள வேண்டும் என்றும் சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்

கொடிகாமம் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலும் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ற-ஜ-9)

# வியாபார கற்கைகள் ஆய்வு மாநாடு இன்று

வவுனியா, ஜூன் 24

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தால் வியாபார கற்கைகள் ஆய்வு மாநாடு இன்று நடத்தப்படவுள்ளது.

வவுனியா வளாகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வளாகத்தின் முதல்வர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

"யதார்த்த உலகுக்கான வியாபார சவால்களுக்கான ஆய்வு ரீதியான தீர்வுகள்" எனும் தலைப்பில் மனிதவள முகாமைத்துவம், சந்தைப் படுத்தல் முகாமைத்துவம், பொருளியல் மற்றும் நிதியியல், பொது முகாமை என்ற நான்கு பிரிவுகளில் விடய ஆய்வுகள் இடம்பெறவுள்ளன.

இதற்கான பதிவுகளை இணையத்தள முகவரியூடாகவோ, அல்லது வவுனியா பம்பை மடுவில் அமைந்துள்ள வவுனியா வளாகத்திலோ பதிவுகளை மேற் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ற-ஜ-21)



கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள, கரந்தாய்க் குளம் பகுதியில் கால்களை இழந்த முப்பது பேருக்கு செயற்கைக்கால்கள் பொருத்தப்பட்டன. இந்த நிகழ்வு நேற்று முன்தினம் கரந்தாய் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. இந்தியாவின் சேலம் பாண்டிச்சேரி றோட்டறிக்கழகத்தால் செயற்கைக் கால்கள் வழங்கப்பட்டன. (ற-ஜ-21,ரி3)

# தொல்லியல் திணைக்களம் வழங்கும் அனுமதி கட்டுமானங்களுக்குத் தேவை

## தொல்லியல் மையம், தொல்லியல் எச்சம் காணப்படும் பிரதேசங்களில்

யாழ்ப்பாணம், ஜூன் 24

நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கட்டுமானம் நடைபெறும் போதோ அல்லது அபிவிருத்தி நடவடிக்கையின் போதோ அருகில் தொல்லியல் மையமோ, பாதுகாக்கப்படும் தொல்லியல் எச்சங்களோ இருப்பின் தொல்லியல் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியைப் பெறவேண்டும்.

இவ்வாறு தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சேனரத் பண்டார திஸாநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆறு வலயங்கள் பிரிக்கப்பட்டு அவற்றில் காணப்படும் தொல்லியல் இடங்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன.

வலயம் 1 – யாழ்ப்பாணம் – நல்லூர், வலயம் 2 – தீவகம் நெடுந்தீவு, வலயம் 3 – வலிகாமம் கிழக்கு, வடதெற்கு, மேற்கு, வடமேற்கு காரைநகர், வலயம் 4 – வடமராட்சி வடக்கு, கிழக்கு தெற்கு, மேற்கு, வலயம் 5 – தென்மராட்சி, வலயம் 6 – கிளிநொச்சி, கண்டாவளை பச்சிலைப்பள்ளி, கரைச்சி, பூநகரி. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளும், எதிரணியினர் கூச்சல்; களேபரமானது நாடாளுமன்று

கொழும்பு, ஜூன் 24
நேற்றுமுன்தினம் நடந்த நாடாளுமன்ற அமர்வில் ஆளும், எதிர் அணி உறுப்பினர்கள் அநாவசிய வாக்குவாதங்களில் ஈடுபட்டனர். நாடாளுமன்று ஒரே கூச்சல் குழப்பமாகக் காணப்பட்டது. இந்த நிலையில் ஒன்றரை மணி நீடித்தது.

தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க விடுத்த அறிவிப்பு, நாடாளுமன்ற உறுப்பினர் பியல் நிசாந்தவுக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல், மகிந்தானந்த அளுத்கமகேவின் விளக்கம் என்பவற்றின் காரணமாகவே சபையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

நாடாளுமன்ற அமர்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு குழுக்களின் பிரதித் தலைவரான செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் ஆரம்பமானது.

பத்திரங்களை சமர்ப்பிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அறிவித்தார். மொழிபெயர்ப்புக் கருவி அணியாது இருந்த ஆளும் தரப்பு பிரதம கொறடா என்ன கூறப்பட்டது என்று விளங்காது தடுமாறினார். அவர் என்ன கூறினார்? என்று சிங்கள மொழியில் கேட்டு ஒருவாறு சமாளித்துக் கொண்டார்.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்திலும் சகோதர மொழி பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தடுமாறினர். நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அதிலும் தமிழிலேயே அறிவிப்புகளைச் செய்தார்.

வழமையாக சிங்கள மொழியிலேயே நாடாளுமன்ற அமர்வு நடைபெறும். அதனால் மொழிபெயர்ப்புக் கருவிகளை சகோதர மொழி உறுப்பினர்கள் அணிவதில்லை. தமிழ் மொழி பேசும் உறுப்பினர்களே அணிவர்.

**பொய்க் குற்றச்சாட்டுக்கள்**

அமைச்சர்களுக்கான அறிவிப்பை விடுத்த நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த தன் மீது பொய்யான குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளார் என்று தெரிவித்தார்.

மகிந்தானந்த எழுந்தார். ரவியின் கருத்துக்குப் பதிலளிக்க முற்பட்டார். அது ஒழுங்குப் பிரச்சினை அல்ல எனக் கூறிய அமைச்சர் ரவி, மகிந்தானந்தவுக்கு அனுமதியளிக்கக் கூடாது என்று சபா பீடத்தைக் கோரினார். அப்போது மகிந்தானந்தவை பேசவிடுமாறு நிதி அமைச்சர் ரவிக்கு அறிவுறுத்தினார் பிரதமர் ரணில்.

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த, நான் கூறியது பிரதமருக்கும் வலித்திருக்கும் - என்றார்.

மகிந்தானந்த இவ்வாறு கூறியதையடுத்து ஆசனத்திலிருந்து எழுந்த பிரதமர் ரணில்,

இந்த விடயத்தை சிறப்புரிமைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தலாம். இந்தச் சபையில் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று இவருக்குத் (மகிந்தானந்த அளுத்கமகே) தெரியவில்லை. அந்தக் காலம் முடிந்து விட்டது. இதைச் சிறப்புரிமைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துங்கள். சிறப்புரிமைக் குழுவுக்குச் செல்வதற்கு ஏன் பயம்? சவாலை ஏற்க முடியாதா? என்று மகிந்தானந்தவிடம் கேள்வி எழுப்பினார்.

**சவாலுக்குத் தயார்**

பிரதமர் ரணில் விடுத்த சவாலுக்குப் பதிலளித்தார் மகிந்தானந்த. நான் ஆவணங்கள் அடங்கிய கோவையை பிரதமரிடம் வழங்குகின்றேன். சிறப்புரிமைக் குழுவுக்கு அல்ல. அதற்கும் அப்பால் சென்றாலும் எதற்கும் முகங்கொடுக்கத் தயார் - என்றார்.

பிரதமரோ இதை எனக்குத் தரவேண்டாம், சிறப்புரிமைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்துங்கள், அங்கு ஆராயப்படும்- என்றார்.

இந்த விடயம் சிறப்புரிமைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் தெரிவித்தார்.

அதை மறுத்துரைத்த மகிந்தான்ந்த, மீண்டும் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்.

இந்த விடயம் சிறப்புரிமைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதால் இங்கு விவாதிக்க முடியாது என்று கூறினார் சபை முதல்வரான அமைச்சர் கிரியெல்ல. இருப்பினும், சத்தமிட்டவாறு விடாமல் சிறிது நேரம் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிக் கொண்டிருந்த பின்னரே அமர்ந்தார் மகிந்தானந்த.

**அடுத்த வாக்குவாதம்**

மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினரான பியல் நிசாந்த டி சில்வா ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார். தனது தொலைபேசிக்கு அநாமதேய அழைப்பொன்று வந்தது, அதில் தனக்கும், தனது பிள்ளைகளுக்கும் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டார். இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டினார்.

பியல் நிசாந்தவுக்கு ஆதரவாக தினேஷ் குணவர்த்தனவும் குரல் கொடுத்தார். குறுக்கிட்ட சபை முதல்வர் கிரியெல்ல சி.ஐ.டி. வேலையை நாடாளுமன்றம் செய்யமுடியாது - என்றார்.

தொடர்ந்து மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூச்சலிட்டவாறு இருந்தனர்.

சபையில் வாக்குவாதம் நீடித்துக் கொண்டிருந்தபோது, எழுந்த பிரதமர் ரணில், பேருவளையில் முஸ்லிம்களைக் கொன்ற காலம் முடிந்துவிட்டது, இப்போது அனைவரினது பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது, நாடாளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் குறித்து பொலிஸ்மா அதிபருக்கு அறிவிப்போம், என்ன நட வடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்து அவர் பார்ப்பார், நாம் தற்போது அடுத்த நடவடிக்கைக்குச் செல்வோம் - என்றார்.

**மகிந்த அணி எதிர்ப்பு**

பிரதமரின் கருத்துக்கு கடும் எதிர்ப்பு வெளியிட்ட மகிந்த அணியினர் ஆசனத்திலிருந்து எழுந்து நின்று கூச்சலிட்டனர். சபையில் கூச்சல் குழப்பம் நீடித்ததால் தினப் பணிகளுக்காக விடுக்கும் அறிவிப்பை பிரதமரிடம் கையளித்தார் சபை முதல்வர் லக்ஷ்மன் கிரியெல்ல. "மக்கள் தீர்ப்பொன்றுக்காக அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின்போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றி ஒழுகவேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டி நெறிகள்" என்ற சட்டவரைவை சமர்ப்பித்து உரையாற்றினார். பிரதமர் உரையாற்றி முடிக்கும்வரை மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆசனத்திலிருந்து எழுந்து நின்று எதிர்ப்பை வெளியிட்டனர்.

**அண்ணன் - தம்பி மோதல்**


"ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய மகிந்தானந்தவுக்கு பேச வாய்ப்பளிக்கப்பட்டதும் மகிந்த அணியினர் ஆசனத்தில் அமர்ந்தனர். "மாதிவெலயில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ வீடுகள் அமைத்துள்ள தொகுதியில் நிறுத்தப்பட்டிருந்த கறுப்பு டிப்பென்டர் ரக வாகனம் சட்டத்துக்குப் புறம்பான செயல்களுக்குப் பயன் படுத்தப்பட்டது என்றும், அந்த டிப்பென்டர் என்னுடையது என்றும் ரஞ்சன் ராமநாயக்க மற்றும் ஆனந்த அளுத்கமகே ஆகியோரால் மாதிவெலயில் நடத்தப்பட்ட ஊடக வியலாளர் சந்திப்பில் என் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டு பொய்யானது. அந்த டிப்பென்டர் வாகனம் விளையாட்டுத்துறை அமைச்சினுடையது" என்று அவர் விளக்கமளித்தார். இதன்போது அவரின் சகோதரரான ஆனந்த அளுத்கமகே கூச்சலிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் விஜித ஹேரத் உரையாற்றத் தொடங்கியதையடுத்தே சபையில் சுமார் ஒன்றரை மணி நேரமாக நீடித்த வாக்குவாதம் முடிவுக்கு வந்தது.

(ந-ஜ-5)

# மகிந்தவுடன் இருந்தவர்களே மைத்திரியுடனும் உள்ளனர்

## விதுர விக்கிரமநாயக்க சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூன் 24
கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்சவை 25 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வோம், பயப்பட வேண்டாம், என்று கட்சி அமைப்பாளர்கள் கூட்டத்தில் கூறியவர்கள், இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் உள்ளனர். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒரு விசாலமான கட்சி. அதன் உயர்ந்த நோக்கங்களைக் கருதியாவது கட்சியை விழுவதற்கு விடக் கூடாது என்றே கருதுகின்றேன். எனது நிலைப்பாடு அது. கூட்டு எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு நாட்டுக்கு எதிரான கொள்கைகளை மக்களுக்கு தெரியப்படுத்தும் பணியைச் செய்கின்றேன் - என்று அவர் தெரிவித்தார்.

கடந்த அரசில், அமைச்சர்கள் அரச அதிகாரிகளை மரத்தில் கட்டிப் போட்டார்கள். இதற்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை. நானும் அந்தக் காலத்தில் அரசுடன் இருந்து கொண்டு சில விடயங்களை விமர்சனம் செய்தேன். தற் பொழுது அதுபற்றிய விமர்சனங்களைத் தெரிவிக்கும் எவரும் அன்று வாய் திறக்கவில்லை.

அன்று கட்சிக் கூட்டங்களில் குறிப்பிட்ட சிலர்தான் வாய் விட்டுப் பேசிக் கொண்டிருந்தனர். கட்சி அமைப்பாளர்கள் கூட்டத்திலும் பெரும்பாலானவர்கள் மௌனிகளாகவே இருந்தனர். அவ்வாறு பேசாத குழுவினர் இன்று தேர்தலில் தோல்வியுற்று வீட்டில் இருக்கின்றனர். சிலர் தேசியப் பட்டியலில் நாடாளுமன்றத்தில் உள்ளனர்.

இன்று கட்சி மாறியுள்ளது. பெயர் மாத்திரம்தான். மகிந்தவின் பெயருள்ள இடத்துக்கு மைத்திரியின் பெயர் வந்துள்ளது. அன்று மகிந்தவுடன் இருந்தவர்கள் கட்சியைப் பற்றிப் பேசாதது போன்று, இன்று மைத்திரியுடன் உள்ளவர்களும் வாய் மூடி மௌனம் காக்கின்றனர் - என்றார்.

(ந-ஜ-5)

# இந்தோனேசியாவில் ஒதுங்கிய அகதிகளை அழைக்கத் தயார்

## இலங்கை அரசு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 24
இந்தோனேசியாவில் கரையொதுங்கிய இலங்கைத் தமிழ் அகதிகள் 44 பேரையும் மீண்டும் அழைத்துக்கொள்வதற்கு தயார் என இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இந்தோனேசியாவில் கரை ஒதுங்கியுள்ள 44 அகதிகளும் அங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பயணம் செய்த படகை திருத்தி மீளவும், பன்னாட்டு கடற்பரப்புக்குள் தள்ளிவிட இந்தோனேசிய அதிகாரிகள் முயற்சி செய்கின்றனர். அவர்களை ஏற்றுக்கொள்ளத் தான் தயார் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

"அகதிகள் விரும்பினால் அவர்களை இலங்கைக்குத் திருப்பி அழைத்துக் கொள்ளத் தயாராக இருக்கின்றோம்" - என பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

"ஆச்சே மாகாணத்தில் தங்கியுள்ள அகதிகளைச் சந்திக்க அனுமதி கிடைத்துள்ளது. ஜகார்த்தாவிலுள்ள இலங்கைத் தூதுவர் இந்தத் தகவலை அனுப்பியுள்ளார். அகதிகளைச் சந்திப்பதற்கு மூன்று பேர் கொண்ட தூதரக அதிகாரிகள் குழு செல்கிறது. அகதிகளில் பலரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். ஆனால் நீண்ட காலமாக இந்தியாவில் வசித்தவர்கள்.

தூதரக அதிகாரிகள் மூவரும் அகதிகளைத் தனித்தனியாகச் சந்திப்பார்கள். அவர்களின் அடையாளங்களை உறுதி செய்வர். அவர்கள் நாடு திரும்ப விரும்பினால், அனைவரையும், புலம்பெயர்ந்தோருக்கான பன்னாட்டு அமைப்பு மற்றும் அகதிகளுக்கான ஐ.நா. முகவரமைப்பு ஊடாக திருப்பி அழைத்துக்கொள்வோம்" - என்றார்.

(ந-ஜ-5)

# போதைப்பொருள் வர்த்தகர்கள் மூவர் வெள்ளவத்தையில் கைது

போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட பிரபல வர்த்தகர்கள் மூவர் வெள்ளவத்தையில் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றது.

போதைப் பொருளைக் கொண்டு செல்ல பயன்படுத்திய இரு வாகனங்களும் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்கள் கைது செய்யப்படும்போது அவர்களிடம் 7 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பணமும் இருந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சுமத்தப்பட்டு, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட வெலே சுதா மற்றும் தர்மராஜா சுரேந்திரன் ஆகிய இருவருமே, கைது செய்யப்பட்டவர்களை இயக்கி வந்தனர் என பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவால் போதைப்பொருளை ஒழிக்கும் நடவடிக்கைக்காக இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. சுற்றிவளைப்பு வெற்றியளித்துள்ளது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

போதைப்பொருள் கடத்தலை நாட்டிலிருந்து இல்லாமல் செய்யும் வரை இவ்வாறான சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று பொலிஸ் தலைமையகம் கூறியது. (ந-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தண்டனையில் இருந்து தப்பும் கலாசாரம் தேவை தானா...?

இலங்கையில் ஆட்சி மாற்றம் முகிழ்த்து பதினேழு மாதங்கள் கடந்துவிட்டன. எனினும் தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்ளும் கலாசாரம் முடிவுக்குக் கொண்டுவரப்படவில்லை. இது விடயத்தில் முன்னேற்றம் எதனையும் காணமுடியாமல் இருப்பது ஆழ்ந்த கவலைக்கு உரியதாகும்.

அதனை அடியொற்றியே மீண்டும் மீண்டும் வன்முறைகள் இடம் பெறுகின்றன. அதற்கு முடிவு கட்டாமல், நிலைமாறு காலத்துக்கு வழிவகுப்பதும் நல்லிணக்கப் பொறிமுறைகள் வெற்றி அளிப்பதும் மிகமிகக் கடினமானதாகவே அமையும்.

மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டிருக்கிறார்கள், குற்றஞ் சுமத்தி உள்ளார்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள். அவர்கள் ஒருவர் இருவர் அல்லர். எழுபது பிரதிநிதிகள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே சுட்டிக் காட்டி உள்ளனர்.

இந்த நாட்டில், தண்டனையில் இருந்து தப்பிக்கொள்ளும் கலாசாரம் உயர்ந்து எழுந்து நிற்பதாலேயே, மீண்டும் மீண்டும் வன்முறைகள் அதிகரிக்கின்றன. இந்தக் கலாசாரத்துக்கு முடிவு கட்ட வேண்டியது மிகக் கட்டாயமானது. அது தட்டிக் கழிக்கப்பட்டால் நல்லிணக்கப் பொறிமுறைகள் வெற்றியளிப்பது மிகமிகக் கடினம்.

மறு வளமாக நோக்கும்போது--

''நல்லிணக்கம்'' என்ற பொன்நிறம் பூசப்பட்ட வார்த்தையை உச்சரிப்பதன் ஊடாக, எங்கள் நாட்டு நல்லாட்சி அரசு, உலக நாடுகளின் பாராட்டுக்களை அள்ளிக் குவிக்கிறது.

தண்டனையில் இருந்து தப்பிக் கொள்ளும் 'கலாசாரம்' இந்த நாட்டில் நிலவும் வரை, நல்லிணக்கப் பொறிமுறைகள் வெற்றி அளிப்பது கடினம் என்று, சிவில் சமூகப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டிய யதார்த்தத்தை, அரசு புரிந்து கொள்ளும் என்று எதிர்பார்க்க இயலாது. அதுவே யார்த்தமும் ஆகும்.

நல்லிணக்கம் என்ற மந்திரத்தால் மாங்காயை வீழ்த்திவிட முடியாது. இதனை நல்லாட்சி அரசு உணர்வதும் மனங்கொள்வதும் எப்போதோ...?

தமிழ் மக்கள் அளித்த பேராதரவால், அள்ளிப் போட்ட வாக்குகளால், நாட்டின் ஆட்சித் தலைமையைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதியும், பிரதமரும் பேசி நல்ல முடிவுக்கு வரவேண்டும். நம்பிக்கையுடன் எதிர் பார்க்கலாமா?

தெற்கின் அரசியல் தலைவர்களின் உடலில் ஓடும் வழமையான ஆண்டாண்டுகால இனவாத, இனத்துவேச இரத்தத்தைத் துடைப்பதற்கு, அவர்களின் மனம் இடம் தர மாட்டாதாமே; நாம் என் செய்வோம் என்று கைவிரிக்கும் பாங் கில் முதலைக் கண்ணீர் வடிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம். அவ்வளவே...!

# மீனவர்களின் கனவுத் துறைமுகமா கழுதைப்பிட்டி?

வந்தியத்தேவர்

காலம் காலமாக புங்குடுதீவு மீனவர்களின் பயன்பாட்டில் இருந்து வந்த கழுதைப்பிட்டி மீன்பிடித்துறைமுகம் நாட்டுச் சூழலால் ஏனைய துறைமுகங்களைப் போன்று கடற்படையின் ஆதிக்கத்தில் சிக்கிக் கொண்டது. தீவுப் பகுதியில் மீள்குடியமர்வு இடம்பெற்றதைத் தொடர்ந்து நெடுந்தீவு, குறிகாட்டுவான் துறைமுகங்களில் நிலை கொண்ட கடற்படையினரை அந்த இடங்களை விட்டு வெளியேற்றுமாறு கோரிக்கைகள் எழுந்தன. அதைப்போன்று புங்குடுதீவு கழுதைப்பிட்டி மீன் பிடித் துறைமுகத்தை விட்டு அங்குள்ள படையினரை வெளியேற்றிக் குறிப்பிட்ட துறைமுகப் பிரதேசத்தைத் தம்மிடம் வழங்குமாறு இப்போது புங்குடுதீவு மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

### மீனவர்களின் கோரிக்கை

மீனவர்களின் கோரிக்கை வேலணைப் பிரதேச செயலர் சுகுணரதி தெய்வேந்திரனுக்கு புதிய தலையிடியை உண்டு பண்ணுவதாக உள்ளது.

மீனவர்களின் இந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு கழுதைப்பிட்டி துறைமுகத்தை மீண்டும் அவர்களிடம் கையளிப்பதால் அங்குள்ள கடற்படைக்கு எந்த நட்டமும் ஏற்படப் போவதில்லை. தீவுப் பகுதியின் பாதுகாப்புக்கு அதனால் பெரிய அச்சுறுத்தல் வந்துவிடப் போவதுமில்லை. கழுதைப்பிட்டித் துறைமுகப் பிரதேசத்தில் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை. இப்போது கடற்படையினரின் கால் சுவடுகள் மட்டுமே அங்கே படக்கூடியதாக உள்ளது. அந்தப் பகுதியில் உள்ள இரண்டொரு மீனவர்களின் சிறிய மச்சுவாய் எனப்படும் தோணிகள் மிதந்து கொண்டிருக்கின்றன. கடற்படையின் பயன்பாட்டிலுள்ள ஒரு படகும் காணப்படுகின்றது. அது ஒரு வெறும் சூனியப் பிரதேசமாகவே இப்பொழுது காணப்படுகிறது.

போர் மற்றும் இடம்பெயர்வுகளுக்கு முன்னர் கழுதைப்பிட்டி ஒரு கலகலப்பான துறைமுகமாக இருந்துள்ளது. பல நூற்றுக்கணக்கான படகுகளில் கடல் வளங்கள் அள்ளி வரப்பட்டு அந்த மக்களின் வாழ்வாதாரம் உயர்ந்து காணப்பட்டது. அழிந்து கிடக்கும் கட்டடங்களும் இடிந்து கிடக்கும் வீடுகளுமே அதற்குச் சான்றாகும். இழந்த வாழ்க்கையைத் திரும்பப் பெற அந்தப் பகுதி மக்களும் மீனவர்களும் முயற்சிக்கிறார்கள். அதனாலேயே துறைமுகப்பகுதியை தங்களிடம் ஒப்படைக்க வலியுறுத்துகிறார்கள். மகிந்த அரசில்தான் மக்களது கோரிக்கைகள் செவிடன் காதில் ஊதிய சங்காக இருந்தது என்றால், நல்லாட்சி என்று பேசப்படும் மைத்திரியின் அரசிலும்கூட எமது கோரிக்கைகள் செவிடன் காதில் ஊதிய சங்குதானா என்பதே மக்களின் கேள்வியாக ஒலிக்கிறது. மக்களின் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு கழுதைப்பிட்டித்துறைமுகப் பகுதியை அவர்களிடம் ஒப்படைப்பதே முறையாகும். அதற்காக கழுதைப்பிட்டிக்குச் சென்று அங்குள்ள கடற்படை அதிகாரியைச் சந்தித்துப் பேசிய பிரதேச செயலர், காலம் முழுவதும் உதவிகளை வழங்கிக் கொண்டிருக்க முடியாது, அந்த மீனவர்களை தொழில்களை இழந்தவர்களாகக் கருதிக் கொள்ள முடியாது. அவர்களின் பொருளாதார வளங்களை முடக்கி வாழ்வாதாரமற்ற ஏதிலிகளாக்கிக் கொண்டிருக்க முடியாது. அவர்களின் வாழ்வாதாரத்துக்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அதிகாரிகளின் கடமை என்று தெளிவுபடுத்தியிருந்தார்.

> மகிந்த அரசில் தான் மக்களது கோரிக் கைகள் செவிடன் காதில் ஊதிய சங்காக இருந்தது என்றால் நல்லாட்சி என்று பேசப்படும் மைத்திரியின் அரசிலும் கூட எமது கோரிக்கைகள் செவிடன் காதில் ஊதிய சங்குதானா என்பதே அவர்களது கேள்வி யாக ஒலிக்கிறது. மக்களின் இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு கழுதைப் பிட்டித் துறைமுகப் பகுதியை அவர்களிடம் ஒப்படைப் பதே முறையாகும்.

இந்தத் துறைமுகத்தின் அபிவிருத்திக்கென ஒதுக்கப்பட்ட நிதி திருப்பப்பட்டு மீண்டும் தற்போது கிடைத்துள்ளது. துறைமுகத்தை அபிவிருத்தி செய்து மீனவர்களுக்கு உதவவேண்டும். எனவே கழுதைப்பிட்டித்துறைமுகத்தை கையளிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கடற்படையினரின் வலியுறுத்தப்பட்டுள்ளது. யதார்த்தத்தைக் கடற்படைக்கு பொறுப்பான அதிகாரி புரிந்து கொண்டிருந்தாலும்கூட அது தன்னால் ஆகக்கூடிய ஒன்றல்ல எனக் குறிப்பிட்டார். "உங்களது கோரிக்கையை என்னால் செயற்படுத்த முடியாது. இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு கடற்படையின் உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டால் அவர்கள் முடிவைத் தெரிவிப்பார்கள். அப்போது துறைமுகத்தை விடுவதற்குத் தடையிருக்காது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

கழுதைப்பிட்டித் துறைமுகம், எப்போதாவதுவரும் கடற்படையின் உயர் அதிகாரிகள் நயினாதீவு குறிகாட்டுவான், நெடுந்தீவுப் பகுதிகளுக்குச் செல்வதற்காக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது. உயர் அதிகாரிகளால் காரைநகரில் இருந்தே இந்த இடங்களுக்கு இலகுவாகப் பயணிக்க முடியும்.

புங்குடுதீவில் கடற்படை முகாமுக்கு என 14 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும். கூறப்படுகின்றது.

இந்த நிலையில் கழுதைப்பிட்டியிலோ குறிகாட்டுவானிலோ கடற்படையினர் தரித்திருக்க வேண்டிய தேவை இல்லை. வயல் நிலங்களில் இராணுவத்தினரும் கடற்பிராந்தியங்களின் கடற்படையுமாக தமிழ்ப் பிரதேசங்களின் வளங்களை முடக்கிவைத்து தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை நொறுக்குவது தவறு. மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் விடயங்கள் குறித்து நேர்சீரான கண்ணோட்டமும் நியாயமான நடவடிக்கையும் தேவை. அரசும் பாதுகாப்புத்துறையும் இந்த விடயத்தில் நீதியாக நடந்து கொள்வது அவசியம்.

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் நல்லாட்சி அமைய

# ஆங்கிலேயரின் எத்தனங்கள்

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா

ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் யாழ். குடாநாடு, யாழ்ப் பாணம், வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, தீவுப் பற்று என்னும் எட்டு மணியகாரர் பிரிவு களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. வட மாகாண அரச பிரதிநிதியின் கீழ் அவ ருக்குதவியாய் ஒவ்வொரு மணியகாரர் பிரிவுகளுக்கும் மணியகாரர் ஒருவரும் அவரின் கீழ் பல உடையார் விதானை மாரும் நியமிக்கப்பட்டனர். அரசிறையை ஒழுங்காய்ச்சேர்ப்பதற்கும் குடிமக்களைப் பாதுகாப்பதற்கும் இவர்கள் உதவி புரிந்து வந்தனர். நீதி செய்து பரிபாலனம் பண்ணும் பொருட்டு யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை, மல்லாகம், பருத்தித் துறை, சாவகச்சேரி ஆகிய இடங் களில் பொலிஸ் நீதிமன்றங்களை உருவாக்கி அவற்றுக்கு வேண்டிய கட்டடங் களையும் கட்டிப் பொலிஸ் மற் றும் நீதிபதிகளையும் உத்தியோகத் தர்களையும் நியமித்து அவை சீராக நடைபெற ஒழுங்கு செய்தனர். தீர்க்கப்படாத பெரிய வழக்குகள் உயர் நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்படும். இது வருடத்தில் இரண்டு முறைகூடும். மேலும்சில வழக்குகளை பிறிவிக்கவுன் சிலும் பொறுப்பேற்கும்.

சாவுத்தண்டனை தேசாதிபதியின் உத்தரவின்றி நடைபெறமாட்டாது. இவ் வகையாய் நீதி பரிபாலன சேவை சிறப் பாக நடைபெற்றது.

மக்களின் வசதிக்கும் நல்வாழ்வுக்கும் உதவும்பொருட்டுகச்சேரி, தபாற்கந்தோர் கள், பொறியியல் கந்தோர், காணிப் பதி வுக் கந்தோர் ஆகிய பல நிறுவனங்கள் நிறுவப்பட்டன. போக்குவரத்துக்கு வசதி யாகப் பல தெருக்கள் செப்பனிடப்பட் டன.

தத்தம் வருணாசாரம் சமயாசாரம் என்பவற்றுக்கு சுயாதீனம் கொடுக்கப் பட்டது. உடனே கொட்டில்களிலும் கோயில்களெல்லாம் வெளிப்படத் தொடங்கின. ஆராதனைகள் வாத்தியக் கோஷங் களோடு நடக்கத் தொடங்கின. இடித்த கோயில்களை மீளக்கட்டிக் கொள்ளவும் அனுமதி கொடுக்கப்பட்டது. நிலமும் கொடுக்கப்பட்டது. சைவாலயங் களுக்கு அர்ச்சகர்களும் அரசினரால் நியமனம் பெற்றார்கள். இங்ஙனம் அந்தநாளில் தேசாதிபதியின் கைச்சாத் தோடு நியமனங்கள் வழங்கப்பட்டன. நல்லூர்க் கந்தசுவாமி கோயில் அர்ச்ச கராகப் பாலசுப் பிரமணிய ஐயருக்கும் இந்த நியமனம் அன்று வழங்கப்பட்டது. 1823இல் வட்டுக்கோட்டையில் அமெ ரிக்க மிஷனரிமார் பெரிய கல்லூரியை நிறுவினர். அந்தக் காலத்தில் இதற்கு ஒப்பான ஓர் ஆங்கில வித்தியாசாலை இலங்கையிலும் இந்தியாவிலும் இல்லை. ஆசியாக் கண்டத்தில் நிறுவப் பட்ட முதலாவது கல்லூரி இதுவாகும். புகழ்பெற்ற நூலகத்துடன் யாழ்ப்பாணக் கல்லூரி மிளிர்ந்ததை யாவரும் அறிவோம். 1824 இல் உடுவிலில் ஒரு பெண்கள் பாடசாலை நிறுவப்பட்டது. இதுவும் ஆசியாக் கண்டத்தில் முதன் முதல் நிறுவப்பட்ட பெண்கள் கல் லூரியாகும். பின்னர் யாழ்ப்பாண மத் திய கல்லூரி பேர்சி வலினால் நிறுவப் பட்டது. வட்டுக்கோட்டை கல்லூரி நிறுவப்பட்டு 18 வருடங்களின் பின்னர் சுண்டிக்குழியில் சென்.ஜோன்ஸ் கல் லூரியும், 27 வருடங்களின் பின்னர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி யும் அமைக்கப்பட்டன. இந்த வகையான முயற்சி களினால் சுதேச ஆங்கி லேய உயர்தரக் கல்வி யாழ்ப்பாணத்திலே அதிக விருத்தி பெற்றது.



அமெரிக்கச் சங்கத்தினர் 1820 இல் பண்டத்தரிப்பில் ஒரு வைத்தியசாலையை நிறுவி நோயாளரைப் பரிகரித்தும், சிலருக்கு வைத்தியக் கல்வியைக் கற்பித்தும் வந்தனர். மானிப்பாயில் அச்சு இயந் திரத்தை நிறுவி அதைச் செம்மையாய் நடத்தி அனேக புத்தகங்களை அச்சடித்துப் பரப்பினர். இங்ஙனமாகக் குடாநாட்டில் கல்வியறிவு, சீர்திருத்தம், நல்லொழுக்கம் ஆகியன தேற்றம் பெற்றுச் சிறந்து விளங்கின. யாழ்ப்பா ணத்திலே ஆங் கிலேயர் அரசு பல வரு டங்களாக நடைபெற்றது. வல்லவன் பம் பரம் மணலிலும் ஆடும் என்பார்கள். வல்ல வருஞ் செல்வருமானோர் காரிய மனுகூல மாக, சாதிக்க கட்டுப்பாடு பல மாயிருக்க, எளியோர் பாடு இடுக்கணையாயிருந்தது. இதனால் நடுப் பகல் சூரியப் பிரகாசம் போன்று மக்கள் இலகுவாய்ப் பண்ட மாற்றுச் செய்வதற்கு உதவியாக யாழ் பட்டணத்தின் பெரிய கடையிலே பல கடைகள் உண்டாகவும், சங்கானை, சுன்னாகம், அச்சுவேலி, வல்வெட்டித் துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் விசேட சந்தைகள் கூடவும் கொட்டகைகள் கட்டப்படவும் ஒழுங்குசெய்தனர்.

மேலும், விவசாயம் முன்னேறப் பல நீர்ப்பாசனக் குளங்களைத் திருத்தி, வெள்ள வாய்க்கால்கள் மற்றும் மதகு களைச் செம்மைப்படுத்தியும் வந்தனர். எனவே யாழ்ப்பாணத்தின் ஏற்றத்தை யும், தேற்றத்தையும் அழிக்கும் குரு விச்சைகளை இனம்கண்டு வெறுத்துத் தள்ளி உத்தம வகைகளைக் கைக் கொள்வோமாயின் யாழ்ப்பாணம் அதி யுன்னதமாய்த் திகழும்.

## சிறிதேனும் சிந்திக்கக்கூடாதா?

குடாநாட்டில் இப்போது திருவிழாப் பருவகாலம். பரவலாக குடாநாட்டின் பெரும்பாலான கிராமங் களில் உள்ள கோயில்களில் வருடாந்த மகோற்சவங்கள் இடம்பெறும் காலம் இது.

கோயில்களில் இடம்பெறும் திருவிழாக்களின்போது ஒலிபெருக்கிகள் பயன்படுத்தப்படுவதால் குறித்த கோயில்களின் அயற் சூழலிலுள்ள வீடுகளில் வாழும் குடும்பத்தவர்களது பிள்ளைகளது கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைகின்றன எனப் பல தரப்புக்களிலிருந்தும் விமர்சனங்கள் எழுகின்றன. பத்திரிகை ஊடகங்களில் கட்டுரை, வாசகர் கடிதம் போன்றவற்றினூடாக ஒலிபெருக்கிப் பயன்பாட்டின் மூலமான பாதிப்புக்கள் குறித்து கருத்துக்கள் வெளிப்படுத்தப்படு கின்றன. இருந்தபோதிலும் கடந்த சில நாள்களாக ஊர்மனைகளில் இடம்பெற்ற, இடம்பெறும் கோயில் திருவிழாக்களில் இந்த ஒலிபெருக்கிப் பாவனை கட்டுப்படுத்தப்பட்டதாகவோ, மட்டுப் படுத்தப்பட்டதாகவோ உணர முடியவில்லை. சம்பந்தப்பட்ட கோயில் நிர்வாகத் தரப்புக்களோ அன்றேல், குறித்த ஒலிபெருக்கிப் பாவனைக்கு அனுமதி வழங்கும் அரச நிர்வாகத் தரப்புக்களோ இந்த விடயத்தைக் கொஞ்சமேனும் சட்டை செய்வதை அவதானிக்க முடியவில்லை. எல்லாமே செவிடன் காதில் ஊதிய சங்கொலிபோன்று புறந்தள்ளப்படுவது மனதுக்கு நெருடலை ஏற்படுத்துகிறது.

இது ஒரு புறமிருக்க, குறித்த கோயில்களின் திருவிழா உபயகாரர்கள் தத்தமது வசதி வாய்ப்புக் களை நிதி நிலை வசதியை ஏனையோருக்கு வெளிக்காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்ளும் விதத்தில் ஏட்டிக்குப் போட்டியாக தவில் – நாதஸ்வரக் கோஷ்டிகளை அளவுக்கு அதிகமாக கச்சேரிகளுக்கு ஒழுங்குசெய்து நேரகாலக் கட்டுப்பாடு இல்லாது திருவிழாக்களை நள்ளிரவு வரை இழுத்தடித்து ஆண்டவன் மீதான உண்மையான பக்தியுணர்வை மழுங்கடிக்கின்றனர். தமது சுயகௌரவத்தை சமூகத்தின் மத்தியில் வெளிச்சம் போட்டுக் காட்ட முயல்வதைக் காணும் போது உண்மையில் இவர்கள் இன்னமும்கூட வாழ்க்கைப்பாடம் கற்றுத் தெளிந்தவர்களாக இயலாத நிலையில் உள்ளோர்களா என்ற சந்தேகம் மனதில் எழுகிறது.

ஆண்டவன் வெறும் ஆடம்பரங்களையும் அநாவசிய செயற்பாடுகளையும் ஒருபோதும் ஏற்ப தில்லை என்பதனை மனதிருத்துவோம்.

எமது தமிழினத்தின் இன்றைய அவலத்தைப் போக்கியருளி எம்மையெல்லாம் நல்வாழ்வு வாழ அருளுமாறு மனதொன்றி ஆண்டவனைத் துதித்திடுவோம்.

ராஜா, கோண்டாவில்.

## மாணவர்களை நல்வழிப்படுத்துவதே ஆசிரியர்களின் நோக்கமாகும்

உதயன் பத்திரிகையின் நேற்றைய பதிப்பில் "ஆசிரியர் விட்டார் அறை; கிழிந்தது மாணவன் செவிப்பறை" என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்தச் செய்தியை இவ்வளவு பெரிதுபடுத்தி வெளியிடத்தான் வேண்டுமா? "அடியாத மாடு படியாது" என்பார்கள் முன்னோர்கள். மாணவர்களை நல்வழிப்படுத்தவே சில வேளைகளில் ஆசிரியர்கள் கண்டிப்புடன் நடந்து கொள் கிறார்கள்.

அத்தகைய விடயங்களை ஊடகங்கள் பெரிதுபடுத்துவது, ஆசிரியர்களிடையே ஒருவித அச்சத்தை ஏற்படுத்திவிடும். அவர்கள் மாணவர்களைக் கண்டிக்காமலேயே விட்டுவிடுவார்கள்.

கண்டிப்பு அற்ற கற்பித்தல் முறைமையினால் நாம் ஏற் கனவே எமது இளம் சமுதாயத்தின் வாழ்க்கையைத் தொலைத்து நிற்கிறோம். இனியும் அத்தகைய நிலை வேண்டாம்.

எனவே இதுபோன்ற சம்பவங்களை உதயன் வெளியிடாமல் இருப்பதே சிறந்தது. இல்லையேல் மாணவர் சமுதாயத் தைக் கெடுத்த பெயர் உதயனையே சாரும். எந்தெவரு ஆசிரியரும் மாணவனின் செவிப்பறை கிழிய வேண்டும் என்று அடிப்பதில்லை தானே! அதைக் கவனத்தில் கொள்க.

குணாளன், சாவகச்சேரி

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபிய தலைநகரில் கடும் மோதல்

திரிபோலி, ஜூன் 24
லிபியாவில் அரச படைகளுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே கடும் மோதல் நடைபெறுகின்றது. தலைநகர் திரிபோலியில் ஏற்பட்ட மோதலில் 60 பேர் உயிரிழந்தனர் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். சிர்ட்டே பகுதில் ஏற்பட்ட மோதலில் 36 பேர் உயிரிழந்தனர். சிர்ட்டே நகர் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டது. ஐ.எஸ். அமைப்பைச் சேர்ந்தவர்கள் மனிதக் குண்டுத் தாக்குதல்களை நடத்துகின்றனர். அதன் மூலமே அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டன. லிபியாவில் உள்ள கிளர்ச்சியாளர்கள் ஐ.எஸ். அமைப்பின் பின்னணியுடனே போராடுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)



தென்-மேற்கு சீனாவில் தொடர்ந்து கன மழை பெய்கின்றது. சோட்றொங் மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக, 2 ஆயிரம் மக்களை வீடுகளைவிட்டு வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வெள்ளத்தில் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. மீட்புப் படை வீரர்கள் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (ற-ரி4)



# 200 அகதிகள் பட்டினிச் சாவு

அபுஜா, ஜூன் 24
நைஜீரியாவில் 200 அகதிகள் பட்டினியால் இறந்தனர். போகோஹறம் அமைப்பில் இருந்து தப்பி வந்த அகதிகளே இறந்தனர்.
போகோஹறம் அமைப்பிடம் இருந்து தப்பிய 24 ஆயிரம் அகதிகள் மனிதாபிமான உதவிக் குழுவால் பொறுப்பேற்கப்பட்டனர். அவர்களில் 200 பேர் நீரிழப்பாலும், பட்டினியாலும் உயிரிழந்தனர்.
பாமா பகுதியிலேயே அதிகளவு உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. அங்குள்ள அகதி முகாமில் தினமும் 30 பேர் வரையில் உயிரிழக்கின்றனர்.
நைஜீரியாவில் நடந்து வரும் மோதல்களால் 7 ஆண்டுகளில் 20 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். சுமார் 2 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். (ற-ரி4)



# மின்னல் தாக்கி 79 பேர் சாவு

புதுடில்லி, ஜூன் 24
இந்தியாவில் மின்னல் தாக்கி 79 பேர் உயிரிழந்தனர். பீகார், ஜார்க் காண்ட், மத்திய பிரதேச மாநிலங்களிலேயே இந்தச் சம்பவங்கள் நடந்துள்ளன. பீகாரில் 53 பேரும், ஜார்க்கன்டில் 10 பேரும், மத்திய பிரதேசத்தில் 16 பேரும் இறந்தனர். வயல் பகுதிகளில் வேலை செய்த பலரே உயிரிழந்தனர். 2005 ஆம் ஆண்டில் இருந்து வருடத் துக்கு 2 ஆயிரம் பேர் மின்னல் தாக்கத்தால் உயிரிழக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-ரி4)

# கைதிகளின் உ
# சீனச் சிறைக

## அதிர்ச்சித் தகவல்கள் வெளிவர

றெறண்றோ, ஜூன் 24
சீனாவில் சிறைக் கைதிகளிடம் இருந்து உடல் உறுப்புக்கள் திருடப்படுகின்றன. அதற்கான ஆதாரங்களை கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் டேவிட் கில்கர், மனித உரிமை வழக்கறிஞர் டேவிட் மற்றாஸ், ஊடகவியலாளர் ஏதன் கட்மன் ஆகியோர் இணைந்து வெளியிட்டனர்.
சீன அரசு, சுகாதாரக் கட்டமைப்பு, மருத்துவர்கள், மருத்துவமனைகள் மீது குற்றஞ்சாட்டப்படுகின்றது.
ஆண்டுக்கு 10 ஆயிரம் உடல் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகள் அங்கு நடைபெறுகின்றன. பிரபலமான 3 மருத்துவமனைகளில் இருந்து இதற்கான ஆதாரங்கள் பெறப்பட்டுள்ளன. சீனாவில் உத்தியோகபூர்வ மற்று ஏறத்தாழ 60 ஆயிரம் முதல் ஒரு லட்சம் உடல் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகள் நடைபெறுகின்றன என்று சந்தேகிக்கப்படுகின்றது. சாவுத் தண்டனை வழங்கப்பட்டுள்ள கைதிகளிடமிருந்தே அதிகளவு உடல் உறுப்புக்கள் திருடப்படுகின்றன.
சாவுத் தண்டனை பற்றிய விவரங்கள் சீனாவில் வெளியிடப்படுவதில்லை. அது உடல் உறுப்புத் திருட்டுக்கு வசதியாக அமைந்துள்ளது. 2014 ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 400 பேருக்கு சாவுத் தண்டனை வழங்கியது சீனா. இது உத்தியோகபூர்வ



தகவலாகும். உ
தகவல்களை சீன
படுத்துவதில்லை
சாட்டப்படுகின்றது
ஆசியாவில் உட
பனையின் பிரதா
மான சந்தையாக



# வெற்றியீட்டிய அணியை வரவேற்க திரண்ட மக்கள்

வொஷிங்டன், ஜூன் 24
அமெரிக்காவின் ஒகியோ மாகாணத்தில் கூடைப்பந்தாட்ட அணி ஒன்றை 1.3 மில்லியன் மக்கள் திரண்டு வரவேற்றனர்.
கிலெவெலாண்ட் பகுதியைச் சேர்ந்த கூடைப்பந்தாட்ட அணி வரலாற்று வெற்றி ஒன்றைப் பெற்றுள்ளது. 50 ஆண்டுகளுக்குப் பின்னர் அந்த அணி தேசிய ரீதியிலான போட்டியில் வெற்றியீட்டியுள்ளது. வெற்றியீட்டித் திரும்பிய அணியை மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். 52 ஆண்டுகளாகப் பல வீரர்கள் செய்த முயற்சியை இந்த வீரர்கள் சாதித்துள்ளனர். அவர்களை திரண்டுவரவேற்றது மகிழ்ச்சியளிக்கின்றது என்று ஒகியோ மாகாண முன்னாள் கூடைப் பந்து வீரர் ஒருவர் தெரிவித்தார். (ற-ரி4)

# 20 செயற்கைக்கோள்களை

புதுடில்லி, ஜூன் 24
ஒரே தடவையில் 20 செயற்கைக் கோள்களை வானில் நிலைநிறுத்தி இந்தியா சாதனை படைத்துள்ளது. ஸ்ரீ ஹரிகோட்டா ஏவுதளத்தில் இருந்து இவை விண்ணுக்கு ஏவப்பட்டன.
3 ஆண்டுகளுக்கு முன்னர் நாசா விண்வெளி மையம் 29 செயற்கைக் கோள்களை ஒரே தடவையில் வானில் நிலைநிறுத்தியிருந்தது. இந்தியா முன்னரும் ஒருமுறை இந்த முயற்சியை எடுத்தது. அது தோல்வியில் முடிந்தது. தற்போது செயற்கை
கோள்களின் நிறை குறைக்கப்பட்டது.
செயற்கைக் கோள்கள் இந்திய தயாரிப்
கும். 13 செயற்கைக் கோள்கள் அமெரி
காவிடம் கொள்வனவு செய்யப்பட்ட
அவற்றில் ஒன்று கூகுள் செயற்கைக் கோ
கும்.
"ஒரே தடவையில் செயற்கைக் கோள்க
நிறுவுவது செலவு குறைவானது. திறன் வாய்
தாகும்" - என்று இந்திய ஆராய்ச்சி மைய
தலைவர் கிரண் குமார் தெரிவித்தார். (ற-ரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 69 மணிநேரம் யோகா

## புதிய உலக சாதனை

சென்னை, ஜூன் 24

இந்தியாவில் 69 மணித்தியாலங்கள் யோகா செய்து சாதனை நிகழ்த்தப்பட்டது.

சர்வதேச யோகா தினத்தையொட்டி கின்னஸ் உலக சாதனை முயற்சியாக தனிநபர் யோகாசன நிகழ்ச்சி தமிழகத்தின் பொள்ளாச்சியில் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்ட குணசேகரன் என்பவர் கடந்த நான்கு நாள்களாக சுமார் 240 வகையான ஆசனங்களைச் செய்து 69 மணிநேர தொடர் யோகாசனத்தை நிறைவு செய்தார். முந்தைய உலக சாதனைகளை முறியடித்து புதிய கின்னஸ் சாதனையை உருவாக்கினார். கின்னஸ் விதிமுறைகளின்படி ஒருமணி நேரத்துக்கு 5 நிமிடம் இடைவெளிவிட்டு பலவகையான யோகாசனத்தை செய்து காண்பித்தார். சாதனை முயற்சியின் போது அவர் பழங்களையே உட்கொண்டார்.

திருப்பூர் மாவட்டத்தில், ராகல்பாவி பகுதியை சேர்ந்தவர் 45 வயதான குணசேகரன். யோகா ஆசிரியரான இவர் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக யோகாசனம் கற்பித்து பல விருதுகளைப் பெற்றவர்.

இந்தச் சாதனையை அங்கீகரிக்க நிகழ்ச்சியின்போது கின்னஸ் நிறுவன பிரதிநிதிகள் எவரும் நிகழ்ச்சி மண்டபத்தில் இல்லை. இந்தச் சாதனை தொடர்பான ஒளிப்படங்கள் மற்றும் வீடியோ பதிவுகளை கின்னஸ் நிறுவனத்துக்கு அனுப்பி இந்தச் சாதனை கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்யப்படும் என குணசேகர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் சீனாவைச் சேர்ந்த ஒரு குழுவினர் தொடர்ந்து 47 மணிநேரம் யோகாசனம் செய்ததுதான் உலக சாதனையாக உள்ளது. (ற-ரி4)






IMAGE POSTED ON FACEBOOK BY Unique World

# உடல் உறுப்புகள்
# களில் திருட்டு

வந்தன



"சாவுத் தண்டனை பற்றிய விவ ரங்கள் சீனாவில் வெளியிடப்படுவதில்லை. அது உடல் உறுப்புத் திருட்டுக்கு வசதியாக அமைந்துள்ளது. 2014 ஆம் ஆண்டு 2ஆயிரத்து 400 பேருக்கு சாவுத் தண்டனை வழங்கியுள்ளது சீனா."

ம். உண்மையான
ள சீன அரசு வெளிப்
ல்லை என்று குற்றஞ்
ின்றது.
ல் உடல் உறுப்பு விற்
பிரதான – பிரமாண்ட
தயாகச் சீனா காணப்

படுகின்றது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. உடல் உறுப்புகளுக்காக சிறுபான்மையினர், பிற மதத்தினர் சீனாவில் கொல்லப்படுகின்றனர்.

சீனாவின் தகவல் அடிப்படையில் 2 ஆயிரத்து 766 பேர் உடல் உறுப்புக்களைத் தானம் செய்துள்ளனர். அப்படியிருக்க 7 ஆயிரத்து 782 உடல் உறுப்புக்கள் மாற்றப்பட்டுள்ளன.

சீனாவில் உடல் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு 100 வரையிலான வைத்தியசாலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் 712 வைத்தியசாலைகள் இந்த அறுவைச் சிகிச்சைகளைச் செய்கின்றன.10 ஆண்டுகளுக்கு முன்னர் கூட இந்தக் குற்றச்சாட்டு எழுந்தது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அப்போது சீன அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். (ற-ரி4)

# அமெரிக்காவை ஏவுகணையால் அச்சுறுத்துகின்றது வடகொரியா

வொஷிங்டன், ஜூன் 24

வடகொரியாவின் ஏவுகணைச் சோதனை அமெரிக்க இராணுவத்துக்கு விடுக்கப்பட்ட நேரடி அச்சுறுத்தல்.

இவ்வாறு அமெரிக்காவின் பசிபிக் பிராந்திய இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

இந்த ஏவுகணை மூலம் 2 ஆயிரம் முதல் 4 ஆயிரம் கிலோமீற்றர் தூர இலக்குகளைத் தாக்க முடியும். அமெரிக்க, பசிபிக் இலக்குகளையும் தாக்க முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடகொரியா தனது ஏவுகணைச் சோதனை குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அயல் நாடுகளுக்குப் பாதகம் வராத வகையில் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்தப்பட்டுள்ள இந்த ஏவுகணை ஆயிரத்து 400 கிலோமீற்றர் தூரம் பயணித்தது என்றும் குறிப்பிடப்பட்டது. (ற-ரி4)

## மரண அறிவித்தல்

பிறப்பு 04 . 04 . 1950



இறப்பு 22 . 06 . 2016

### திருமதி சறோஜினிதேவி குலேந்திரராஜா

(ஓய்வுபெற்ற கணித ஆசிரியை -சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயம்)

ஏழாலை தெற்கு, சூராவத்தை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தி சறோஜினிதேவி குலேந்திரராஜா 22.06.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், சு குலேந்திரராஜாவின் (நில அளவையாளர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுந் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், நிரோஷன் (பொறியியலாளர் - நியூசிலாந்து), சி (Ph.D. Student - USA ), கஜந்தன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தா பார்த்தீபன் (பொறியியலாளர் -USA ). ஜயரூபி (பொறியியலாளர் - நியூசிலாந்து) ஆகியோரின் மாமியாரும், சந்திராதேவி - கமலநாதனின் (ஓய்வுபெற்ற உதவி நூலகர் - சுன்னாகம்) அ சகோதரியும், நாகேந்திரம், சுதேந்திரன் (ஓய்வுபெற்ற பொறியியலாளர்), தவமணி, தன கமலநாதன் (திட்ட ஆலோசகர்) ஆகியோரின் மைத்துனியும், ஹரின், மாதுளா ஆகியோரின் அ பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.06.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அ இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் சுன் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
சூராவத்தை, சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 224 0706, 077 363 8089

0 (11.18)

# ள நிலை நிறுத்தியது இந்தியா

ற்கைக்
டடது. 7
பாரிப்பா
அமெரிக்
பட்டன.
கோளா

ள்களை
வாய்ந்த
மையத்
.(ற-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை

# பிறந்த எண்ணின் பலன்கள் 7

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 7 குறித்த விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன.)

இவர்கள் சில சமயங்களில் மட்டுமே கலகலப்பாகப் பழகுவார்கள். பல சமயங்களில் தனிமையை விரும்புவார்கள். 6 ஆம் எண்காரர்கள் எதையும் பணத்துடன் தொடர்புபடுத்திப் பார்ப்பார்கள். ஆனால், இவர்களோ கலைக்காகவே அதில் ஈடுபடுவார்கள். இவர்கள் அரசியலில் ஈடுபட்டால், மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்காகவே தங்களது வாழ்க்கையைச் செலவிடுவார்கள்.

**உடல் அமைப்பு**

இந்த எண்காரர்கள் பொதுவாக உயரமும், சற்று மெலிந்த உடலும் கொண்டிருப்பார்கள். உடல் உறுப்புக்கள் மிகவும் நேர்த்தியாக அமைந்திருக்கும்.

மூக்கு சற்று நீண்டு வளைந்து காணப்படும். கை,கால் விரல்கள் திருத்தமாகவும், அழகுடனும் காணப்படும். சில அன்பர்களுக்குச்சிறுஉடல்குறைபாடும் அமைந்து விடும்.

**அதிர்ஷ்ட தினங்கள்**

ஒவ்வொரு மாதமும் 2, 11, 20, 29ஆம் திகதிகள் மிகுந்த அதிர்ஷ்டகரமானவை. 1, 10, 19, 28 ஆகிய திகதிகளும் நன்மையையே அளிக்கும். 7, 16, 25 ஆகிய நாள்கள் சுமாரான பலன்களையே கொடுக்கும். எனவே இவற்றைத் தவிர்த்து விடவும். கூட்டு எண் 7 அல்லது 8 வரும் நாள்களையும் ஒதுக்கி விடவும். அதே போன்று கூட்டு எண் 2 மற்றும் 1 வரும் நாள்களும் அதிர்ஷ்டமானவை.

**அதிர்ஷ்ட வர்ணங்கள்**

வெண்மை நிறம் மிகவும் ஏற்றது. இலேசான மஞ்சள், பச்சை, நீலம் ஆகிய வண்ணங்களும் சிறந்தவையே. கரும் சிவப்பையும், கறுப்பு நிறத்தையும் தவிர்க்க வேண்டும். வர்ண உடைகளும் அதிர்ஷ்டமானவை.

**7-ஆம் திகதி பிறந்தவர்கள்**

வெளியூர், வெளிநாடு செல்லும் யோகம் உடையவர்கள். இவர்களுக்கு மனைவியும் வெளிநாடு, அன்னிய சம்பந்தம் அல்லது அடுத்த உறவு போன்றவற்றில் அமைவர். இவர்கள் மிகவும் கண்டிப்பு மிக்கவர்கள். நேர்மையை மிகவும் மதிப்பார்கள். ஆன்மிகத்தில் மிகுந்த விருப்பமுடையவர்கள். நல்ல ரசிப்புத் தன்மையும் உடையவர்கள். மற்றவர்களின் கருத்தைக் கேட்பவர்கள். குடும்ப வாழ்க்கையில் சில பிரச்சினைகள் ஏற்படும். மனைவியை ஓரளவு அனுசரித்துச் சென்றால் நல்ல வாழ்க்கை அமையும்.

**16 ஆம் திகதி பிறந்தவர்கள்**

இவர்கள் தெய்வீகத் தன்மை நிறைந்தவர்கள், கலை உள்ளம் நிறைந்தவர்கள். துணிச்சலும் அறிவுத்திறமையும் இவர்களுக்கு அமையப்பெற்றால் நன்றாக முன்னுக்கு வந்து விடுவார்கள். ஆனால் திடீரென தேவையில்லாத பிரச்சினைகளில் சிக்கிக் கொண்டு பொருள்களை இழக்கும் அபாயமும் உண்டு. எனவே, கவனமாக இருக்க வேண்டும். மனோ சக்தி மிகுந்தவர்கள். இவர்களுக்கு குழந்தை பிறப்பது சற்றுத் தாமதமாகும். முறை தவறிய காதல் விவ காரங்களில் ஈடுபடாதிருக்க வேண்டியது மிகவும் அவசியம். திடீர் புகழ் உண்டு.

**25 ஆம் திகதி பிறந்தவர்கள்**

இவர்கள் மக்களுக்கு வழிகாட்டவே பிறந்தவர்கள். சிறந்த கற்பனைவாதிகள். குடும்ப வாழ்க்கை சரிவர அமையாது. எனவே ஆன்மிகத் தலைவராகவோ, நீதிபதியாகவோ மாறி விடுவார்கள். பேரும் புகழும் அடைவார்கள். இவர்கள் நல்ல திறமைசாலிகள். இவர்கள் அரசியலிலும் ஈடுபட்டு பெரிய பதவிகளை அடைந்து, மக்களுக்கு உண்மையான சேவைகளைச் செய்வார்கள்.

**எண் 7க்கான தொழில்கள்**

இவர்கள் விமானம் ஓட்டி போன்ற தொழில்களில் வெற்றியைத் தருபவர்கள். உத்தியோகத் துறையில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்காது. சமையல் கலை, சித்திரம் வரைதல் என்பன நன்கு வரும். இவர்கள் மத விடயங்களில் தீவிரமாக ஈடுபடுவார்கள். பெரிய புகழும், பொருளும் இறுதிக் காலத்துக்குள் சம்பாதிப்பார்கள்.

பலர் வெளிநாடுகளில் பணியாற்றுவார்கள். மர விற்பனை, மரச்சாத னங்கள் விற்பனை, பாத்திரங்கள் தயாரித்தல், உற்பத்தி செய்தல் மற்றும் பழுது பார்த்தல் தொழிலிலும் நன்கு அமையும். மருந்துகள், மருத்துவம் தொடர்பான தொழில்கள், வியாபாரம் என்பனவும் அமையும்.

(தொடரும்)

# மாணவரின் கல்வி மற்றும் நல்வாழ்வுக்கு உறுதுணையாகும் வாசிப்புப்பழக்கம்

சி.சந்திரகுமார்

ஒரு மாணவனின் கற்றற் செயன்முறைக்கு அடித்தளமாக அமைவது வாசிப்பாகும். வாசிப்புத் தொடர்பாக உடன்பாடான மனப்பாங்கை மாணவர்களிடையே ஏற்படுத்துவது என்பது மொழி, ஆசிரியர்கள் மட்டுமன்றி எல்லா ஆசிரியர்களும் எதிர்கொள்ளும் மிகவும் கஷ்டமானபணியாகும். இன்றையமொழி, யாசிரியர்கள்கூட பிள்ளைகளிடம் வாசிப்பை ஊக்குவிப்பதற்கு பல இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதற்குக் காரணம், எமது சமூகத்தினரிடையே உட்புகுந்திருக்கும் அதிநவீன தொழிநுட்ப மாயை ஆகும். அதன் காரணமாகவே இன்றைய இளம் பராயத்தினரின் கைகளில் நவீன தொடுதிரை பேசிகளும், தொலைக்காட்சிகளும் இணைய வசதிகளோடுகூடிய தொழில்நுட்ப சாதனங்களும் காணப்படுகின்றன. இவற்றுக்கு அடிமையாகிய நிலையில் எம்பிள்ளைகள் காணப்படுகின்றனர்.

இந்த நிலை காரணமாகவே இன்றைய பிள்ளைகள் வாசிப்புத் திறனை விருத்தி செய்யமுடியாதிருக்கின்றனர்.

இந்தத் தாக்கத்தின் காரணமாகவே எமது மாகாண மாணவர்களின் அடைவுமட்டம் குறைவான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அண்மைய பரீட்சை முடிவுகள் சுட்டிக்காட்டி நிற்கின்றன. அத்தோடு மட்டுமன்றி இன்றைய மாணவர்களின் வாசிப்பு என்பது பாட நூல்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது.



அதற்கு எமது நாட்டுக் கல்விக் கொள்கையும் உறுதுணையாகிச் செயற்படுவது வேடிக்கையானதே. அதற்குச் சான்றாக பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்ட முடியும்.

எமது நாட்டின் கல்வி முறைமை முழுக்க முழுக்கப் பரீட்சையை நோக்காகக் கொண்டது. அத்தோடு இன்றைய பெற்றோர்களின் மன நிலையில் ஏற்பட்ட மாற்றம். பிள்ளைகளின் பாடசாலைக் கல்வியில் முழு நம்பிக்கை கொள்ளாது பிரத்தியேக வகுப்புக்களுக்குப் பிள்ளைகளை அனுப்புகின்றனர்.

இரவில் வீடுகளில் தனிப்பட்ட வகுப்புக்களும் இடம்பெற்று மாணவர்களை சுயமாக இயங்கவிடாது தடுக்கின்றன.

செயற்கை முறையான கற்றல்முறை காரணமாக வாசிப்புப் பழக்கமானது அருகிப் போவதை அவதானிக்க முடிகின்றது. இந்த நிலமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டிய நிலையில் சமூக மாற்றம் ஒன்று ஏற்படவேண்டும் என்பது எனது கருத்து.

இந்தச் சமூக மாற்றத்துக்கும் மொழி விருத்திக்கும் பாடசாலை மட்டத்தில் மட்டுமன்றி குடும்பச் சூழலிலும் முன்பள்ளி நிலையங்களிலும் பல்வேறு வாசிப்பு நிகழ்ச்சித் திட்டங்களைத் துரிதமாக அறிமுகப்படுத்தி, செயற்படுத்துவதனூடாகவே மாணவர்கள் தமது வாழ்க்கைக்கு தேவையான அத்தியாவசியமான அடிப்படை மொழித்திறன்களை பெற்றுக் கொள்ளச் செய்யலாம். இதற்கு இளம் பருவத்தினராகிய மாணவர்கள் விரும்பக்கூடிய வகையில், அவர்தம் அறிவுக்கேற்ற நூல்களையும், சஞ்சிகைகளையும், பத்திரிகைகளையும், ஏனைய சமய விழுமிய நூல்களையும் பல் வர்ணங்களில் வழங்குவதனூடாக இந்த வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்திக் கொள்ளமுடியும்.

பிள்ளைகளின் பெற்றோர்களும், முன்பள்ளிஆசிரியர்களும், பங்குதாரர்களாக மாறவேண்டும். தமது வீடுகளில் சிறிய மாதிரி நூலகம் அமைத்து, அதில் நூல்களைச் சேகரித்துப் பிள்ளைகளுக்கு வழங்கமுடியும்,

சிறுபராயம் தொடக்கம் கடைகளில் திண்பண்டங்களையும் விளையாட்டு, பொருள்களையும் வாங்குவதைக் கட்டுப்படுத்தி, அதற்குப் பதிலாக பல நூல்களைக்கொள்வனவு செய்து, வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பிள்ளைகளைப் பழக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு பழக்கத்துடன் வரும் பிள்ளைகள் பாடசாலைகளில் இடைநிலை, உயர் வகுப்புக்களில் தம் ஒப்படைகளைத் தாமே தரவுகளைச் சேகரித்துச் செய்வதற்கும், தமது அறிவைவிருத்தி செய்வதற்கும் இயலுமான நிலையில் பழக்கப் பட்டிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இளைஞர்களின் முன்மாதிரியே இன்றைய தேவை

கே.எஸ்.சிவஞானராஜா

ஒரு நாட்டின் ஆரோக்கியத்தை அளவிட வேண்டுமென்றால் அந்த நாட்டின் இளைஞர்களின் ஆரோக்கியமான செயற்பாடுகளைக் கவனிக்க வேண்டும். அவர்களைச் சமூகத்துக்குத் தேவைப்படுத்தினால் வாலிப விளைவுகள் நல்ல முறையில் நாட்டுக்குப் பயனுள்ளதாக அமையும். இது மட்டுமல்ல ஆரோக்கிய விளைச்சல்களையும் அள்ளித் தரும் என்பதில் சந்தேகமில்லை. ஒரு கட்டத்தில் இளைஞர்கள் இந்த மண்ணைச் சிறந்த ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் நடத்திக் காட்டவில்லையா? காமம், மோகம், பலாத்காரம், வன்புணர்வு, கொலை, கொள்ளை, கடத்தல், களவு, அள்ளு கொள்ளை வியாபாரம், அடாவடித்தனம், அறாவட்டி, ஏமாற்றுதல், போலி வியாபாரம், போலி வைத்தியம், பேயோட்டல், பில்லி சூனியம், செய்வினை சூனியம், சீதனக் கொடுமை, விபச்சாரம், பலதாரம் இவை எல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடித் தொலைந்தன. அப்போது அவையெல்லாவற்றையும் நாமே தொலைத்துவிட்டிருந்தோம். சீண்டலோ, தீண்டலோ, நக்கலோ, நரிகளோ, நயவஞ்சகர்களோ, நாகரிகப் பிரம்மாக்களோ, நடு இராத்திரி இராவண சம்காரமோ எதுவுமே உறங்கிக் கிடந்தன. இத்தகு அகோரங்களை எல்லாம் அடக்கியவர்கள் இளைஞர்களேயாவர்.

இப்போது அதைவிட ஜனநாயக நல்லாட்சி இருந்தபோதும் அடக்கவும், அடங்கவும் முடியவில்லையென்றால் நல்லாட்சிக்குக் களங்கம் ஏற்பட்டே தீரும். இளைஞர்கள் பொதுவாகவே உன்னதமான இலக்கைக் கொண்ட வர்கள். நல்ல சிந்தனையை உடை யவர்கள். செயற்றிறன் மிக்கவர்கள். உதவுகின்ற சுபாவத்தையுடையவர்கள். இந்த உலகை ஆளவேண்டும் என்ற சிறந்த எண்ணக் கருவை விதைப்பவர்கள். ஆன்மிக விழுமியங்களுக்காகப் போராடுபவர்கள். நாத்திக வேர்களை அறவே பிடுங்கி எறிபவர்கள். சகோதரர்கள்போல அனைவரையும் பேதங்களுக்கப்பால் நேசிப்பவர்கள்.

இத்தகு பண்புகளை உடையவர்களான இளைஞர்களைச் சமூக மட்டத்திலும் சரி, தேசிய மட்டத்திலும் சரி, பங்காளிகளாக ஈடுபடுத்தப் படாவிட்டால் வீடும் நாடும் கவலைப்பட வேண்டியே வரும். இந்தக் கவலையும் பொறுப்பும் எம்மில் பலருக்கும் உறைப்பதாய்த் தெரியவில்லை. பெரும்பாலான பெரியவர்கள் இளைஞர்களின் ஆளுமையை அங்கீகரிப்பதற்குத் தயாராக இல்லை. ஆயுள்காலம் வரையும் தாமே பதவிகளில் கொடிகட்டிப் பறக்கவே விரும்புகின்றார்கள். ஆன்மிகத்திலும் சரி, கல்வியிலும்சரி, அரசியலிலும் சரி இளைஞர்களுக்கு அதிலும் சிறப்பாகப் படித்த இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டேயாக வேண்டும். ஓய்வூதியம் எடுத்தவர்கள் கொஞ்சமாவது மனமிரங்கி னால் பல இளைஞர்களுக்கு சமூகப்பொறுப்புக்களை வழங்கி, சமூக ஈடேற்றத்துக்கு வழி சமைக்கலாம். ஒரு சிலருக்குக் கதிரைகளை விடுவதற்கு விருப்பமேயில்லை. விடச் சொன்னாலும் விட மாட்டார்கள்.

ஏனென்றால் இறைவனுக்கு விருப்பமில்லை என்பார்கள். இறைவனோ பாவம். அவர் கதைக்கமாட்டார் என்று தெரிந்து அவரைப்படுத்துகின்றபாடு கொஞ்ச நஞ்சமல்ல. ஒரு கருங்கல்லுக்குள்ளே இறைவனைக் காண்பதற்காகச் சிற்பியானவன் உளியாலே எத்தனை வலிகளைச் சுமத்தி விடுகிறான். ஆம்! நாமாகத் திருந்துவதேயன்றி வேறு வழியே இல்லை. அண்மையில் இதற்கு எடுத்துக் காட்டாக ஒரு சில சங்கங்கள் சமூக மேம்பாட்டிலும் சமூக உதவியிலும் இளைஞர்களின் ஆளுமை விருத்திக்காகவும் பற்பல சேவைகளை அர்ப்பணித்து வருவதைச் சகல ஊடகங்களும் சிறப்பாக வெளியிட்டு வருகின்றன. அவற்றில் ஒன்றைப் பார்ப்போம். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, கடவுள் சேவை, காருண் யம் மிக்கதான ஒரு சங்கம் அது .

## சங்கங்கள்

வடமாகாணத்தில் பல நிறுவனங்கள் மக்களுக்கு உதவி புரிவதில் ஆர்வம் காட்டி வருகின்றன. இந்த நிலையில் வட்டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தின் சேவை வியக்கத்தக்கது. பலராலும் வரவேற்கப்பட்டு வருகிறது. இற்றைக்குக் கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும் கல்வி, மருத்துவம் போன்ற தேவைகளுக்காகவும் சமயோசித வேண்டுதல்களுக்காகவும் மேற்படி சங்கம் தன்னை அர்ப்பணித்து வருகிறது. உதவி செய்வதோடு மட்டுமல்ல ஆளுமைமிக்க பல இளைஞர்களை

> இளைஞர்களைச் சமூக மட்டத்திலும்சரி, தேசிய மட்டத்திலும்சரி பங்காளிகளாக ஈடுபடுத் தப்படாவிட்டால் வீடும் நாடும் கவலைப்பட வேண் டியே வரும். இந்தக் கவலையும் பொறுப்பும் எம்மில் பலருக்கும் உறைப்பதாய்த் தெரிய வில்லை.

தலைமைத்துவப் பண்போடு வளர்த்தும் வருகின்றார்கள். எத்தகைய இளைஞர்கள் அடுத்த சந்ததிக்கு வேண்டப்படுகிறார்களோ அதற்கான தயார்ப்படுத்தலை வட் டுக்கோட்டை இந்துவாலிபர் சங்கத்தினர் முன்னெடுத்து, முன்மாதிரியாக வாழ்ந்து காட்டி வருகிறார்கள். வட்டுக்கோட்டை வாழ் மக்களும் வெளிநாடுகளில் வசிக்கும் பெருந்தகையோரும் இந்தச் சங்கத்தினூடாகப் பல பொன்னான கைங்கரியங்களை நிறைவேற்றி வருகிறார்கள். ஒரு குறுகிய வட்டத்தைக் கடந்து பென்னாம்பெரிய வட் டமாக வியாபித்து இலங்கையின் பேறு உடைய சங்கமாக மிளிர்கிறது.

## சிறப்பு

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கமானது பாரம்பரியத்தைப் பேணி நலிவடைந்த மக்களின் சமூக பொருளாதார வாழ்வாதாரத்தை மேம்படுத்தவல்ல கல்வியைப் பெறுவதற்கு வழிசமைக்கின்றது. சாதி, மத, இன, மொழிகளுக்கு அப்பால் சேவைபுரிதலை மையமாகக் கொள்கின்றது. இத்தகு எண்ணமே நாட்டில் விதைக்கப்பட வேண்டும்.

இதுவே சமய நெறியின் கோட்பாடாகும். மானுட நேயம் பேதங்களுக்கு அப்பாற்பட்டது. இந்தச் செய்தி மேற்படி சங்கத்தை மேன் மேலும் வளர்க்கச் செய்கிறது.

யாழ்ப்பாணம் மாத்திரமல்ல கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார், தீவகம் என ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவாக்கப் பட்டு, மக்கள் சேவை மகேசன் சேவையாக்கப்பட்டுள்ளது. இவ்வாறான இளைஞர்களின் முன்மாதிரியே நாட்டுக்கு இன்று தேவை.


நூற்றுக்கு மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு மாதாந்தம் உதவித் தொகையாக பல லட்சம் பயனுறும் வண்ணம் செலவழிக்கப்பட்டு வருகின்றன. எங்கெங்கு உதவிகள் தேவைப்படுகின்றதோ, கோரப்படுகின்றதோ அங்கே தமது பணிகளை மேற்படி சங்க இளைஞர்கள் உடன் கவனத்தில் எடுக்கின்றார்கள் வடிவமைக்கின்றார்கள், சாதிக்கின்றார்கள்.

இறைவனும் நிதியை வட்டுவாழ் இதயங்கள் ஊடாக வாரி வழங்கிய வண்ணம் உள்ளான். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற பேருபகாரிகள் இளைஞர்களின் தலைமைத்துவ நம்பிக்கையூடாக இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. மற்றும் வெளிப்படையான ஒளிவு மறைவற்ற நிர்வாகம். இவர்களை நம்பி ஆன்மிகத்தையும் ஒப்படைக்கலாம். நாட்டையும் ஒப்படைக்கலாம் விட்டால்தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



உதயன் சிறுவர் பகுதியில் 'வர்ணம் தீட்டுவோம் வாங்க' என்ற தலைப்பில் வெளியிடப்படும் சித்திரங்களை, சிறுவர்கள் பலர் ஆர்வத்துடன் வர்ணம் தீட்டி அவற்றை எமக்கு அனுப்பியும் வைத்து வருகின்றனர். அவர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் கச்சிதமான விதத்தில் வர்ணம் தீட்டப்படும் சித்திரங்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்தப் பகுதியில் வெளியிடப்படுகின்றன.



சி.யாதவி,
தரம் - 1E,
கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1812 - நெப்போலியனின் கிறாண்ட் படைகள் நேமன் ஆற்றைக் கடந்து ரஷ்ய ஆக்கிரமிப்பைத் தொடங்கின.

1813 - பீவர் அணைப் போரில் பிரிட்டிஷ் மற்றும் இந்தியா இணைந்த படைகள், அமெரிக்க படைகளை தோற்கடித்தது.

1821 - கறபோபா சண்டை இடம்பெற்றது. ஸ்பெயினிடமிருந்து வெனிசுவெலா சுதந்திரம் பெறுவதற்கு ஒரு தீர்க்கமான போராக இது இடம்பெற்றது.

1880 - ஓ கனடா பாடல் முதன்முறையாக, இசைக்கப்பட்டது. பின்னாளில் இது கனடாவின் தேசிய கீதமாக கனடியன் பிராசைஸ் தேசிய காங்கிரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1913 - பல்கோரியாவுடன் தமது கூட்டை கிறீசும், சேர்பியாவும் விலக்கிக்கொண்டன.

1916 - ஒரு மில்லியன் டொலர் சம்பள ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட முதல் பெண் திரைப்பட நடிகையானார் மேரி பிக்போர்ட்.

1918 - கனடாவில் முதலாவது விமான கடித சேவை மொன்றியல் மற்றும் ரொறன்ரோவுக்கு இடையே தொடங்கியது.

1938 - 450 மெற்றிக்தொன் நிறையுடைய எரி நட்சத்திரம் பெனிசில்வேனியா சிகோராவுக்குள் வாயு மண்டலத்துள் பிரவேசிக்கும்போது வெடித்துச் சிதறல்கள் வீழ்ந்தன.

1982 - பிரிட்டிஷ் விமான சேவையினரின் விமானம் கலங்கங் எரிமலைக்கு மேலாக பறந்து கொண்டிருந்தபோது எரிமலையின் வெடிப் பினால் சாம்பல்கள் பரவியதால் விமானத்தின் நான்கு இயந்திரங்களும் செயலிழந்தன். ஒருவாறாக விமானி இயந்திரங்களை மீள இயக்கி விமானம் ஜகார்த்தாவில் தரையிறங்கினார்.

1992 - சீனாவின் முன்னாள் ஜனாதிபதி லீ ஷியான் யென் தனது 83ஆவது வயதில் காலமானார்.

1992 - புதிய இஸ்ரேல் பிரதமராக முன்னாள் இராணுவ ஜெனரல் யிற்ஷாக் ராபின் தெரிவு.

1990 - வவுனியா ஆஸ்பத்திரி மூடப்பட்டு, நெடுங்கேணிக்கு மாற்றம்.

2002 - ஆபிரிக்க வரலாற்றில் இடம்பெற்ற மிக மோசமான புகையிரத விபத்தில், தான்சானியாவில் 281 பேர் உயிரிழப்பு.

2010 - ஆஸ்திரேலியாவின் முதலாவது பெண் பிரதமராக,ஜீலியா கில்லாட் பதவியேற்பு.

## கழுதை அறியுமா கர்ப்பூர வாசனை?

நீண்ட நாள்களாக ஒரு பெண்ணுக்குக் குழந்தையே பிறக்கவில்லை.

தனக்கு ஒரு குழந்தை இல்லையே என்ற ஏக்கத்தைவிட மற்றவர்கள் இழிவாகப் பேசுகிறார்களே என்ற கவலைதான் அவளுக்கு அதிகமாக இருந்தது.

அவள் வாழ்ந்த ஊருக்குச் சற்றுத் தொலைவில் மிகவும் பிரசித்திபெற்ற அம்மன் கோயில் ஒன்று இருந்தது.

அந்த அம்மன் கோயிலுக்குச் சென்று நோன்பு இருந்தால் குழந்தை பிறக்கும் என்று அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் கூறினர்.

அம்மனைத் தரிசித்துக் குழந்தை வரம் பெறுவதற்கு ஒருநாள் புறப்பட்டாள்.

போகும் வழியிலே கைக்குழந்தைக்காரியான ஒரு பெண் அவளுடன் சேர்ந்து கொண்டாள். இருவரும் உரையாடியவாறு நடந்து சென்று கொண்டிருந்தனர்.

வழியில் குழந்தை, தாயின் புடைவையில் மலம் கழித்து விட்டது.

அவள் தன்னுடன் வந்தவளிடம் தன் குழந்தையைக் கொடுத்து, "அம்மா! என் குழந்தையைக் கொஞ்சம் பிடித்துக் கொள். அருகிலிருக்கும் ஆற்றில் இறங்கி என் புடைவையைச் சுத்தம் செய்து கொள்கிறேன். பிறகு குழந்தையை வாங்கிக் கொள்கிறேன்" என்றாள்.

அவளுக்குக் குழந்தை அப்போது இருந்த நிலை அருவருப்பை ஊட்டியது. குழந்தை கழித்த மலம் அதன் உடம்பெல்லாம் ஒட்டிக் கொண்டிருந்தது.

"ஐயய்ய... குழந்தை அசிங்கமாக இருக்கிறது. நான் இதை எடுத்துக்கொள்ள மாட்டேன்" என அருவருப்புடன் முகத்தைச் சுளித்தவாறு கூறினாள்.

வேறு வழியில்லாமல் அத்தாய் குழந்தையைத் தரையிலே கிடத்திவிட்டு ஆற்றில் இறங்கிப் புடைவையைச் சுத்தப்படுத்திக் கொண்டாள்.

பிறகு குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஆற்று நீரில் இறங்கி குழந்தையையும் சுத்தப்படுத்திக் கொண்டு கரையேறினாள்.

பிறகு இருவரும் உரையாடியவாறு தொடர்ந்து பயணம் செய்தனர்.

கோயில் நெருங்கியதும் கைக்குழந்தைக்காரி தன் வழியே போய்விட்டாள்.

குழந்தை இல்லாதவள் கோயிலுக்குச் சென்று அம்மனை பயபக்தியுடன் வழிபட்டு நோன்பு இருந்தாள்.

ஒரு வாரம் கோயிலிலேயே தங்கி நோன்பு எடுத்துக் கொண்டாள்.

ஏழாவது நாள் அவள் கோயிலில் உறங்கிக் கொண்டிருந்தபோது அம்மன் அவள் கனவிலே தோன்றினாள்.

"எதற்காக நீ இங்கே வந்திருக்கிறாய்?" என்று அம்மன் கேட்டாள். "தாயே! நெடு நாள்களாக எனக்குக் குழந்தைப் பேறு இல்லை. என்னைக் காண்பவர்கள் எல்லாம் ஏளனமாகப் பேசுகிறார்கள். அருள் கூர்ந்து எனக்குக் குழந்தை வரம் அளிக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டாள்.

"பெண்ணே! நீ குழந்தை வரம் கேட்க விரும்புகிறாய் என்பதை முன்னதாகவே அறிந்த நான் எந்த அளவுக்குக் குழந்தையின் அருமையை நீ உணர்ந்திருக்கிறாய் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக இங்கே நடந்து வரும்போது ஒரு சோதனை வைத்தேன். உன்னுடன் நடந்து வந்த கைக்குழந்தைக் காரியை எனது பரிசோதனைக்காகப் பயன்படுத்தினேன். அவளுடைய குழந்தை அவள் புடைவையில் மலம் கழித்தபோது ஆற்று நீரில் இறங்கி அலசிக் கொள்வதற்காகத் தன் கைக்குழந்தையைக் கொஞ்ச நேரம் பார்த்துக்கொள்ளும்படி கூறினாள். நீயோ குழந்தையின் உடம்பெல்லாம் மலம் ஒட்டிக்



கொண்டிருக்கிறது என அருவருப்படைந்து குழந்தையை வாங்கிக் கொள்ள மறுத்தாய். "கழுதைக்குத் தெரியுமா கர்ப்பூர வாசனை?" என்ற பழமொழிக்கு ஏற்ப ஒரு குழந்தையின் அருமை உனக்குத் தெரியவில்லை. நாளை நீ ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தால் அது மலம் கழித்தால் அதன் உடலில் மலம் ஒட்டிக் கொள்ளாதா? அப்போது நீ என்ன செய்வாய்? நீ பெற்ற குழந்தையைக் கண்டே அருவருப்படைவாய். அதைத் தொட்டுச் சுத்தப்படுத்த உன் மனம் இடந்தராது. இந்த நிலையில் நீ குழந்தைப்பேறு அடைவது உனக்கு நல்லதல்ல. அந்தக் குழந்தைக்கும் நல்லதல்ல. ஆகவே, குழந்தையில் அருமை தெரியும் விதத்தில் உன் மனம் பக்குவப்பட்ட பிறகுதான் உனக்குக் குழந்தை பிறக்கும். நீ சென்று வரலாம்" என்று கூறிவிட்டு அம்மன் அந்தப் பெண்மணியின் கனவில் மறைந்து விட்டாள்.

மிகவும் மன வேதனைப்பட்டவளாக அவள் ஊர் திரும்பினாள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தெய்வத்திலும் முந்தியது குருவுக்கான இடம்

மாதா, பிதா, குரு, தெய்வம் என வகைப்படுத்தியுள்ளனர் எமது ஆன்றோர். மாதாவையும், பிதாவையும், குருவையும் தெய்வத்துக்கு முன்பாக இடம்கொடுத்துக் கௌரவித்திருப்பதைக் காணமுடிகின்றது.

பாடசாலைப் பருவத்தில் மாணவர்களின் அறிவுக் கண்களைத் திறந்து ஆத்தமார்த்தமான ஒளியைக் கொடுக்கின்ற குரு தெய்வத்துக்கு ஒப்பானவர். பண்டைய நாள்களில் மாணவர்கள் குருகுலவாசம் செய்து குருவிடமிருந்து கல்வியைப் பெற்றுக் கொண்டனர். இந்தக் காலப் பகுதியில் குருவுக்குச் சகல வழிகளிலும் சேவைபுரிய வேண்டிய தேவையும் மாணவர்களுக்கு இருந்தது. குருவின் ஆடைகளைத் துவைத்தல், உணவு பரிமாறுதல் கால்களில் வேதனை ஏற்படும்போது அவற்றை அமுக்கிப்பிடித்து ஆறுதல் வழங்குதல் என்று இன்னோரன்ன பணிகள் மாணவர்களுக்குக் காத்திருந்தன. முகம் சுளிக்காமல், சினம் அடையாமல் இவற்றையெல்லாம் நிறைவேற்றி குருவிடமிருந்து கல்வியைக் கற்க வேண்டியதேவை மாணவர்களின் கடமையாகவும் காணப்பட்டது.

குருகுலவாச காலம் போய்ப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. அன்றைய ஆசிரியர்கள் கண்டிப்பு நிறைந்தவர்களாகக் காணப்பட்டனர். மாணவர்களுக்குக் குறையில்லாத கல்வியை வழங்கவேண்டும் என்பதாகவே இந்தக் கண்டிப்பு காணப்பட்டது. மாணவர்களை ஆசிரியர்கள் தமது சொந்தப் பிள்ளைகளைவிட அன்பு காட்டி அரவணைத்து நின்றனர். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான உறவில் ஒரு புனிதம் இருந்தது. தெய்வீகமும் நிறைந்து காணப்பட்டது.


இன்று சமீபகாலமாக வெளிவருகின்ற சில செய்திகள் தலையில் இடிவிழுந்த வேதனையை ஏற்படுத்தி, எம்மைத் துடிக்க வைக்கின்றன. ஒருசிலர் குரு என்ற அந்தப் புனிதத்தை மாசுபடுத்துகின்ற கைங்கரியத்தில் ஈடுபட்டு, முழு ஆசிரிய சமுதாயத்தையும் தலை குனிந்து நிற்க வேண்டிய அவலத்தினுள் தள்ளிவிட்டனர். இந்த இழிவான செயலுக்குக் காரணமானவர்கள் தராதரம் பார்க்காது தண்டிக்கப்படவேண்டும். இளம் பெண் பிஞ்சுகள் அச்சமின்றித் தமது கல்வியைத் தொடரக்கூடிய சூழ்நிலை இங்கு உருவாகவேண்டும். உரியவர்கள் மனம் வைத்தால் நிறைவேறமுடியாததென ஒன்றுமே இல்லை.

இப்போது பெண்பிள்ளைகளைப் பெற்றவர்கள், பிள்ளைகள் பாடசாலையில் இருந்து பத்திரமாகத் திரும்பி வரும்வரை மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருப்பதைப் போன்றதொரு நிலையில் காணப்படுகின்றனர். தெருவில் நிற்கின்ற அயோக்கியர்கள் ஒரு புறம், பாடசாலையில் குரு என்ற மதிப்பில் இருந்துகொண்டு சில்மிசங்களில் ஈடுபடுகின்றவர்கள் மறுபுறம் இருந்துகொண்டு பெற்றோர்களின் நிம்மதியைக் குலைத்து வருகின்றனர்.

கல்விக்குத் தெய்வமாகச் சரஸ்வதியை உருவகித்துப் போற்றி வணங்குகின்றோம். ஆனால், சரஸ்வதி நேரில் வந்து கல்வியைப் போதிப்பதில்லை. அவரது உருவில் ஆசிரியர்கள் அந்தப் பணியை நிறைவேற்றி வைக்கின்றனர். இந்த வகையில் சரஸ்வதியின் மறு உருவமாகவே ஆசிரியர்கள் நோக்கப்படுகின்றனர். தற்கால இளைஞர்களிடையே என்ன தான் பிறழ்வுகள் ஏற்பட்டாலும், ஆசிரியர்களை ஓர் உயர்ந்த இடத்தில் வைத்துப் போற்றுவதற்கு மறப்பதில்லை. தெருவில் காண்கின்றபோதிலும் தமது மரியாதையைச் செலுத்தியே தீருகின்றனர்.

குடும்பத்தைப் பொறுத்த வரையில், ஒரு பெண்பிள்ளை மகளாகவோ, பேர்த்தியாகவோ அல்லது வேறு உறவுகளைக் கொண்டோ காணப்படுகின்றது. ஆனால், பாடசாலைக்குள் நுழையும்போது மாணவி எனும் உயர்ந்த மதிப்பை அந்தப் பிள்ளை பெற்றுவிடுகின்றது. பாடசாலையில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் தமது சொந்தப் பிள்ளைகள் போன்றே பெண்பிள்ளைகளை மதிக்கப்பழகவேண்டும். மாணவி என்ற நிலையைவிட இது உயர்வானது, புனிதமானது. ஆகவே இதைப் போற்றி நடக்க வேண்டியது ஆசிரியர்களின் முக்கியமான கடமையாகும்.

பாடசாலையில் தவற்றை இழைத்துவிட்டு பொலிஸ் நிலையங்களிலிலும் நீதிமன்ற வாசல்களிலும் கால் பதித்து நிற்பது குரு என்ற அந்த உயர்ந்த இடத்தை வகிப்பவர்களுக்கு அழகாகுமா? அல்லது மதிப்பைத்தான் தருமா? இனியாவது இந்த நிலை மாறட்டும்.




வாழ்க்கை என்பது அனுபவத்தின் வெளிப்பாடு. மனிதனின் ஒவ்வொரு எண்ணமும், சொல்லும், செயலும் புதுமையான அனுபவத்தை ஏற்படுத்தக் காத்திருக்கின்றன. ஆர்வத்துடன் செயலில் ஈடுபடாமல் வாழ்வில் எந்தவித அனுபவமோ, வளர்ச்சியோ உண்டாகாது.

மனித முயற்சி அனைத்துக்கும் ஆதாரமாக இருப்பது நம்பிக்கையே. மனிதனின் நம்பிக்கையைப் பொறுத்தே வாழ்வு அமைகிறது. தன்னம்பிக்கையுடன், தெய்வ நம்பிக்கையும் சேரும்போது வாழ்வில் முன்னேற்றம் காண்பது உறுதி.

குறிக்கோள் இல்லாத வாழ்வு வாழ்வாகாது. குறிக்கோள் என்பது சுயநலமற்றதாகவும், உயர்ந்ததாகவும், விசாலமானதாகவும், பெருந்தன்மை கொண்டதாகவும், பொதுநலம் மிக்கதாகவும் அமைய வேண்டும்.

தன்னுடைய கருத்தே சரியானது என்று எண்ணக்கூடாது. ாக்குவாதம், அதிக எழுச்சி, சண்டை, கோபம் ஆகியவற்றைப் பேச்சில் தவிர்க்க வேண்டும். சொல்ல விரும்புவதைத் தெளிவாக அதே சமயத்தில் அமைதியாகத் தெரிவிக்க வேண்டும்.

வழிபாடு என்பது தொடக்கத்தில் கடவுளுக்கு ஓர் இலையோ, மலரோ, சிறிதளவு தண்ணீரோ, பிடி சோறோ படைப்பதாக இருக்கும். பக்குவம் அடையும் போது, தன்னையே முழுமையாகக் கடவுளுக்கு அர்ப்பணிக்கும் விதத்தில் இது உயர்ந்து விடும்.

பக்தியில் ஈடுபட்டால் கடவுளைத் தவிர வேறெந்த விடயத்திலும் ஈடுபடக் கூடாது என்பதில்லை. அறிவியல், கலை, இலக்கியம், குடும்பம் என வாழ்வின் மற்ற அம்சங்களையும் இரசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். கடவுளிடம் முழுமையாகச் சரணடைந்து அவரது கைகளில் நம்மை ஒப்படைப்போம். அப்போது அவர் தன்னுடைய சொந்தச் சக்தியை நமக்குள் செலுத்தி வாழ்வை மலரச் செய்வார்.

வாழ்வில் குறுக்கிடும் துன்பத்தை வாழ்த்தக் கற்றுக் கொள்ளுங்கள். அதன் மூலமே கடவுளின் அருள் ததும்பும் முகத்தைக் காணும் பேறு பெறுவீர்கள். தியாகம் செய்யும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். பெருமைக்காக தியாகம் செய்வது கூடாது. மனிதர்கள் அனைவரும் நலம் பெறவும், கடவுளுக்காகவும் தியாகம் செய்ய முயலுங்கள்.


நீங்கள் தர்மத்தின் கையில் ஒரு கருவியாக இருங்கள். உயிர்களின் மீது இரக்கம் காட்டுவதும், பிறரது நன்மைக்காக உயிரைத் தியாகம் செய்வதும் தர்மத்தின் வெளிப்பாடே. போர்க்களத்தில் பகைவனைக் கொல்வதும் தர்மத்தில் தான் அடங்கும்.

கண்களில் கருணையும், பேச்சில் இனிமையும் தெய்வத்தின் சுபாவங்கள். இந்த உயர்பண்புகளை ஏற்றுக்கொள்பவன் மனித நிலையில் இருந்து தெய்வ நிலைக்குத் தன்னை உயர்த்திக் கொள்கிறான்.

பிறருடைய குறைகளைப்பற்றி ஒருபோதும் சிந்திக்க வேண்டாம். இதனால் மனம், உடல் இரண்டும் கேடு அடைகிறது. மன அமைதி மிக்கவர்களே தங்களின் குறைகளைத் திருத்திக் கொள்வதில் அக்கறை கொள்வர்.

கடவுளின் அருளாட்சியில் தீமை என்பதே இல்லை. உலகில் நடக்கும் செயல்கள் அனைத்தும் நல்லதாகவோ அல்லது நல்லதை ஏற்படுத்தும் முயற்சியாகவோ மட்டுமே இருக்கின்றன.


# ஆர்வத்துடன் செயலாற்று! ஆனந்தம் காத்திருக்கு!



பரமானந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இசையில் இணையும் கூட்டணி

மணிரத்னம், வைரமுத்து, ஏ.ஆர்.ரஹ்மான் கூட்டணி கோடம்பாக்கத்தில் நிரூபிக்கப்பட்டது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு இந்தக் கூட்டணி மீண்டும் புதிய படத்தில் இணைகிறது. கார்த்தி, அதிதி ராவ் ஹைதரி ஜோடியாக நடிக்கும் இந்தப் படத்தின் அறிவிப்பை விரைவில் வெளியிடவுள்ளார் மணிரத்னம். முன்னதாக படத்துக்கான இசைப் பணி தொடங்கியுள்ளது. மூவர் கூட்டணியும் இணைந்து பாடல் அமைக்கும் பணியில் ஈடுபட்ட வீடியோ காட்சியும் வெளியிடப்பட்டது.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 7 | | | | | 8 |
| | | | | | | | 4 | |
| | 2 | | | | 9 | 5 | | 1 |
| | | | 1 | | | 7 | 8 | |
| 7 | 4 | | | 6 | 2 | 3 | 5 | |
| | | | | | | | | |
| | 6 | 7 | | 4 | | | | |
| | | | | 3 | | | 2 | |
| | 3 | 9 | | | 6 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 6 | 7 | 8 | 4 | 3 | 1 | 2 |
| 7 | 2 | 3 | 6 | 5 | 1 | 8 | 9 | 4 |
| 1 | 8 | 4 | 2 | 3 | 9 | 7 | 6 | 5 |
| 4 | 9 | 5 | 3 | 6 | 8 | 1 | 2 | 7 |
| 2 | 1 | 8 | 9 | 7 | 5 | 4 | 3 | 6 |
| 3 | 6 | 7 | 4 | 1 | 2 | 9 | 5 | 8 |
| 5 | 3 | 9 | 8 | 2 | 7 | 6 | 4 | 1 |
| 8 | 4 | 2 | 1 | 9 | 6 | 5 | 7 | 3 |
| 6 | 7 | 1 | 5 | 4 | 3 | 2 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரை யிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்ப தாகும். 1986 இல் ஜப் பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

மீனம்மா @meenammakayal

ஆசைக்கழகு
அவ்வப்போது மறந்து
போவது
நினைவில் நின்று
இம்சிக்கின்றன தீரா
ஆசைகள்.

செல்போன் யூஸ் பண்ணுறது அதிக மாகிவிட்டதால அதோட விலையை குறைச்சதா சொல்லுறாங்க...



அப்புறம் ஏண்யா அரிசி பருப்பு விலை குறையாம இருக்கு... இதைக் கேட்டா அடிக்க வாராங்க...!






# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** அன்பு நிறைந்த மனதுடன், மற்றவரிடம் பழகுவீர்கள். சாமர்த்தியமாகச் செயற்பட்டு, தொழிலில் வளர்ச்சி காண்பீர்கள். வருமானம் உயரும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** பொறாமையுடன் பழகுபவரிடம் நெருங்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில், கடின உழைப்புத் தேவைப்படும். மிதமான இலாபம் கிடைக்கும். தாயின் தேவையை அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** வீண் பேச்சு பேசுபவரிடம் இருந்து விலகுவது நல்லது. தொழிலில் குறுக்கிடும் இடையூறுகளைச் சரி செய்வது அவசியம். இலாபம் சுமாராக இருக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு மனதுக்கு நிம்மதியளிக்கும்.

**கடகம்:** மனதில் நற்சிந்தனை மேலோங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், வாழ்க்கைத் தரம் உயரும். உபரி வருமானம் கிடைக்கும். பெண்கள், புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு.

**சிங்கம்:** நற்செயலில் ஈடுபட்டு, புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும்.

**கன்னி:** உணர்ச்சி வசப்படும் சூழல் உருவாகலாம். தொழிலில், விற்பனை சராசரி அளவில் இருக்கும். பெண்கள் செலவில் சிக்கனமாக இருப்பது நல்லது. சொத்து ஆவணங்களை பிறர் பொறுப்பில் கொடுக்க வேண்டாம்.

**துலாம்:** திடீர் நெருக்கடி உருவாகலாம். தொழிலில், விடாமுயற்சியும் கடின உழைப்பும் தேவைப்படும். இலாபம் சுமார். பெண்கள் பணத் தட்டுப்பாட்டால் சிரமப்படுவர். உடல்நலனில் அக்கறை தேவை.

**விருச்சிகம்:** திறமையை வளர்த்துக் கொண்டு முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். இலாபம் படிப்படியாக உயரும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும்.

**தனுசு:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருங்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள், செலவுக்காகக் கடன் வாங்க நேரிடலாம். விலை மதிப்புமிக்க பொருள்களைக் கவனத்துடன் பாதுகாக்கவும்.

**மகரம்:** குடும்பத்தினர் பாசத்துடன் நடந்து கொள்வர். தொழில், வியாபார வளர்ச்சியால், புதிய சாதனை படைப்பீர்கள். இலாபம் அதிகரிக்கும். ஏழை எளியவர்களுக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள்.

**கும்பம்:** எவரிடமும் நிதானித்து பேசுவது நல்லது. தொழில் வளர்ச்சிக்கு, கூடுதல் மூலதனம் தேவைப்படும். இலாபம் படிப்படியாக உயரும். பெண்கள், நகை, பணத்தை, யாருக்கும் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.


**மீனம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் திருப்திகரமாக இருக்கும். அந்தஸ்து மிக்கவர்களின் அறிமுகத்தால், நன்மை உண்டாகும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

படித்ததில் பிடித்தது

முன்பள்ளி
ஒன்றின் உண
வறையில் ஒரு கூடை
நிறைய அப்பிள்கள்
வைக்கப்பட்டிருந்தன.
அந்தக் கூடையின் மேல்,
“ஒன்றுக்கு மேல் எடுக்காதீர்கள்;
கடவுள் பார்த்துக் கொண்டி
ருக்கிறார்” என வாசகம் எழுதி
இருந்தது.
சற்று தொலைவில் ஒரு பெட்டி
நிறைய சொக்லேட்டுகள் வைக்
கப்பட்டிருந்தன.
அந்தச் சொக்லேட் பெட்டியின் மீது
ஒரு குழந்தை பின்வருமாறு எழுதி
யது:
“எவ்வளவு வேண்டுமோ
எடுத்துக் கொள்ளுங்கள்;
கடவுள், அப்பிளைப்
பார்த்துக் கொண்
டிருக்கிறார்!”

WhatsApp

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பாதுகாப்பான கையேடுகள்

பாதுகாப்பு வசதியுடன் கையேடுகள் அறிமுகமாகியுள்ளன. ஓட்டோகிராப் அல்லது விஷேட கையேட்டுக் குறிப்பாகப் பயன்படும் ஏடு சிறப்பு வடிவமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளன. முப்பரிமாண அலங்காரங்கள், கைபிடிகள், சிறப்பு பூட்டுக்களுடன் உருவாகியுள்ளன. இவற்றின் விலை 450 தொடக்கம் 700 ரூபா அகும்.



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 700 | 900 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 800 | 700 | 500 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 800 | 600 | 550 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 400 | 500 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 600 | 600 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 450 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | 200 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | 300 | 360 |
| நகரை | 250 | 300 | – | 300 | 600 | 300 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | 400 | 200 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 300 | 300 | 200 |
| மதனம் | 150 | 250 | 180 | – | 300 | – | 300 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 400 | 300 | 400 | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 400 | 300 | – |



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | 80 | 100 | 160 | 80 | 120 | – | 60 |
| கத்தரி | 90 | 60 | 80 | 100 | 50 | 200 | – | 80 |
| கரட் | 200 | 300 | 320 | 240 | 280 | 300 | – | 160 |
| மரவள்ளி | 80 | 70 | 70 | 70 | 70 | 80 | – | 40 |
| பயிற்றை | 160 | 140 | 160 | 120 | 160 | 120 | – | 80 |
| பாகல் | 250 | 200 | 260 | 180 | 200 | 200 | – | 160 |
| கருணைக்கிழங்கு | – | – | 120 | 160 | 100 | – | – | 70 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 160 | 100 | 180 | 140 | 200 | – | 130 |
| பூசணி | 70 | 80 | 80 | 100 | 80 | 100 | – | 80 |
| தக்காளி | 200 | 180 | 240 | 140 | 160 | 200 | – | 150 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 80 | 60 | 80 | – | 40 |
| கீரை | 10 | 30 | 30 | 30 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 45 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 600 | 600 | 600 | 600 | 800 | – | 500 |
| புடோல் | 80 | 80 | 100 | 140 | 100 | 120 | – | 80 |
| கோவா | 180 | 160 | 160 | 140 | 160 | 220 | – | 140 |
| வெண்டி | 120 | 100 | 120 | 140 | 80 | 200 | – | 80 |
| போஞ்சி | 200 | 200 | 140 | 240 | 200 | 240 | – | 160 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 240 | 160 | 250 | – | 100 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 30–35 | 30 | 35 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 100 | 100–110 | 100 | – | 100 |
| தேசிக்காய் | 200 | 200 | 240 | 240 | 200 | 150 | – | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | – | 300 | 240 | 300 | 200 | – | 150 |
| இராசவள்ளி | 150 | – | 180 | 280 | 180 | 160 | – | 120 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 800 | 400 | 700–800 | 300 | – | 400 |



## முந்திரிப் பக்கோடா

**தேவையானவை**

முந்திரிப் பருப்பு, கடலை மா - தலா 1கப்
அரிசி மாவு-அரைக்கரண்டி
மிளகாய்த்தூள், நெய் -2 கரண்டி
பச்சை மிளகாய்-1
உப்பு-தேவையான அளவு
எண்ணெய் -தேவையான அளவு

**செய்முறை**

முந்திரிப்பருப்பைச் சற்றுப் பொடியாக நறுக்கவும். அதனுடன் கடலை மா, அரிசி மா, மிளகாய்த்தூள், சோம்பு, பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய், நெய், உப்பு, சிறிதளவு தண்ணீர் சேர்த்துக் கெட்டியாக பிசையவும். இந்தக் கலவையைச் சூடான எண்ணெயில் சிறிது சிறிதாகப்போட்டுப் பொரிக்கவும்.

## நாளை

ஆனி-11
சனிக்கிழமை - 25.06.2016
திதி: பஞ்சமி பி.ப.02.55வரை
நட்சத்திரம்: அவிட்டம் மு.ப.09.09 வரை
ராகுகாலம்: 08.55-10.25 வரை
சுபநேரம்: 02.55-04.25 வரை

## சமையல் அறை முதலுதவி

* அரிசி கழுவிய இரண்டாவது தண்ணீரில், மணத்தக்காளி கீரையைச் சேர்த்துக் கொதிக்கவைத்து, சீரகம் கலந்து, மை போல் இருக்கும் பதத்தில் சாப்பிட, குடற்புண்கள் குணமாகும்.
* பல் வலிக்கு, ஒரு கிராம் தோல் நீக்கிய சுக்கு, ஓர் ஏலக்காயில் உள்ள விதைகள் (ஏல அரிசி), மூலிகைச் சாம்பிராணி ஆகியவற்றை, சம அளவில் எடுத்து, தண்ணீர் விட்டு அரைத்து அவ் விழுதை, வலி இருக்கும் இடத்தில் வைத்துக்கொண்டால், வலி குறையும். மேலும், வலி இருக்கும் இடத்தில் ஒரு மெல்லிய துணியில் ஐஸ் கட்டியைப் போட்டு ஒத்தடம் கொடுக்க, வலி குறையும்.
* சின்னக் குழந்தைகளுக்கு, வயிற்றிலிருந்து சத்தம் வரும். அதைப் பொருமல் என்பர். இந்தப் பிரச்சினையால், குழந்தைகள் சாப்பிடாமல் அழுதபடியே இருக்கும். ஒரு பங்கு ஓமம், கால் பங்கு பெருங்காயம் கலந்து, இட்லி அல்லது மோர் சாதத்தில் உருட்டிக்கொடுக்க, வயிற்றுப் பொருமல் நீங்கி, குழந்தை நன்றாகத் தூங்கும். இ[illegible] பிரச்சினை பெரியவர்களு[illegible] இருந்தால், ஒரு பங்கு உ[illegible]ளிக்கு, கால் பங்கு பெ[illegible]காயம், சுவைக்கு ஏற்ப க[illegible]பட்டி கலந்து, ஒரு நெ[illegible] அளவு உருண்டையாக உ[illegible]டிச் சாப்பிட வேண்டும்.
* தலைவலி நீங்க நொ[illegible] இலை அல்லது து[illegible] இலையை, வெந்நீ[illegible] போட்டு ஆவி பிடிக்கல[illegible] மருதாணிப் பூ, நொ[illegible] இலைகளை, தலையணை[illegible]க் கீழ்வைத்துப் ப[illegible]தாலும், தலைவலி அடிக்[illegible] வராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நுட்பம்



### மெல்லிய மடிக்கணினி

கணினி துறையில் முன்னணியில் திகழும் எச்பி நிறுவனம், உலகின் மெல்லிய மடிக்கணினியை அறிமுகம் செய்துள்ளது.

இந்த மடிக்கணினி 10 மி.மீற்றர் தடிப்பை மட்டுமே கொண்டுள்ளது. அத்துடன் 1.1 கி.கி எடை கொண்டதாக இருக்கும் இது 13.3 அங்குல திரையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த மடிக்கணினி ஐ7 புரெசஸருடன் வெளிவருகிறது. இதில் 8 ஜிபி நினைவகம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஹைபொர்னிக் கூலிங் தொழில்நுட்பம் மடிக்கணினி விரைவில் சூடாவதையும், மடிக்கணினியின் உட்பகுதி சூடால் பாதிப்படைவதையும் தடுக்கிறது.

ஒருமுறை மின்னேற்றினால் 9 மணி நேரத்திற்கும் அதிகமாக நிலைத்து நிற்கும் பற்றறி இணைக்கப்பட்டுள்ளது.

### மைக்ரோ மீற்றர் தடிப்புடைய ஒளி மின்னழுத்த கலங்கள்



ஒரு மைக்ரோ மீற்றர் தடிப்புடைய ஒளி மின்னழுத்த கலங்களை உருவாக்கி தென் கொரிய விஞ்ஞானிகள் சாதனை படைத்துள்ளனர்.

இது மனித தலை முடியிலும் மிகச் சிறியது என இதனை உருவாக்கிய ஆய்வுக் குழுவில் உள்ள விஞ்ஞானி தெரிவித்தார்.

சாதரணமாக மனிதத் தலை முடியானது 10 முதல் 300 வரையான மைக்ரோ மீற்றர் தடிப்புடையது.

அதேவேளைதற்போதுபயன்பாட்டிலுள்ள ஒளி மின்னழுத்த கலங்களிலும் 100 மடங்கு சிறியது. அதன் திணிவும் சிறியது எனக் கூறப்பட்டுள்ளது.

இச் சிறிய கலங்கள் வளைக்கப்படும் போது முறியும் தகவு குறைந்தவை. அத்துடன் இவை மிக அதிகளவான சக்தியை உறிஞ்சுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

# அமைச்சரவைக் கூட்டத்துக்கு சென்றதால் அம்பலமானது சதி

## இப்படிச் சொல்கிறார் வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், ஜூன் 24

அமைச்சரவைக் கூட்டத்திற்கு நான் சென்றதால்தான் மிகப் பெரும் சதி அம்பலமானது. கொழும்பு அரசின் அமைச்சர்களான ஹறிசன் மற்றும் ரிசாட் பதியுதீன் ஆகியோர் பொருளாதார மையத்தை மதவாச்சிக்கு கொண்டு செல்ல இருந்த திட்டம் வெளிச்சத்துக்கு வந்தது. இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக் னேஸ்வரன்.

ராஜா பிளாசா மாதிரிக் கிராமம் 15 வீட்டுத்திட்ட திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முதலமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்தாவது: கடந்த திங்கட்கிழமை கொழும்பு அமைச்சர்களுடன் மற்றைய முதலமைச்சர்களுடன் ஜனாதிபதி முன்னிலையில் கூட்டத்தில் பங்கு பற்றும் வாய்ப்பு கிடைத்தது. கூட்டத்திற்குச் சென்ற பின்னர்தான் தெரிந்தது வட மாகாணம் சம்பந்தமாக அங்கு ஒரு சதி நடைபெற இருந்தது என்பது. நான் சென்றதால் சதி அம்பலமா னது.

வடக்கு மாகாணம் நோக்கி எமக்கு பொருளாதார மையமொன்றைத் தருவது போல் இதுகாறும் பெரிதாகக் கூறி வந்த கிராமிய பொருளாதார அமைச்சர் ஹறிசன், தன் உள்ளக் கிடக்கையை அன்று வெளியிட்டுவிட்டார். நான் அன்று வருகை தர இருந்ததை அவர் எதிர்பார்க்கவில்லை.

வடக்கு மாகாண மக் களிடையே பொருளாதார மையத்தை எங்கு நிலவுவது என்பதில் உறுதியான நிலைப்பாடு இல்லாததால், அதனை மதவாச்சியில் அமைக்க வேண்டும் என்று கேட்டு நிகழ்ச்சி நிரலுக்கு அப் பால் 'வேறு விடயங்கள்' என்ற தலைப்பின் கீழ் தமது கருத்தைத் தெரி வித்தார். இதற்கு அமைச்சர் ரிசாட் பதியுதீனும் ஒத்துப் போனார்போல் தெரிந்தது.

**தாண்டிக்குளம் பொருத்தமில்லை**

நான் விளக்கமளிக் கையில், பொருளாதார மையம் வவுனியாவில் நிறுவுவது சம்பந்தமாக எமக்கு அறிவிக்கப் பட்டது. இதற்கு ஐந்து இடங்களை அடையாளம் கண்டோம். அவற்றில் எது சிறந்தது என்று நிபுணர்கள் குழு ஒன்றை அமைத்துக் கேட்டோம். அவர்கள் தாண்டிக் குளத் திலும் மற்றைய மூன்று இடங்க ளிலும் அமைப்பது கூடாது என்றனர். ஓமந்தையில் அமைப்பதே சிறந்தது என்றும் கருத்து வெளியிட்டனர்.

தாண்டிக்குளத்தில் அமைத்தால் எமது விவசாய கல்லூரியும் விவசாயப் பண்ணையும் பாதிக்கப்படும் என்று கூறினார்கள். வேறு பல காரணங்களையும் முன்வைத்தார்கள். எனவே நான் ஓமந்தையில் நிறுவுமாறு அமைச்சரிடம் கேட்டிருந்தேன். அதன் பின் நான் பங்குபற்றாமல் நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ரிசாட் பதியுதீன் தாண்டிக்குளத்தில் நிறுவ வேண்டும் என்று கூறி முடிவு எடுக்க வைத்தார். இந்தப் பிரச்சி னையைத் தொடக்கி விட்டவரே அவர்தான்.

பிரச்சினையாகியவுடன் பொருளாதார மையத்தை இழக்கக் கூடாதென்ற காரணத்தினால் நான் அமைச்சர் ஹறிசனைப் போய் நேரில் சந்தித்தேன். அவர் தாண்டிக்குளமும் ஓமந்தையும் தூரமாய்ப் போய்விட்டன, வவுனியா நகரத்தினுள் ஒரு இடம் தரவேண்டும் என்று என்னிடம் கேட்டார்.

நிலையம் வடக்கு நோக்கி அமைதலே உசிதம். இது வடக்குக்குக் கிடைக்க வேண்டிய மையம். எனவே மாங்குளத்தில் அமைப்பதே சிறந்தது. அப்படி இல்லை என்றால் வவுனியாவின் வடக்கில் இருக்கும் ஓமந்தையே சிறந்தது என்று கூறிப்பார்த்தேன்.

**ரிசாட் விடாப்பிடி**

அமைச்சர் ஒரேயடியாக நகரத்தினுள் இடந் தாருங்கள் என்று விடாப்பிடியாகக் கேட்டார். எனவே ஒரு வாரத்தினுள் நான் அவர் கேட்டவாறு ஏ 9 பாதையில் பஸ் நிலையத்திற்குப் பின்புறமாக மதவுவைத்த குளத்தில் ஐந்து ஏக்கர் காணியை அடையாளம் காட்டினேன். ரிசாட் பதியுதீன் அமைச்சராக இருந்த காலத்தில் அவரின் கோரிக்கைக்கு அமைய ஒரு கம்பனிக்குக் குத்தகைக்கு விடப்பட்டதாக அமைச்சர் ஹறிசன் கூறினார். நான் விசாரித்துப் பார்த்து அப்படியல்ல, குத்தகைக்கு எடுப்பதாக இருந்த கம்பனி கூறப்பட்ட பூர்வாங்க நடவடிக்கைகளில் இறங்காமலே இரண்டு வருடங்கள் சென்றுவிட்டது. இந்த நிலையில் காணியைத் திரும்பப் பெறுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்பதை அவருக்குத் தெளிவுபடுத்தினேன்.

இது பற்றிய காணி ஆணையாளரின் கடிதமும் கையளிக்கப்பட்டது. அப்படியிருந்தும் அன்று காலை கூட்டத்திற்கு முன்னர் அமைச்சர் ஹறிசன் என்னைச் சந்தித்து அவ்விடம் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டுள்ளது என்றார். எந்தவித குத்தகையும் கைச்சாத்திடப்படவில்லை என்று கூறினேன். அவர் ஏற்கவில்லை. பின்னர் கூட்டத்தில் அவரின் கூற்றின்போது பதில் அளிக்கையில் எம் மைப் பயப்படுத்திக் காரியம் சாதிக்கப் பார்க்கின்றார் அமைச்சர் என்று கூறி, வடமாகாணத்திற்கு எப்படி என்றாலும் பொருளாதார மையத்தைத் தரவேண்டும் என்றேன்.

**தாண்டிக்குளத்தில் அமையுங்கள்**

நிபுணர்கள் கூடாது என்று கூறியிருப்பினும் கட்டாயத்தின் பேரில் வேண்டுமானால் தாண்டிக்குளத்தில் அமையுங்கள் என்றேன். முழு அமைச்சர் குழாமிற்கும் கேட்கும்படியாக பொருளாதார மையம் வடமாகாணத்திற்கு அவசியம் என்பதை எல்லோரும் தெரிந்து வைத்திருக்கவேண்டும் என்றேன்.

மத்திய அமைச்சர் மதவாச்சிக்குக் கொண்டுபோக ஆவணம் சமர்ப்பித்துள்ளார் என்பதை அமைச்சர் ரிசாட் அறிந்தும் கூட மதவாச்சிக்கு எடுத்துச்செல்லும் ஹறிசனை விமர்சிக்கவில்லை. தாண்டிக்குளத்திற்கு எடுத்துச் செல்ல முதலமைச்சர் இணங்கினார் என்று ஜனாதிபதிக்குக் கூறினார். தாண்டிக்குளத்தில் அமைக்கத் தீர்மானம் எடுக்க வேண்டும் என்றார்.

ஜனாதிபதியோ சிரித்துக் கொண்டு இல்லை! இதை பிரதமருடன் பேசி சுமுகமான ஒரு முடிவுக்கு வாருங்கள் என்றார். அமைச்சர் ரிசாட்டுக்கு தாண்டிக்குளத்தில் அமைப்பதால் எமக்கு ஏற்படப் போகும் பாதிப்புக்கள் பெரிதாகப்படவில்லை. விவசாயக் கல்லூரி, விவசாய நிலம், விவசாய நடவடிக்கைகளுக்கு ஏற்படப்போகும் பாதிப்புக்கள் பெரிதாகப்படவில்லை. ஆகவே தமிழ் மக்களுக்கு வரவேண்டிய, வரக்கூடிய பல திட்ட அமைவுகளையும் சூறையாட நடவடிக்கைகள் திரைமறைவுகளில் நடக்கின்றன என்பது புலனாகின்றது – என்றார்.

(வ-5)

## கடும் சுகவீனத்தின் மத்தியிலும் முதலமைச்சரின் கடமை உணர்வு



வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் கடும் சுகவீனம் காரணமாக பங்கேற்கவில்லை.எனினும் முதலமைச்சரின் அர்ப்பணிப்பான எண்ணத்தின் பிரகாரம் மாலை இடம்பெற்ற மக்களுக்கு வீடு கையளிக்கும் நிகழ்வில் பங்கேற்றார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று இடம்பெற்றது. இதன் போது அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் சுகவீனம் காரணமாக இன்றைய (நேற்றைய) அமர்வில் பங்கெடுக்க மாட்டார். இந்தத் தகவலை அவரது பிரத்தியேக செயலாளர் அறியத் தந்துள்ளார் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதனால் வடக்கு மாகாண சபையில் முன்வைக்கப்பட்ட, முதலமைச்சர் பதிலளிக்க வேண்டிய பல்வேறு விடயங்கள், அடுத்த அமர்வுக்கு ஒத்திவைக்கப்பட்டன.

இந்த நிலையில் நேற்று மாலை இடம்பெற்ற ராஜா பிளாசா மாதிரிக் கிராமம் 15 வீட்டுத்திட்ட திறப்பு விழாவில் முதலமைச்சர் கலந்து கொண்டிருந்தார். இந்த நிகழ்வில் அவர் உரையாற்றும் போது, "நான் வைத்தியசாலையிலிருந்து நேரே வீடு சென்று குளித்து விட்டு இங்கேதான் வருகின்றேன்" என்று தெரிவித்திருந்தார். கடும் சுகவீனத்துக்கு மத்தியிலேயே அவர் நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்றிருந்தார்.

அத்துடன், இந்த நிகழ்வில் 10 பக்கங்களுக்கு அதிகமான நீண்ட உரையையும் தயார் செய்து வடக்கு முதலமைச்சர் க.வி.விக் னேஸ்வரன் வாசித்திருந்தார். இந்தச் செயற்பாடானது முதலமைச்சர் மக்களுக்கான நலத் திட்டங்களை வழங்கும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் அர்ப்பணிப்பான எண்ணத்தை வெளிக்காட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சத்திரசிகிச்சைப்பிரிவு தாதியர் இன்று பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்.போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைப் பிரிவிலுள்ள தாதியர்கள் மட்டும் இன்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவர் என்று வைத்தியசாலையின் அரச தாதிய சங்கம் தெரிவித்துள்ளது.
தமது கோரிக்கை இன்றும் தீர்க்கப்படாது விட்டால், நாளை அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த தாதியர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவர் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.
சத்திர சிகிச்சைக்கூடத் தாதி ஒருவர் மீது குற்றச்சாட்டு ஒன்று சுமத்தப்பட்டுள்ளது. இந்தநிலையில் விசாரணை முடியும்வரை அந்தத் தாதியை தாதியர் பரிபாலகர் அறையில் கடமையாற்றுமாறு நிர்வாகம் கூறியுள்ளதோடு, வேறு தாதியை சத்திர சிகிச்சைக் கூடத்தில் பொறுப்பேற்குமாறு கூறப்பட்டுள்ளது. இந்த இடமாற்றத்தை நிறுத்துமாறு கோரி பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவதாக சங்கம் தெரிவித்துள்ளது. (வ-4)

## பன்னாட்டு சித்திரப்போட்டியில் உடுப்பிட்டி மாணவன்

உலக உணவு ஸ்தாபனத்தால் நடத்தப்பட்ட சர்வதேச ரீதியிலான பூச்சியப்பசி (பசியற்ற உலகம்) என்னும் தொனிப் பொருளிலான, பன்னாட்டு சித்திரப்போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி மாணவன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
அண்மையில் நடத்தப்பட்ட இந்தப் போட்டியில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரியைச் சேர்ந்த மாணவனான சுரேந்திரன் சாதுரியன் இலங்கையிலிருந்து ஒருவராகவும், பன்னாட்டு ரீதியில் தெரிவு செய்யப்பட்ட இருபது பேரில் ஒருவராகவும் பங்கேற்கிறார். (வ-ஜ-108)



## 5 மாதங்கள்

துன்புறுத்தல்களுக்கு உள்ளாகினர்.
இந்த வருடத்தில் மட்டும் இதுவரை (மே 19ஆம் திகதி வரை) 3 பேர் கொல்லப்பட்டனர். 14 சிறுமிகள் வன்கொடுமைகளுக்கு உள்ளாகினர். 16 வழிப்பறிக் கொள்ளைகளும், 23 வீடுடைப்புக் கொள்ளைகளும் இடம்பெற்றன.
இந்தத் தகவல்களை நாடாளுமன்றில் முன்வைத்தார் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க
யாழ்.குடாநாட்டில் போதைப் பொருள் பாவனை, கொள்ளை, வாள்வெட்டுக் கொலை, அச்சுறுத்தல், சிறுவர் மற்றும் பெண்கள் மீதான கொடுமைகள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டு, அதனைக் கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கை என்ன என்று நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா நிலையியற் கட்டளையின் கீழ் நேற்றுக் கேள்வியெழுப்பியிருந்தார்.
இதற்குப் பதிலளித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். சட்டம் ஒழுங்குகள் அமைச்சர் சாகல ரத்நாயக்க இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:
குற்றச்செயல்கள் தொடர்பான வருடாந்த அறிக்கையின் தகவல்களை ஆராய்ந்து பார்க்கும்போது, குடாநாட்டில் அண்மைக் காலமாகப் பதிவாகும் குற்றச் செயல்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

**கொலைகள்**

யாழ். குடாநாட்டில் 2011 - 23, 2012 - 16, 2013 - 11, 2014 - 10, 2015 - 11 எனக் கொலைகள் இடம்பெற்றன. 2016 ஜனவரி முதல் மே 19 வரை 03 கொலைகள் இடம்பெற்றன.
அத்துடன், பாலியல் துன்புறுத்தல்கள் 2011 - 34, 2012 - 41, 2013 -36, 2014 - 33, 2015 - 26, 2016 ஜனவரி முதல் மே 19 வரை 14 சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

**வழிப்பறிக் கொள்ளை**

இந்தக் காலப் பகுதிகளில் 50 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட வழிப்பறிக் கொள்ளைச் சம்பவங்களாக 2011 இல் 51, 2012 இல் 61, 2013 இல் 63, 2014 இல் 36, 2015 - 37, 2016 ஜனவரி முதல் மே 19 வரை 16 என மொத்தமாக 264 கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

**வீடுடைத்துக் கொள்ளை**

மேலும், 50 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட வீடுடைப்புக் கொள்ளைகளாக 2011 - 81, 2012 - 83, 2013- 93, 2014 இல் 107, 2015 இல் 52, 2016 ஜனவரி முதல் மே 19 வரை 23 என மொத்தமாக 439 வீடுடைப்புக் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.
இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு பொலிஸாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இதற்கு மேலும் உரிய நடவடிக்கைகள் திட்டமிடப்படுகின்றது என்பது தெளிவாகின்றது - என்றார். (வ-4)

## மல்லாவியில்

நிலையத்தில் குவிந்த பொது மக்களால் அங்கு பரபரப்பும் திடீர் பதற்றமும் ஏற்பட்டது. முறைப்பாட்டைப் பதிவு செய்த பொலிஸார் குற்றம்சாட்டப்பட்ட இளைஞனைக் கைது செய்ய முடியாது எனத் தெரிவித்ததால் இந்த நிலை ஏற்பட்டது என்று பொது மக்கள் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
மல்லாவி ஒட்டன்குளம் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் மாடு கட்டச் சென்ற 15 வயதுடைய சிறுமியுடன் இளைஞர் ஒருவர் தவறாக நடக்க முயற்சித்துள்ளார். சிறுமி வீடு திரும்பியதும் பெற்றோரிடம் இதைத் தெரிவித்தார்.
சம்பவம் தொடர்பில் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுடன், அந்தச் சிறுமியை கிளிநொச்சி வைத்திய சாலையில் உறவினர்கள் சேர்த்தனர்.
இது தொடர்பில் முறைப்பாட்டைப் பெற்றுக்கொண்ட பொலிஸார், குற்றம்சாட்டப்பட்ட இளைஞனைக் கைது செய்யவில்லை. இதனால் நேற்றிரவு பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது பதற்றம் பரவியது.
இதேவேளை, சந்தேகநபரான இளைஞன் மாங்குளம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் என பாதிக்கப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்ட போதும், பொலிஸ் தரப்பிடமிருந்து அதனை உறுதிப்படுத்த முடியவில்லை. (வ-21)

## மாணவர்

கைது செய்யப்பட்ட அதிபர் மற்றும் மற்றொரு ஆசிரியரையும் எதிர்வரும் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாண நீதிவான் மன்றம் உத்தரவிட்டது.
மாணவியின் முறைப்பாட்டை அதிபருக்கு தெரியப்படுத்தியபோதும், அதனைப் பொலிஸாருக்கு அறிவிக்காத குற்றச்சாட்டில் மற்றொரு ஆசிரியை விசாரணையில் உள்ளார் என்று யாழ்.பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் கஸ்ரன் ஸ்ரானிஸ்லஸ் தெரிவித்தார்.
ஆசிரியர்கள் மற்றும் அதிபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி பாடசாலை மாணவர்கள் நேற்று முன்தினம் பேராட்டம் நடத்தியிருந்தனர். ஆசிரியர்கள் மற்றும் அதிபர் கைது செய்யப்பட்டனர்.
சம்பவம் தொடர்பில் ஆசிரியை ஒருவர் அந்தப் பாடசாலை அதிபருக்கு முறைப்பாடு செய்த போதும், அதுபற்றி பொலிஸாருக்கு ஏன் அறிவித்திருக்கவில்லை என்ற கோணத்திலும் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். அதன் பின்னரே அந்த ஆசிரியை இன்று விசாரணைக்கு உட்படுத்தப்படுவார் என்றும் யாழ். பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.
இதேபோன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் தென்மராட்சி வலயப் பாடசாலை ஒன்றைச் சேர்ந்த ஆசிரியர் மற்றும் சம்பவங்களை மறைத்த குற்றச்சாட்டில் அதிபர், உபஅதிபர், மற்றும் 2 ஆசிரியைகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (வ-4,106)


# நினைவஞ்சலி

23ஆம் ஆண்டு

தோற்றம் 09 . 09 . 1919 — மறைவு 12 . 04 . 1993



முதலாம் ஆண்டு

தோற்றம் 02 . 06 . 1926 — மறைவு 05 . 07 . 2015



அமரர் கந்தையா தம்பிப்பிள்ளை (J.P)

(சமாதான நீதிவான், முன்னாள் கைதடி நாவற்குழி கிராமசபைத் தலைவர், கைதடிச் சந்தி பிரபல வர்த்தகர், கைதடி மத்தி ராஜிகா ஸ்ரோர்ஸ் உரிமையாளர், கைதடி மானிப்பாய் வீதி தம்பிப்பிள்ளை கட்டட உரிமையாளர்)

திருமதி மீனாட்சிப்பிள்ளை தம்பிப்பிள்ளை





"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"
பாசத்தின் உறைவிடமாய் அன்பின் திருவுருவாய் கருணையின் இருப்பிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய் எங்கள் அனைவரையும் வழிநடத்திய எங்கள் அன்புத் தெய்வங்களே எத்தனை காலங்கள் போனாலும் உங்கள் நினைவுகள் எங்கள் உயிர் உள்ளவரை தொடரும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!
எம் குலதெய்வங்களின் ஆத்ம சாந்திக்கிரியைகள் எமது இல்லத்தில் இன்று (24.06.2016) வெள்ளிக்கிழமை நடைபெறும்.
என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள், மருமகன், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

மாவடிக்கந்தன் ஆலயம் முன்,
கைதடி மத்தி, கைதடி.

075 040 2302/075 673 6874

தம்பிப்பிள்ளை புஸ்பராசா (மகள்)
"இராஜேஸ்வரி பவனம்"
கைதடி தெற்கு, கைதடி.

(57988) (45.3.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கி

வையா என்பது குறித்து விசாரணைகளை கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.
தான் வங்கியில் பெற்ற பணத்தில் இந்தப் போலி நாணயத் தாள்கள் இருந்தன என்று பெண் ஒருவர் முறைப்பாடு செய் தார். இதையடுத்தே பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது:
பெண் ஒருவர் நேற்றுக் காலை வங்கிக்குச் சென்றார். தனது 17 பவுண் நகைகளையும் அங்கு அடைவு வைத்தார். 4 லட்சத்து 90 ஆயிரம் ரூபா பணத்தை வங்கியில் இருந்து பெற்றுக்கொண்டு புறப்பட்டார். சிறிது நேரத்தின் பின்னர் இளவாலைப் பொலிஸ் நிலையம் சென்று குறித்த பெண், தான் வங்கியில் பெற்ற பணத்தில் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான போலி நாணயத் தாள்கள் இருந்தன என்று முறையிட்டார்.
"இந்த முறைப்பாடு தொடர்பில் வங்கி அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்த பெண்ணிடமும் பொலிஸார் விசாரணை நடத்தினர். வங்கியின் சி.சி.ரி.வி. காணொளியும் பெறப்பட்டுள்ளது" என்று உதவிப் பொலிஸ் அத்தியட் சகர் ஏ.எம்.ஜவ்பர் தெரிவித் தார்.
மேலதிக விசாரணை களுக்காக இந்த வழக்கு கொழும்பு குற் றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது என்றும் அவர் தெரிவித்தார். (உ-வ-4,109)

## கண்ணீர் அஞ்சலி



யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சிவஞானம் சிறிதரன் அவர்களின் அன்புத் தந்தையார்

**சின்னத்துரை சிவஞானம்**

அவர்களின் மறைவுக்காக எமது கண்ணீர் காணிக்கைகளை 31 ஆம் நாளான இன்று சமர்ப்பிக்கின்றோம். அவரது ஆத்மா சாந்திய டைய பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது மக்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழரசுக் கட்சி,
ஊர்காவற்துறை தொகுதி

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22 . 07 . 1932



மறைவு
08 . 07 . 2014

**அமரர் வினாசித்தம்பி ஆச்சிமுத்து**

*ஆண்டுகள் இரண்டு சென்றிடினும்*
*மறைந்திடுமோ உன் நினைவு*
*பரிதவிக்குதம்மா எம் நெஞ்சம்*
*உன் புன்சிரிப்பைக் காண*
*விழியோரக் கண்ணீருடன் காத்திருக்கின்றோம்.*

அன்னாரின் நினைவையொட்டி இன்று (24.06.2016) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கற்பக்குனை,
உடுவில் வடக்கு, உடுவில்.

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.
077 45932 48

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் யோசப் தங்கராணி
(இராசையா மிஸ்)

மலர்வு
23.09.1943



இறப்பு
24.06.2015

அன்போடு அரவணைத்து ஆசையாய் அறிவுரைகள்
கூறி எம்மை எல்லாம் ஏற்றமுடன் வாழவைத்த
எம் குடும்பத் தலைவியே .....!
எத்தனை ஆண்டுகள் காலங்கள் சென்றாலும்
எம் இதயத்தில் வாழ்வீர் அம்மா!
உம்முகம் காணாது உம் பேரன்
உம்மை அன்போடு தேடுகிறான்
உம் உறவுகள் உமது அன்பான அரவணைப்பு
கிடையாமல் ஏங்கித் தவிர்க்கின்றனர்.
உம் ஆன்மா இளைப்பாற
இறைவனைக் கையேந்துகின்றோம்.

31, இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## சிறுவர்

பொலிஸ் அதிகாரிகள் இணைந்த - கூட்டான விசேட நடவடிக்கைக் குழுவை உடனடியாக நிறுவ வேண்டும். இவ்வாறு தெரிவிக்கும் தீர்மானம் வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் நிறைவேற் றப்பட்டது.
சபையின் 55 ஆவது அமர்வு நிறைவடை கின்ற வேளையில், பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணையை ஆளும் கட்சி உறுப்பினர் அஸ்மின் சபையில் முன்மொ ழிந்தார்.
"அண்மைக் காலமாக வடக்கில் பல்வேறு பகுதிகளிலும் சிறுவர்களுக்கு எதிரான துர்நடத்தைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இது பெரிய சமூகப் பிரச்சினையாக மாறி வருகின்றது. குறிப்பாக மாணவர்கள் இந்த விடயத்தில் அதிக பாதிப்பை எதிர்கொள்கின்றார்கள். நேரடியாகப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஒருபுறம் இருக்க, மறைமுகமாக மாணவர்கள் உளரீதியாகப் பாதிப்புக்கு உள்ளாகின்றார்கள்.
இதனை உடனடியாக கட்டுப்படுத்தவும் - நடவடிக்கை மேற்கொள்ளவும் - உரிய நடைமுறைச் சாத்தியமான செயன்முறை ஒன்றினை முன்மொழியவும் - உருவாக்கவும் ஏற்பாடுகள் வேண்டும். இதற்காக வடக்கு மாகாண கல்வி - சுகாதார அமைச்சர்கள், அதிகாரிகள், சிறுவர் நல அதிகாரிகள், மாகாண சபை உறுப்பினர்கள், பொலிஸ் அதிகாரிகளை உள்ளடக்கிய சிறப்புக் குழுவை நிறுவ வேண்டும்" என்று தெரிவித்தார் அஸ்மின்.

## மரண அறிவித்தல்

**தேவராசா நிறோஜ்**



(யா/கொக்குவில் இந்து பாடசாலை பழைய மாணவன், யா/ மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்)
பிறப்பு: 20.08.1999
இறப்பு: 23.06.2016

காளி கோயிலடி தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா நிறோஜ் நேற்று (23.06.2016) வியாழக்கிழமை அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னார் தேவராசா இந்திராணி தம்பதியரின் அன்புப் புதல்வரும், கிரியானி, நிகேதனன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லையா- பொன்னம்மா, மயில்வாகனம்- செல்லப்பாக்கியம் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக் காக பி.ப. 4.00 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளி கோவிலடி,
தாவடி வடக்கு, கொக்குவில்.
077 179 7935

தகவல்: குடும்பத்தினர்.
(S. தேவராஜா (நகுலன்- தந்தை)

## மரண அறிவித்தல்

**செல்லம்மா நாகலிங்கம்**



பாடசாலை வீதி, ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா நாகலிங்கம் கடந்த (22.06.2016) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2016) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி, ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

இதனை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா வழிமொழிந்தார். சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. (வ-5)

## வலி. வடக்கின்

கருணாசேன ஹெட்டியாராச்சி மற்றும் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரி சாந்த டி சில்வா ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொள்வர்.
வலி.வடக்கில் பாதுகாப்பு தரப்பினர் வசம் உள்ள காணிகளில், சிறுதுண்டுநிலமும் நாளை விடுவிக்கப்படவுள்ளது. குரும்பசிட்டி, கட்டுவன், காங்கேசன்துறை, வறுத்தலைவிளானில் முகாம் அமைந்துள்ள காணி ஆகியனவே விடுவிக்கப்படவுள்ளன. சில வீதிகளை விடுவிக்கப்படுவதாம் இந்தக் காணிகளும் மக்களிடம் கையளிக்கப்படவுள்ளன. இந்த வீதிகள் விடுவிக்கப்பட்டதும் காங்கேசன்துறை வீதி மக்களின் முழுமையான பயன்பாட்டுக்கு வந்துவிடும்.
குரும்பசிட்டிப் பகுதியில் பலரின் காணிகள் விடுவிக்கப்பட்ட போதும், அதற்கான வீதி விடுவிக்கப்படாதமையினால் காணி உரிமையாளர்கள் மீள்குடியேற முடியாத நிலை இருந்தது. இனி அதுவும் சரியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. கையளிப்பு நிகழ்வு நாளை சனிக்கிழமை காங்கேசன்துறையில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
இராணுவத்தினர் வசம் எஞ்சியுள்ள காணிகளை இனிமேல் பகுதி பகுதியாக விடுவிக்காமல் ஒரே தடவையில் விடுவிக்க வேண்டும். என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா கடந்த சனிக்கிழமை வலியுறுத்தியிருந்தார். எனினும் இப்போது மீண்டும் சிறிதளவு காணி விடுவிக்கப்படவுள்ளது. (உ-வ-5)

## வெளிநாட்டு

அடிப்படை உரிமைகள் மற்றும் வாக்குரிமை ஆகியவற்றில் மக்களின் இறையாண்மை தங்கியுள்ளது.
பல்வேறு நிறுவனங்களும் இந்த அதிகாரங்களை மக்களின் பெயரால் அனுபவிக்கின்றன. ஆட்சி அதிகாரங்களை வெவ்வேறான ஆட்சி முறை நிறுவனங்களாக நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம் மற்றும் நீதித் துறை என்பன அனுபவிக்கின்றன. இவை ஒன்றில் இன்னொன்று தலையீடு செய்து கொள்வதில்லை. ஜனநாயகத்தையும் மக்களின் இறைமையையும் பாதுகாக்க இது அடிப்படையாகும்.
மக்கள் தங்களது இறையாண்மை மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க அர்த்தபூர்வமான பங்களிப்பை வழங்கவேண்டும். அவ்வாறு செய்ய வேண்டுமானால், நாட்டில் இடம்பெறும் விடயங்கள் பற்றி, குறிப்பாக ஆட்சிமுறை சம்பந்தமாக மக்கள் அறிந்திருக்க வேண்டும்.
அனைத்து தகவல்களையும் முழுமையாக அறியத்தருவது நடைமுறைச் சாத்தியமில்லை. தேசிய நலன் சார்ந்த விடயங்களை வெளிப்படுத்த முடியாது. ஆனால், ஆட்சிமுறை பற்றி நம்பகரமானதும் துல்லியமானதுமான தகவல்களை மக்கள் பெறக்கூடியதாக இருக்க வேண்டும். இலங்கையில் நிறுவனங்கள் அரசியல் மயப்படுத்தப்படும் கலாசாரம் இருக்கின்றது. நீதித்துறைகூட அதிலிருந்து தப்பியிருக்கவில்லை. இந்த நாட்டின் நீதித்துறை மீது ஒரு காலத்தில் மதிப்பு இருந்தது. நீதித்துறையின் சுயாதீனத்தன்மை மற்றும் பக்கச்சார்பின்மை பற்றிய அந்த மதிப்பு தொடர்ந்தும் நீடித்திருக்கவில்லை. இதன் விளைவாகச் சட்ட ஆட்சி பாதிக்கப்பட்டது. அதன் பெறுபேறாக நாடும் பாதிப்புகளைச் சந்தித் தது. இன் றும்கூட நீதி நிலை நாட்டப்படுவதை உறுதி செய்ய வெளிநாட்டு நீதிபதிகள் தேவை என்கின்ற நிலமையே காணப்படுகின்றது. வெளிநாட்டு நீதிபதிகளினால் மட்டுமே நீதியைப் பெற்றுத்தர முடியும் என் றும் மக்கள் கருதுகின்றனர்.
சட்ட வரைவின் உண்மையான நோக்கங்களை அடைவது என்றால், சட்டத்தின் கீழ் நிறுவப்படும் நிறுவனங்கள் சுயாதீனமாகவும் அச்சமின்றியும் செயற்படக் கூடியதாக இருக்கவேண்டும் – என்றார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் நடைபெற்றுவரும் வேளையில் சம்பந்தனின் இந்த வலியுறுத்தலும் வெளியாகி உள்ளது.
இலங்கையின் போர்க்குற்ற விசாரணைக்கு வெளிநாட்டு நீதிபதிகளை நியமிக்க கடந்த ஆண்டு இலங்கை அரசு ஐ.நா. மன்றத்தில் இணங்கியிருந்தது. எனினும் ஜனாதிபதி தற்போது வெளிநாட்டு நீதிபதிகளை நியமிப்பதை நிராகரித்து வருகின்றார். இவ்வாறானதொரு நிலையிலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், வெளிநாட்டு நீதிபதிகள் ஊடாகவே மக்களுக்கு நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார். (உ-வ-5)

## ரயில்

7.20 மணியளவில் சம்பவம் இடம்பெற்றதை அடுத்து ரயிலை நிறுத்தி, புனிதாவின் சடலத்தை ஏற்றி வந்து சாவகச்சேரி ரயில் நிலையத்தில் ஒப்படைத்து விட்டுப் பயணத்தைத் தொடர்ந்தது ரயில். கெற்பேலி மேற்கில் வாழ்ந்து வந்த புனிதாவிடம் இருந்த கடிதம் ஒன்று அவரது இறப்புக்கான காரணத்தைத் தெரிவிக்கக் கூடும் என்று பொலிஸார் தெரிவித்தனர். குடும்பத்தில் கடைசி மகள் புனிதா. இரு சகோதரிகளும், ஒரு சகோதரனும் இருக்கின்றனர். க.பொ.த. உயர்தரம் கற்று வந்தார். (உ-9-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தே

ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க. யாழ். குடாநாட்டில் அதிகரித்துவரும் போதைப் பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்று நிலையியற் கட்டளையின் கீழ் எழுப்பப்பட்ட கேள்விக்குச் சபையில் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

2015, 2016ஆம் ஆண்டுகளில் போதைப் பொருள் மற்றும் கேரளக் கஞ்சா சுற்றிவளைப்பு தொடர்பில் கடற் படையினரால் அதிக கவனம் செலுத்தப்பட்டது. 2015இல் கடற்படையினரால் நிலம் மற்றும் கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட 21 சுற்றிவளைப்புச் சந்தர்ப்பங்களில் 456 கிலோ கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இதில் 4 சந்தர்ப்பங்கள் கடற்பரப்பில் இடம்பெற்றன. இதன் போது 4 படகுகளில் 303 கிலோ கேரள கஞ்சாவுடன் 11 பேர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த ஜனவரி தொடக்கம் மே மாதம் வரையான காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 13 சுற்றிவளைப்புக்களில் நிலம் மற்றும் கடற்பரப்பில் 418 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது.கடற்பரப்பில் இடம்பெற்ற இரு சுற்றிவளைப்புகளில் சிறு படகுகளில் 119 கிலோ கேரளக் கஞ்சாவுடன் 7 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இதேவேளை யாழ்.குடாநாட்டில் போதைப் பொருள் மற்றும் கேரள கஞ்சா பாவனையைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட 9 சுற்றி வளைப்புக்களில் 140 கிலோ கஞ்சா மற்றும் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இந்தக் கேரள கஞ்சா மற்றும் போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதற்காக பொலிஸ் மற்றும் கடற்படையினரால் சுற்றி வளைப்புக்களும் விசாரணைகளும் முன்னெடுக்கப்படுகின்றன - என்றார். (வ-4)

## முன்பள்ளி

லிருந்து விடுவிக்க வேண்டும். வடக்கு மாகாண சபை இவற்றைப் பொறுப்பேற்க வேண்டும். இவ்வாறு கோரும் தீர்மானம் வடக்கு மாகாண சபையில் நேற்று நிறைவேற்றப்பட்டது. வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் கிளி நொச்சி மாவட்ட உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டதாவது:

இராணுவத்தினரால் நடத்தப்படும் சிறுவர் பாடசாலைகளில் 18 ஆயிரம் குழந்தைகள் கல்விகற்று வருகின்றார்கள். இலங்கை உட்பட உலகில் எந்தவொரு நாட்டிலும் சிறுவர் பாடசாலைகளை இராணுவம் நடத்துவதாகச் சான்றுகள் இல்லை. எமது குழந்தைகள் தாய்மொழியை சரியான முறையில் கற்க வேண்டும். தமிழர் பண்பாடு, சமய விழுமியங்களை சிறு பராயத்திலிருந்தே கற்றுக் கொள்ள வேண்டும்.

இதற்கு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து குழந்தைகள் விடுபட வேண்டும். சுயமாகப் பழகவும், ஆசிரியர்கள் சுயமாகக் கற்பிக்கவும் மாகாண சபை முழுமையாக நடவடிக்கை எடுக்கவேண்டும். நிறைவேற்றப்படும் இந்தத் தீர்மானத்தை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருக்கு அறிவிக்க வேண்டும். உடனடியாக இராணுவ கட்டமைப்புக்குள் இருந்து பாலர் பாடசாலையை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.இதனை இந்தச்சபைகோருகின்றது - என்றது.

"வன்னியில் மாத்திரம் இவ்வாறு நடைபெறவில்லை. ஏனைய மாகாணங்களிலும் இடம்பெறுகின்றன. இது இராணுவத்தினர் நடத்தும் ஒன்றல்ல. சிவில் பாதுகாப்பு பிரிவுதான் இதனைச்செயற்படுத்துகின்றது" என்றார் எதிர்க்கட்சியின் வவுனியா மாவட்ட உறுப்பினர் ஜெயதிலக. "இந்தத் தீர்மானத்தால் 527 முன்பள்ளி ஆசிரியர்களும் இங்கே நாளை போராட்டம் நடத்துவர். கடந்த வருடமே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனை மாகாண சபைக்குள் உள்வாங்கப் பணித்து விட்டார். மாகாணசபைதான் நடவடிக்கை எடுக்கவில்லை.

கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் துர் நடத்தைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள மேற்படி முன் பள்ளிகளில் எந்தத் துர்நடத்தைகளும் இடம்பெறவில்லை" என்றார் ஆளும் கட்சி உறுப்பினர் அரியரட்ணம்.

இந்த விடயத்தில் இறுதியாகக் கருத்துத் தெரிவித்த அவைத் தலைவர், "எமது மாகாண சபையின் முன்பள்ளி நியதிச் சட்டத்தின் மூலம் இவற்றைக் கட்டுப்படுத்த முடியும். நியதிச் சட்டம் மொழி பெயர்ப்பினால் தாமதமாகிவிட்டது. விரைவில் நடைமுறைக்கு வரும். அப்போது இந்த விடயங்கள் சீர் செய்யப்படும்" - என்றார். (வ-5)


## மரண அறிவித்தல்

### பொன்னர் மகாலிங்கம்



சிவரியோடை, கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட பொன்னர் மகாலிங்கம் (22.06. 2016) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னர்-பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம்-தங்கம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், திரவியத்தின் பாசமிகு கணவரும், வசீகரன் (சந்திரன்) சசிகரன் (பிரான்ஸ்), மதிவதனி (பிரான்ஸ்), ஜெகவதனி, தயவதனி, நவகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற இராஜகுலசிங்கம் மற்றும் தயாபரன், றெஜினா ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், வள்ளி, சாந்தி, சின்னமணி, வள்ளிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கந்தசாமி, தங்கராஜா (பிரான்ஸ்), சிவபாதம், அருள்ஞானம், இரத்தினம், சந்திரா ஆகியோரின் மைத்துனரும் நிதுஷன், ஜஸ்வின், சோனியா (பிரான்ஸ்) ஜம்போல் (பிரான்ஸ்) டவித் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2016) வெள்ளிக்கிழமை புதிய செம்மணி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு.
0772120 764

தகவல்:
குடும்பத்தினர்.

(J/2376)(10.17)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை மார்க்கண்டு (JP)

(சமாதான நீதிவான், உரிமையாளர், ஆஞ்சநேயர் குறூப் திருமணசேவை , மல்லாகம், மீசாலை)



கண்டி வீதி, மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிட மாகவும், ஏழாலை மத்தி ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மார்க்கண்டு நேற்று (23.06. 2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான வேலாயுதம் ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், புஸ்பமலரின் அன்புக் கணவரும், கருணாநிதி (யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்), ஆதவன் (முன்னாள் ஊழியர், அக்றிக்கோ நிறுவனம்), நேரு (ஆசிரியர், யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி), இந்திரா காந்தி, சீமாட்டி (ஆசிரியர், யாழ். புன்னாலைக் கட்டு வன் சித்திவிநாயகர் பாடசாலை), ராஜீவ்காந்தி (கட்டார்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜீவஸ்காந்தன் (முன்னாள் கியூடெக் கரித்தாஸ் உத்தியோகதத்தர்), கிருபாஜினி, ஜெகனேஸவரி (பிரதேச சபை, கொடிகாமம்), சிவகாந்தன் (சிவா), நிர்மலா, நித்தியா ஆகியோரின் பாசமிகு மாமனும், வேனுஜன், விசாகன், தஸ்மி, கீர்த்தனன், காருண்ஜா, பிரணவி, மாருதி, கம்சிகா, தட்சயன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, குழந்தைவேலு (செட்டியார்), சிதம்பர நடராசா மற்றும் இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2016) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை மத்தி,
ஏழாலை. 077 351 7784

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

### பொன்னுத்துரை பரமநாதன்

(முன்னாள் ஸ்ரீ தேவி அச்சக உரிமையாளர்)



நல்லூரைப் பிறப்பிடமாகவும் யமுனா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை பரமநாதன் நேற்று (23.06.2016) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முத்துலட்சுமி மற்றும் கமலலட்சுமி, மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மதிவதனா, விஷ்ணுதாசன், விஷ்ணுகலா (சுவிஸ்), கேமபாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தகுமார் (சுவிஸ்), நந்தபாலன், சத்தியவதனி, சத்தியசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்சிகா, கம்சிகா, கனிசிகா, துவேனுஜன், அக்ஷயன், பிரதீஸ், கனிஷா, யதுர்சன், சஞ்சீவ், சுபகீதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

40,யமுனாவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(J/2374)

தகவல்:
குடும்பத்தினர்.

077 729 3676, [illegible]

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 07 1947



இறப்பு 23 06 2016

### திருமதி. எலிசபெத் அன்ரனி சைமன்

(மாதகல்)

மாதகலை பிறப்பிடமாகவும் வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. எலிசபெத் அன்ரனி சைமன் (நேசம்) அவர்கள் 23.06.2016 நேற்று வியாழக்கிழமை காலமானார். இவர் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை, அன்னம்மா தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்ற அன்ரனி சைமன் அவர்களின் அன்பு மனைவியும்,காலஞ்சென்றவர்களான இம்மானுவேல் யோசப்,ருபி தம்பதிகளின் மருமகளும்,எக்னஸ் அமல்ராஜ்,ஆன் மஞ்சுலா காலஞ்சென்ற ஆனந் விமல்ராஜ், ஜோன் சர்மிளா ஆகியோரின் தாயாரும் இவோன் மெறிற்றா,பற்றிக் யேசுரட்ணம், ஹென்றி பிலிப்பையா ஆகியோரின் மாமியாரும்,காலஞ்சென்ற யோசப் அன்ரன், மரிஸ்ரலா மேரி விற்றுவார்,அலெக்ஸ்சான்டர்,பற்றீசியா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற கிறிஸ்ரி,ஜெயம்,பிரான்சிஸ்,சாலிவில்விரட், ருக்குமனி,எட்வின், மதுரம்,சிரோன்,ஜீவம், வரதன் ஆகியோரின் மைத்துனியும் ஜனலின், ஏஞ்சலின், லவ்வின்,அஸ்லிவர்சன், ஆன்ரனிவர்ணயா,அன்ரோ ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக இன்று 24.06.2016 தொடக்கம் வத்துளை மகிந்த மலர்ச்சாலையில் (காலை 8.30 – இரவு 8.30) வைக்கப்பட்டு வத்தளை அன்னம்மாள் றோ.கத்தோலிக்க சேமக்காலையில் 26.06.2016 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: அமல்ராஜ் சைமன் (மகன்) - 0770 203009 / 0777 516045


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதியில் ஆர்ஜென்ரீனா வெளியேறியது அமெரிக்கா



அமெரிக்காவில் நடைபெற்றுவரும் கோப்பா அமெரிக்கா கால்பந்து தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் மெஸ்ஸியின் தாக்கத்தால் அமெரிக்காவை வீழ்த்தி, இறுதியாட்டத்துக்கு முன்னேறியது ஆர்ஜென்ரீனா.

ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே மின்னல் வேகத்தில் செயற்பட்ட ஆர்ஜென்ரீனா அணி லாவேஸியின் உதவியால் மூன்றாவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவு செய்தது. 32ஆவது நிமிடத்தில் நான்கு அமெரிக்கா வீரர்களின் தடைகளைத் தகர்த்து, பாம்புபோல் வளைந்து சென்று மெஸ்ஸி ஆர்ஜென்ரீனாவின் இரண்டாவது கோலையும் பதிவுசெய்தார். இந்தக் கோல் ஆர்ஜென்ரீனாவுக்காக மெஸ்ஸியின் 55ஆவது கோலாகும். தற்போது அந்த அணிக்காக அதிக கோல்களை பதிவு செய்தவர் மெஸ்ஸியே.

இடைவேளைக்குப் பிறகு ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்துக்கு எல்லாம் ஆர்ஜென்ரீனா 3 ஆவது கோலை அடித்தது. 88 ஆவது நிமிடத்தில் ஹிகுவெய்ன் உதவியுடன் 4 ஆவது கோலை அடித்த ஆர்ஜென்ரீனா முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம)

## மாகாண மட்ட பூப்பந்தாட்டம்

கரணவாய், ஜூன் 24

விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்படும் இருபாலாருக்குமான மாகாண மட்ட பூப்பந்தாட்டத் தொடர், மன்னார் பொது விளையாட்டரங்கின் உள்ளக அரங்கில் நாளை இடம்பெறவுள்ளது. வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் தலா ஒரு அணியே தொடரில் பங்குபற்ற முடியும். ஆண்கள் பிரிவில் 5 அணிகள், பெண்கள் பிரிவில் 5 அணிகள் என மொத்தமாக 10 அணிகள் கலந்து கொள்ளுகின்றன. (ம-108)


## ஸ்பெய்னை வீழ்த்தியது குரோசியா

நடைபெற்றுவரும் யூரோ கிண்ணத் தொடரில் ஸ்பெய்னை வீழ்த்தி அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது குரோசியா.

யூரோ கிண்ணத் தொடர் பிரான்ஸில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் ஸ்பெய்னும் குரோசியாவும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 7ஆவது நிமிடத்தில் ஸ்பெய்னின் அல்வரோ மொராட்டா முதல் கோலைப் பதிவு செய்து முன்னிலை வழங்கினார். ஆனால், முதலாவது பாதி முடியும் நேரத்தில் குரோசியாவின் நிக்கொலா கலினிச் பதில் கோலைப் பதிவுசெய்ய 1:1 என்று சமநிலையில் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 87ஆவது நிமிடத்தில் பெரிசிச்சால் பெறப்பட்ட கோல் குரோசியாவுக்கான வெற்றிக் கோலாக மாறியது. (ம)

## வென்றது றோயல்

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் றோயல் அணி வெற்றிபெற்றுள்ளது. அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் றோயல் அணியை எதிர்த்து பாரதி அணி மோதியது. இதில் ஊரெழு றோயல் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



## போர்த்துக்கல்— ஹங்கேரி ஆட்டம் சமநிலையில்

யூரோ கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற போர்த்துக்கல், ஹங்கேரி அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

ஆட்டத்தின் 19ஆவது நிமிடத்தில் ஹங்கேரி வீரர் கிரா முதல் கோலைப் பதிவு செய்தார். 42ஆவது நிமிடத்தில் நனியின் மூலம் பதிலடி கொடுத்தது போர்த்துக்கல். 1:1 என்று முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியின் 47ஆவது நிமிடத்தில் ஹங்கேரி வீரர் இரண்டாவது கோலைப் பதிவு செய்து, தனது அணியின் ஆதிக்கத்தை மீண்டும் தலைதூக்கச் செய்தார். 50 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கலின் இரண்டாவது கோலைப் பதிவு செய்தார் றொனால்டோ. 55 ஆவது நிமிடத்தில் மீண்டும் ஹங்கேரி. 62 ஆவது நிமிடத்தில் றொனால்டோ பதிலடி. நிலமை 3:3. வேறெந்த கோல்களும் பதிவாகவில்லை. ஆட்டம் சமநிலை கண்டது. (ம)

## அரை மரதன் நாளை

கரணவாய், ஜூன் 24

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான இருபாலாருக்குமான மாகாண மட்ட அரை மரதன் ஓட்டப்போட்டி நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கு முன்பாக காலை 6 மணிக்கு ஆரம்பமாகும் இந்தப் போட்டி, 21 கிலோமீற்றர் தூரமுடையதாக அமையும். இதில் பங்கு பற்றும் போட்டியாளர்களை குறித்த நேரத்துக்கு சமுகமளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-108-422)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான உடல்நல வேலைத்திட்டப் போட்டியில் 17வயது ஆண்கள் பிரிவில், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி முதலிடத்தைப் பிடித்துள்ளது. இரண்டாமிடத்தை இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியும், மூன்றாமிடத்தை தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய அணியும் தமதாக்கின. (ம-422-23)

# பிரதேச செயலக மெய்வன்மை; தெல்லிப்பழை சம்பியனானது

கரணவாய், ஜூன் 24

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் ஒட்டுமொத்தப் போட்டிகளின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெற்று தெல்லிப்பழை பிரதேச செயலகம் சம்பியனாகியது.



பிரதேசசெயலகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன. ஒட்டு மொத்தமாக 105 புள்ளிகளைப் பெற்று தெல்லிப்பழை பிரதேச செயலகம் சம்பியனானது. நல்லூர் பிரதேச செயலகம் 95 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பருத்தித்துறை பிரதேச செயலகம் 91 புள்ளிகளைப்பெற்று மூன்றாமிடத்தையும் யாழ்ப்பாணப் பிரதேச செயலகம் 89.5 புள்ளிகளைப் பெற்று நான் காமிடத்தையும் உடுவில் பிரதேச செயலகம் 68.5 புள்ளிகளைப் பெற்று ஐந்தாமிடத்தையும் கோப்பாய் பிரதேச செயலகம் 57 புள்ளிகளைப் பெற்று ஆறாமிடத்தையும் சங்கானை பிரதேச செயலகம் 34 புள்ளிகளைப் பெற்று ஏழாமிடத்தையும் கரவெட்டி பிரதேச செயலகம் எட்டாமிடத்தையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஒன்பதாவது இடத்தையும் சாவகச்சேரி பிரதேச செயலகம் பத்தாமிடத்தையும் தமதாக்கின. (ம-108-422)

# வலைப்பந்தாட்டத்தொடர் போட்டிகள் விரைவில்

யாழ்ப்பாணம், ஜூன் 24

**அரியாலை சனசமூக நிலையத்தின் தொடர்**

அரியாலை சனசமூக நிலையத்தின் 68ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியில் வலைப்பந்தாட்டத் தொடர் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் ஜூலை மாதம் 2ஆம், 3ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் தமது பதிவுகளை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்தனர்.

**இமையாணன் மத்தியின் தொடர்**

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் ஜூலை மாதம் 7ஆம், 8ஆம் திகதிகளில் வலைப்பந்தாட்டத் தொடரொன்றை நடத்த திட்டமிட்டுள்ளது.

பாடசாலை அணிகள், விளையாட்டுக் கழக அணிகள் என இரு பிரிவாக முன்னெடுக்கப்படவுள்ள இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் அணிகள் தமது பதிவினை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-422-23)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 24

**யங்ஹென்றிஸ் வி.க. தொடர்**

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.

**ஆவரங்கால் மத்தியின் கரப்பந்தாட்டத் தொடர்**

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அணியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந் தன் அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வொலிகிங்ஸ் அணியை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி அணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவ ஜீவன்ஸ் அணியை எதிர்த்து தோப்பு வாலிபர் அணி மோதவுள்ளது.

**தாச்சிச் சங்கத்தின் தொடர்**

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை காந்தி சனசமூக நிலைய மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் ஆலடி சிந்து அணியை எதிர்த்து அளவெட்டி பாரதி அணி மோதவுள்ளது. இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுவில் உதயசூரியன் அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி அணி மோதவுள்ளது. (ம-422-23)

# ஈழச் சிறுவன் உலகச் சம்பியன்



இலங்கையைச் சேர்ந்த அகிலன் கருணாகரன் என்ற கராத்தே வீரர், நடப்பு வருடத்துக்கான உலக சம்பியன் பட்டத்தை வென்று சாதனை படைத்தார்.

அயர்லாந்தின் டப்ளின் நகரில் கடந்த 15ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை உலக கராத்தே தொடர் நடைபெற்றது. இதில் 36 நாடுகளில் இருந்து 2ஆயிரத்து 254 வீரர் வீராங்கனைகள் கலந்துகொண்டனர். 66 போட்டியாளர்கள் பங்கேற்ற குமித்தேப் பிரிவில் கலந்துகொண்ட வல்வையைச் சேர்ந்த அகிலன் கருணாகரன் தங்கப் பதக்கத்தை தனதாக்கினார். இவர் தற்போது பிரித்தானியாவில் வசித்து வருகிறார். (ம)

# சிறந்த மெய்வன்மை வீரனாக ஊர்காவற்றுறையின் தனுசன்

கரணவாய், ஜூன் 24

யாழ். மாவட்டத்தின் சிறந்த மெய்வன்மை வீரராக ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே.தனுசனும், சிறந்த மெய்வன்மை வீராங்கனையாகத் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஏ.அபர்ணாவும் தெரிவானார்கள்.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள் நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றன. உயரம் பாய்தலில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.தனுசன் 1.92 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து நடப்பு வருடத்துக்கான சிறந்த மெய்வன்மை வீரர் என்ற பட்டத்தை தனதாக்கிக் கொண்டார். முப்பாய்ச்சலில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஏ.அபர்ணா 10.59 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து சிறந்த மெய்வன்மை வீராங்கனையாகத் தெரிவானார்.

சுவட்டு நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை ஆண்கள் பிரிவில் நல்லூர் பிரதேச செயலகத்தை சேர்ந்த கே.சதீசன் 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் குறித்த தூரத்தை 53.2 செக்கன்களில் அடைந்து 748 புள்ளிகளைப் பெற்று சிறந்த சுவட்டு வீரனாகத் தெரிவானார். பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜெ.அனிதா 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 14.3 செக்கன்களில் இலக்கை அடைந்து 588 புள்ளிகளைப் பெற்று சிறந்த சுவட்டு வீராங்கனையாகத் தெரிவானார். (ம-422-108)



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டி யாழ். மத்திய கல்லூரியில் நேற்று நடைபெற்றது. இதில் தீவக கல்வி வலயத்தைச் சேர்ந்த கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது. வெள்ளிப்பதக்கத்தை வேம்படி மகளிர் கல்லூரியும் வெண்கலத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரியும் தமதாக்கின. வெற்றிக்களிப்பில் கரம்பன் சிறியபுஸ்பம் மகளிர். (ம-23-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எறிபந்தாட்டச் சங்க ஆரம்பக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ். மாவட்ட எறிபந்தாட்டச் சங்க ஆரம்பக் கூட்டம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. எறிபந்தாட்டத்தில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

(ம-422)

# ஆனையிறவில் கிரிக்கெட் மைதானம்: விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவிப்பு



ஆனையிறவுப் பகுதியில் சர்வதேச தரமுடைய கிரிக்கெட் மைதானமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்து வருவதாக விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதம் ஒன்றின் ஒரு பகுதியாகவே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். “மைதானத்துக்குரிய காணியை தேர்வு செய்யும் நடவடிக்கையை இலங்கை கிரிக்கெட் சபை முன்னெடுத்து வருகிறது. காணி உறுதியானதும் மைதானம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும். வடமாகாணத்தில் கிரிக்கெட் சங்கங்களை நிறுவும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாது கிளிநொச்சியில் உள்ளரங்கு ஒன்றும், நீச்சல் தடாகம் ஒன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளன” என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## இலங்கை – இங்கிலாந்து 2ஆவது ஆட்டம் இன்று

இலங்கை – இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

நடைபெற்று முடிந்த முதலாவது ஆட்டம் இரு அணிகளுக்கும் வெற்றிதோல்வி இல்லாமல் முடிவடைந்த காரணத்தினால் இந்த ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமையுமென்பதில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. (ம)



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டி யாழ். மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியினர் மேற்கொண்ட சாகசங்கள். (ம-23)

# தீவுகள் - தென்னாபிரிக்கா இறுதிக்குச் செல்வது யார்?



ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளும் தென்னாபிரிக்காவும் இன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளன. இந்த முத்தரப்புத் தொடரில் ஒவ்வொரு அணியும் மற்றைய அணியுடன் தலா மூன்று முறை மோதவேண்டும். ஆஸ்திரேலியா ஏற்கனவே இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றுவிட்ட நிலையில் தென்னாபிரிக்கா இறுதிக்குச் செல்லும் மற்றைய அணியாக அமையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்னாபிரிக்கா, தீவுகள் இரண்டும் தலா 5 ஆட்டங்களில் விளையாடியுள்ளன. தென்னாபிரிக்கா 12 புள்ளிகளையும், மேற்கிந்தியத் தீவுகள் 8 புள்ளிகளையும் பெற்றுள்ளன. லீக் சுற்றில் இந்த இரு அணிகளுக்கும் இடையில் இன்று நடைபெறவுள்ள ஆட்டமே எஞ்சியுள்ளது. தென்னாபிரிக்கா வெற்றிபெற்றால் அந்த அணி இறுதிக்குச் செல்வது உறுதி. தீவுகள் சாதாரணமான ஓர் வெற்றியைப் பதிவுசெய்தால் இரு அணிகளும் 12 புள்ளிகளையே பெறும். எனவே ரண்ரேட் அதிகம் வைத்துள்ள தென்னாபிரிக்கா இறுதிக்குச் செல்லும். தீவுகள் இறுதிக்குச் செல்ல வேண்டுமாயின் ரண்ரேட்டையும் கவனித்து பெரியதொரு வெற்றியைப் பெறவேண்டும். (ம)

# டோனிக்கு சஞ்சய் புகழாரம்

சிம்பாப்வேக்கு எதிரான ஒரு நாள், ரி-20 தொடர்களை இந்திய அணி வென்றமைக்கு டோனியின் தலைமைத்துவம் முக்கிய காரணம் என்று அணியின் இடைக்காலப் பயிற்சியாளரான சஞ்சய் பங்கர் தெரிவித்தார். குறிப்பாக இறுதி ரி-20 ஆட்டத்தை வைத்து அவர் டோனியைப் புகழ்ந்து தள்ளியுள்ளார்.

ஹராரேயில் நடந்த கடைசி ரி-20 ஆட்டத்தில் இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி 6 இலக்குகளை இழந்து 138 ஓட்டங்களையே எடுத்தது. பதிலுக்கு களமிறங்கிய சிம்பாப்வே 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்து 135 ஓட்டங்களையே எடுத்திருந்தது. 138 ஓட்டங்கள் என்ற குறைந்த இலக்குக்குள் சிம்பாப்வேயை கட்டுப்படுத்த டோனியின் களத்தடுப்பு வியூகங்கள்தான் காரணம் என்று சஞ்சய் குறிப்பிட்டுள்ளார்.

“தலைமைத்துவத்தில் டோனி சிறப்பாகச் செயற்படுகிறார். இதில் சிறிதும் சந்தேகமில்லை. அவரது முடிவுகளும் களத்தடுப்பு வியூகங்களும் வியக்க வைக்கின்றன. குறிப்பாக மூன்றாவது ரி-20 ஆட்டத்தில் சிம்பாப்வே துடுப்பெடுத்தாடியபோது சிபன்டாவின் அதிரடியால் 8 பந்துப் பரிமாற்றங்களில் 50 ஓட்டங்களைக் குவித்திருந்தது. அந்த அணியினரிடம் 9 இலக்குகள் கைவசமிருந்தன. நான் நம்பிக்கையை இழந்திருந்தேன். இத்தகைய நிலையிலிருந்து மீண்டு வந்து வெற்றிபெறுவதென்பது சாத்தியமற்றதாய் எண்ணினேன். ஆனால் டோனியிடம் பதற்றம் இருக்கவில்லை. களத்தடுப்பு வியூகங்களை கச்சிதமாக அமைத்தார். பும்ராவை சிறப்பாகப் பயன்படுத்தினார். அவரின் திட்டங்களாலேயே இந்த வெற்றி கிடைத்தது” என சஞ்சய் மேலும் தெரிவித்தார். (ம)



போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
புதலை மாத பரீட்சை களை மையமாக கொண்ட வகுப்புக்கள்
SLEAS
பிரிவு I
சனி, ஞாயிறு
10.00 → 4.00 மணிவரை
பிரிவு II
திங்கள் வெள்ளி
பி.ப 4.45 → 6.45
Customs
சனி, ஞாயிறு
01.00 → 5.00
G.S/ சமுர்த்தி
சனி 01.00 → 4.30
சட்டமாணி
ஞாயிறு 02.00 மணி
Auditor
கணக்காய்வாளர்
ஞாயிறு 09.00 → 4.00
யாழ்ப்பாணக்கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
T.P: 0766 883394
0212223382

# எஞ்சியது ஏமாற்றமே: நிட்னியின் ஆதங்கம்

இளம் இந்திய அணியிடம் ரி-20 தொடரைப் பறிகொடுத்த பிற்பாடு இந்தியா சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஒட்டுமொத்த தொடரின் அடிப்படையில் தனக்கு ஏமாற்றமே எஞ்சியதாக சிம்பாப்வே அணியின் பயிற்சியாளரான நிட்னி தெரிவித்தார்.



இந்தியா சிம்பாப்வே அணிகளுக்கு இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரும் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரும் நடைபெற்றன. ஒருநாள் தொடரை 3:0 என்று கைப்பற்றிய இந்திய அணி, ரி-20 தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. ரி-20 தொடரின் முதலாவது ஆட்டத்தை சிம்பாப்வே அணி வென்றிருந்தது. ஆனால் அடுத்த இரு ஆட்டங்களிலும் அந்த அணி தோல்வியடைந்து தொடரையும் பறிகொடுத்தது. இந்த நிலையிலேயே நிட்னி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“இந்திய அணியை இந்தத் தொடர்களில் வீழ்த்த முடியும் என்றே கருதினேன். ஏனெனில் டோனியைத் தவிர அந்த அணியில் அனுபவம் என்ற பேச்சுக்கு இடமில்லை. ரி-20 தொடரின் முதல் ஆட்டத்தில் வெற்றி பெற்ற பிற்பாடு கிண்ணத்தை வெல்ல முடியும் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால் அடுத்த இரு ஆட்டங்களிலும் நாம் தோல்வியடைந்துள்ளோம். ஒட்டுமொத்த தொடர்களையும் வைத்துப் பார்க்கின்றபோது எமக்கு ஏமாற்றமே மிச்சமாக உள்ளது” என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.